
# பழந்தமிழில் கல்விச் சிந்தனை

கலாநிதி முருகு தயாநிதி




குமரன் புத்தக இல்லம்

பழந்தமிழில் கல்விச் சிந்தனை

# பழந்தமிழில் கல்விச் சிந்தனை


கலாநிதி முருகு தயாநிதி
BA, PGDE, MA, Med, MPhil, Ph.D, SLPS
சிரேஷ்ட விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம



வெளியீடு
சோபிஜயஹரி

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பழந்தமிழில் கல்விச் சிந்தனை |
| ஆசிரியர் | : | முருகு தயாநிதி |
| பதிப்புரிமை | : | 2018 முருகு தயாநிதி |
| வெளியீடு | : | சோபிஜயஹரி |
| அச்சு | : | குமரன் புத்தக இல்லம்<br>39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06<br>தொ. பே. 0112 364550,<br>மி. அஞ்சல். kumbhlk @gmail.com |
| ISBN | : | 978-955-35603-1-5 |
| விலை | : | 400.00 |

| | | |
|---|---|---|
| Title | : | Palanthamilil Kalvich Chinthanai |
| Edited by | : | Murugu Thayanithy |
| Copyright | : | 2018 Murugu Thayanithy |
| Published by | : | Shopiyayahari |
| Printed by | : | Kumaran Book House<br>39, 36th Lane, Colombo -6,<br>Tel. - 0112 364550,<br>E.mail : kumbhlk@gmail.com |
| ISBN | : | 978-955-35603-1-5 |
| Price | : | 400.00 |

கல்வியின் பெறுமதியறிந்து

அதனைக் கௌரவித்து ஊக்கப்படுத்தும் என்னிலும்

மேலான எனது கிராமத்து உறவுகளுக்கும்

கல்விச் சமூகத்திற்கும் இந்நூல்

சமர்ப்பணம்

# அணிந்துரை

இலங்கையின் கல்விப்புலத்தில் குறிப்பாகப் பாடசாலைக் கல்விச் செயன் முறையில் தேசிய கல்வி நிறுவகத்தின் பங்கும் பணியும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இந்த நிறுவகத்தில் தமிழ் மொழித்துறையில் பணியாற்றுபவர் கலாநிதி முருகு தயாநிதி. இவர் பாடசாலையில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றி பின்னர் தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்துள்ளார். இந்த நிறுவகத்தில் தமது ஆளுமையினை மேம்படுத்துவதன் வாயிலாக தாம் பணியாற்றும் துறையின் செயற்பாடுகளை வினைத்திறனுடன் இயக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில் கலாநிதி முருகு தயாநிதி தமது பாடசாலை அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டு கட்டுரைத் தொகுதி ஒன்றினை வெளியிட முன் வந்துள்ளார். அவரின் ஆக்க முயற்சிகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பது எமது பணியாகும். இவரின் முயற்சியை ஊக்கப்படுத்துவதன் மூலம் அவரின் எதிர்கால ஆக்கங்கள் சிறப்பாக அமையுமென நினைக்கின்றேன்.

கல்வி மனிதவரலாற்றின் முக்கிய இடத்தில் உள்ளது. பண்டைக்காலம் முதற் கொண்டு அதன் பரிணாமம் விரிந்த நிலையில் முன்கொண்டு செல்லப்படுகின்ற மையினை இன்றைய நிலையில் கண்டுகொள்ளமுடிகின்றது. கல்விப் போக்கின் அடிப்படையில்தான் இன்றையக் கல்வி அறிவுப் பொருளாதாரத்தினை அடையாளப் படுத்த முடிகின்றது. அதனை அடைவதற்காக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுவது அவசியமான பணியாகும். ஒழுக்கமுள்ள கல்வியினைப் பெறுவதற்கு சிறந்த கல்வி வழிகாட்டல்கள் வழிவகுக்கின்றன. அதற்காக ஆசிரியர்கள் தங்கள் தேடலை வேகப்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. தேடல் இல்லை என்றால் கல்வியில் பல தடங்கல்களைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பண்டையக் கல்வி பற்றிய ஆராய்ச்சிகள் இன்று குறைநிலையிலேயே உள்ளன. எனினும், ஒருசில ஆராய்ச்சிகள் இடம்பெற்ற போதும் அதன் வெளிப்

படுத்துகை நவீன கல்வியினை சார்ந்ததாக இல்லாமல் இருப்பதனைக் கண்டு கொள்ளமுடிகின்றது. இவர் பழந்தமிழில் உள்ள கல்விச் சிந்தனைக்கும் நவீன கல்விக்குமான இடைவெளியினைக் காட்டி, பண்டைய தமிழ்க் கல்வியில் இருந்தே நவீன கல்வி மூழ்கின்றமையினை எடுத்துக் காட்டுக்களுடன் முன்வைக்கின்றார். இது ஒரு முக்கியமான திருப்பு முனையாகும். நவீன கல்விதான் எல்லாமே என்ற நிலையில் இருக்கின்ற கல்வி உலகுக்கு இவருடைய பண்டைக்கல்வி பற்றிய எண்ணக்கரு வியத்தகு செய்திகளை வழங்கி நிற்கின்றன. இவ்வாறான தேடலுக்கு இவர் தமிழ் பாடத்திலும் கல்விப் புலத்திலும் கொண்ட அதிக ஈடுபாடே காரணமாக அமைகின்றது என எண்ணுகின்றேன்.

சங்ககாலத்தில் எழுந்த இலக்கியங்கள் அகத்தினை, புறத்தினை என்ற ஒழுக்கங்களை முன்னிலைப்படுத்துகின்றது. இவற்றின் வழி காதல், வீரம், போர், கொடை என்ற நிலையில் அதன் பாடுபொருள் அமைந்திருந்தன. அதற்கு ஏற்ப இலக்கியங்களும் அகத்திணை இலக்கியங்கள், புறத்தினை இலக்கியங்கள் என்று வகுக்கப்பட்டிருக் கின்றன. இந்த இலக்கியங்களில் புறநாநூற்றில் நூல் போர், வீரம், கொடை என்ற நிலையில் அதன் பேசுபொருள் அமைந்திருந்த போதும் அதன் மற்றுமொரு பிரதான உள்ளீடாகக் கல்வி அமைந்திருக்கிறது. அக்கால அரசர்கள் போருக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்களோ அதன் அளவு கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தி ருக்கின்றார்கள் என்பது இங்கு காட்டப்படுவது உண்மையிலே வியப்பினைத் தருகின்றது. நாம் இன்று தண்டனை பற்றிப் பேசுகின்றோம். ஆனால், புறநாநூறு அதனைப் பேசுபொருளாகக் கொண்டிருந்தது. தலையலங்காரத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செலியன் மாபெரும் வீரனாக இருந்தபோதும் அவன் கல்விக்குப் பெரும் மதிப்பளித்தி ருக்கின்றான். அத்தோடு தமிழ் எழுத்துக்களை இலகுவாகக் கற்பதற்கான முயற்சியினைக் காட்டியிருப்பதும் சிறப்பான தேடலும் சிந்தனையுமாகும். இதனை ஒவ்வொரு ஆசிரியரும் பின்பற்றிக் கற்பிப்பது சிறப்பைத் தரும் என எண்ணுகின்றேன்.

கல்வியின் மூலம், பண்டைய தமிழ் இலக்கியங்களில் பொதிந்திருக்கின்றமை யினை நாம் வேதங்களில் இருந்து பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அதனைத் தொடர்ந்து தொல்காப்பியம், திருக்குறள், நன்னூல் முதலிய இலக்கியங்களில் ஆழமாக அடையாளப் படுத்தப்பட்டிருப்பதனை காணமுடிகின்றது. பொதுவாகவே இந்தக் கட்டுரைத் தொகுதியில் இட்பெறுகின்ற கட்டுரைகள் யாவும் வித்தியாசமான

எண்ணக்கருக்களைப் பிரதிபலித்து நிற்கின்றன. சிறப்பான தேடல்களின் மத்தியில் கல்விச் சிந்தனை என்பது பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பரிணமிப்பதனைக் அடையாளப்படுத்தி, நவீன கல்வி அதன் தொடர்ச்சி யாகவே இருக்கின்றமையினைக் காட்டுகின்றார். இவருடைய இத்தகைய முயற்சி பாராட்டத்தக்கது மட்டுமல்ல இன்றைய தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகவும் இருக்கின்றது. இவ்வாறாகக் கல்வியைத் தொடர்புபடுத்திக் காட்டி வெளிப்படுத்துகின்ற சிந்த னையினை இவருடைய கட்டுரைகளில் கண்டுகொள்ளமுடிகின்றது. இவ்வாறான ஆராய்ச்சிகள் தொடர வேண்டும். அவ்வாறு தொடரும்போது பண்டைய தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்ற கல்விச் சிந்தனைகளை மேலும் அடையாளப் படுத்தி வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான தேடல்கள் அடங்கிய ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வினை மேற்கொள்ளுகின்ற ஆய்வாளர்களுக்கு உறுதுணையாக அமையும். எனவே, இவர் இவ்வாறான கட்டுரைகளையும் ஆய்வு களையும் மேற்கொண்டு தமிழ் உலகுக்கு மேலும் தரவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி உ.நவரெத்தினம்**

# முகவுரை

சுருங்கிவரும் உலகுக்கு ஏற்ப கற்பித்தல் - கற்றல் முன்கொண்டு செல்லப்படுவது அவசியமானதாகும். கற்பித்தல் - கற்றல் சிறப்படைவதற்கு ஆசிரியர்களுடைய தேடலும் அதனோடிணைந்த முயற்சியும் அவசியமானதாகும். பாடவிடயங்களைத் தேடும்போது அவர்களுக்குள் ஒரு புத்துணர்ச்சியும் புதிய ஊக்கமும் உருவாகும். அந்தநிலை தொடரும்போது மேலும் மேலும் தேடவேண்டிய அவசியம் ஏற்படு கின்றது. அப்போது அவர் புதிய பதிய விடயங்களை அறிவது மட்டுமன்றி புத்து ணர்ச்சியும் பெறுகின்றார். அது அவருடைய புதிய தேடலுக்கு வழிசெய்கின்றது என்பதனை ஆய்வின் அடிப்படையில் கண்டுகொள்கின்றோம். புதிய தேடலும் புத்தாக்க உணர்வும் கொண்ட ஒருவராகவே ஆசிரியர் இருக்கவேண்டும். அப்போது தான் ஒரு விடயத்தினை மாணவர்களுக்குச் சரியாகவும் முரண்பாடற்ற நிலையிலும் முன்வைக்கமுடியும். எனவேதான், அறிவைப்பெறுதல் என்பது தேடலின் அடிப்ப டையில் இருக்கவேண்டும் என்ற கருத்து இன்றைய நிலையில் முதனிலை வகிக்கின்றது. அத்தகைய நிலையினை மேலும், வலுப்படுத்திப் பல்வேறு கோணங்களில் ஒவ்வொருவரும் சிந்திக்கமுடியும் என்பதனைக் இக் கட்டுரைகள் வாயிலாக உணரமுடியுமென எண்ணுகின்றேன்.

பண்டைத்தமிழர்களின் வாழ்வு வளமும் இவ்வாறுதான் இருந்ததென்பதனை விட அவர்களுடைய கல்வி பற்றிய சிந்தனை எவ்வாறான நிலையில் இருந்திருக் கின்றது என்பதனை இந்தக் கட்டுரைகள் அடையாளப்படுத்துகின்றன. பழந்தமிழர்க ளுடைய கல்விச் சிந்தனைகளின் சூழ்களிலே இன்றைய உலகின் கல்விச் சிந்தனைகள் தோய்ந்துள்ளமையினை ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைக் கப்படுகின்றது. ஆசிரியம், ஆசிரியர், மாணவர், கற்பித்தல் உத்தி, கல்வியின் தூண்கள், தண்டனை, கல்வியின் செல்நெறிகள் என்று பல்வேறு நிலைகளை இன்று உலகம் அறிமுகப்படுத்தி வருகின்றது. இவை அனைத்தும் பழந்தமிழில்

உள்ள கல்விச் சிந்தனைகளைவிட வேறேதும் இல்லை என்பதனைக் கண்டு கொள்ள முடிகின்றது.

சுவாமி விபுலாநந்த அடிகளும் கங்கையில் விடுத்த ஓலையும் - கல்வி பற்றிய ஒரு நோக்கு எனும் கட்டுரையில் விபுலாநந்தருடைய கல்வியின் ஆழமான போக்கு ஒப்பிட்டுக்காட்டப்படுகின்றது. கங்கையில் விடுத்த ஓலையால் அவர் வெறுமனவே நிலையாமைக் கருத்தினை மாத்திரம் முன்வைக்காமல் கல்வி கற்பதனால் உண்டாகும் பேறுகளைத் தெளிவாகவே காட்டமுனைகின்றார். வீரம் விளை நிலத்தில் கல்விச் சிந்தனையும் இன்றைய கல்வி நிலையும் (புறநானூற்றுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு) என்ற கட்டுரையில் சங்ககால மன்னனும் மக்களும் கல்வியைப் பெறுவதில் ஆர்வம் காட்டியமையும், மன்னன் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவமும் எடுத்துக்காட்டப்பட்டு, இன்றைய கல்விச் சிந்தனைக்கு எவ்வாறு சங்ககாலக் கல்விச் சிந்தனை வித்திட்டது என்பது விளக்கிக் காட்டப்படுகின்றது. தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் ஆட்சியும் மதுரைமா நகரின் இன்றைய கல்வி நிலையங்களும் என்ற கட்டுரையில் பாண்டியநெடுஞ்செழிய மன்னன் கல்விக்குக் கொடுத்த உயர்ந்த இடம் காட்டப்பட்டு இன்றைய காலத்தில் மதுரை நகரில் எழுச்சி பெற்றுள்ள கல்வி நிலையங்கள் பற்றியும் விளக்கிக்காட்டப்படுகின்றது. கல்வியின் பிரதான செல்நெறி களை தெளிவுபடுத்தும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் (தொல்காப்பியம், புற நானூறு, திருக்குறள், நன்னூல் அடிப்படையிலானவை) என்ற கட்டுரையில் இன்றைய கல்வியின் பிரதான செல்நெறிகள் எடுத்துக்காட்டப்பட்டு, கல்விக்கான மூலங்கள் தொல்காப்பியம், புறநானூறு, திருக்குறள், நன்னூல் ஆகிய இலக்கி யங்களில் பொதிந்திருந்தமையினை விளக்குகின்றது. கற்பித்தல் - கற்றலுக்கான மூலத்தைத் தெளிவுபடுத்திய தொல்காப் பியம்என்ற கட்டுரையில் தொல்காப்பியத்தன் வழி இன்றைக கல்விச் சிந்தனைகள் மூழ்கின்றமையினை விளங்கிக் கொள்ள முடிகின்றது. கற்பித்தல் - கற்றலுக்கான மூலத்தைத் தெளிவுபடுத்திய தொல்காப்பியம் என்ற கட்டுரையில் தொல்காப்பியத்தில் பொதிந்துள்ள கற்பித்தல் - கற்றலுக்கான முறைமையும், கல்விக்கான மூல சிந்தனையும் முன்வைக்கப்பட்டுள்ளன. வாழ்வை வெற்றிகொள்ளும் வள்ளுவனின் கல்விச் சிந்தனைகள் என்ற கட்டு ரையில் இன்றைய கல்வியின் பல்வேறு பரிமாணங்கள் விளக்கிக் காட்டப்படு கின்றன. மாணவர்களின் கற்றல் திறன்களை மேம்படுத்துதல் என்ற கட்டுரையில் திறன்களை எவ்வாறு இலகுவாகக் கற்கலாம் என்பது முன்வைக்கப்படுகின்றது.

தமிழ் எழுத்துக்களைக் கற்பதற்கான சிக்கல்களும் தீர்வுகளும் (இரண்டாம்மொழி - தமிழ் கற்கின்ற மாணவர்களை அடிப் படையாகக் கொண்டது) என்ற கட்டுரையில், இலகுவான முறையில் தமிழ் எழுத்துக்களைக் கற்பதற்கான வழிமுறை தெளிவு படுத்திப் பார்க்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஆய்வு நிலையில் நோக்கத்தக்கவை. பழந்தமிழர் கல்வி பற்றிய ஆய்வினை மேற்கொள்ளுகின்ற ஆய்வு மாணவர்களுக்கு இத்தகைய ஆய்வுக் கட்டுரைகள் பிரயோசனமாக அமையும் என எண்ணுகின்றேன்.

இந்த ஆய்வுக் கட்டுரைகள் இலங்கை, இந்தியா, மலேசியா முதலிய நாடுகளில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளாகும். சிதறிக்க டக்கும் நாற்பதுக்கு மேற்பட்ட மாநாட்டுக் கட்டுரைகளில் சிலவற்றை தமிழ் உலகம் வாசித்துப் பயன்பெற வேண்டும் என்பதற்காக புத்தகமாக வெளியிடுவதற்கு முன் வந்தேன். இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு அணிந்துரை எழுதிய மதிப்புக்குரிய கலாநிதி உ.நவரெத்தினம் அவர்களுக்கும், புத்தகத்துக்கான தலைப்பினை இவ்வாறு இட்டால் பொருத்தமாக இருக்கும் என்று வழிப்படுத்திய மதிப்புக்குரிய பேராசிரியர் இ.பேச்சுமுத்து அவர்களுக்கும், இன்றைய கௌரவிப்பு நிகழ்வினை ஏற்பாடுசெய்த அம்பிலாந்துறை ஆலய பரிபாலன சபையினருக்கும், எமது கிராம மக்களுக்கும், பலவழிகளில் ஒத்துழைத்த உறவுகளுக்கும், பன்னிப்பிட்டிய அச்சகத் தாருக்கும், மனைவி மக்களுக்கும் எனது நன்றிகள். இவற்றிற்கு மேலாக எந்த இடருமின்றி எல்லாமே சிறப்பாக அமைவதற்கு துணைபுரியும் எம்பெருமானுக்கு எல்லாம் வல்ல நன்றிகள்.

**முருகு தயாநிதி**

# பொருளடக்கம்


அணிந்துரை vi

முகவுரை ix

1. சுவாமி விபுலாநந்த அடிகளும் கங்கையில் விடுத்த ஓலையும் கல்வி பற்றிய நோக்கு 1

2. வீரம் விளைநிலத்தில் கல்விச் சிந்தனையும் இன்றைய கல்வி நிலையும் 8

3. தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சியும் மதுரை மாநகரின் இன்றைய கல்வி நிலையங்களும் 18

4. கல்வியின் பிரதான செல்நெறிகளைத் தெளிவுபடுத்தும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் 30

5. கற்பித்தல் - கற்றலுக்கான மூலத்தைத் தெளிவுபடுத்திய தொல்காப்பியம் 44

6. வாழ்வை வெற்றிகொள்ளும் வள்ளுவனின் கல்விச் சிந்தனைகள் 52

7. கற்றல் திறன்களை மேம்படுத்துதல் 59

8 தமிழ் எழுத்துக்களைக் கற்பதற்கான சிக்கல்களும் தீர்வுகளும் 69

## சுவாமி விபுலாநந்த அடிகளும் கங்கையில் விடுத்த ஓலையும் – கல்வி பற்றிய நோக்கு

தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்க கால கட்டமாகும். இருபதாம் நூற்றாண்டிலே தமிழ் இலக்கிய நெறியில் காணப்படும் சிறப்பியல்புகள் பலவற்றிற்குக் காலெடுத்துக்கொடுத்தது பத்தொன்பதாம் நூற்றாண்டு. இருபதாம் நூற்றாண்டுச் செய்யுள் இலக்கியத்திற் சுட்டக்கூடிய பண்புகளில் சில காத்திரமான முறையிலே தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கியதும் இக்காலகட்டத்திலேயாம். மேலும் இருபதாம் நூற்றாண்டிற் செல்வாக்குப்பெற்ற இலக்கியத்தின் பரிசோதனைக் களமாகத் திகழ்ந்தது பத்தொன்பதாம் நூற்றாண்டே யாகும். (பொ.பூலோகசிங்கம் ப:1) பன்மொழித் தேர்ச்சி பெற்ற சுவாமி விபுலானந்த அடிகள் தமிழ் நாட்டிலே ஒரு பாரதியைப் போலும், வட நாட்டிலே ஒரு விவேகானந் தரைப்போலும், தமது ஈழ வழ நாட்டிலே அதிலும் சிறப்பாகக் கிழக்கிலங்கையிலே ஒரு சமுதாயப் புரட்சியை உண்டாக்கியவர். (சுவாமி நடராஜாநந்தா ப : 29) சுவாமி விபுலாநந்தர் சிறந்த ஆளுமையும் உயர்ந்த பெறுமானங்களும் உடையவர். தமக்காகவன்றி பிறருக்காக வலிய முயற்சிகளை மேற்கொண்டவர். சமூதாயம் உயர வேண்டும் என்பதற்காக பெரும்பங்காற்றியவர். அவர் சமயத்தை அடிப்ப டையாகக் கொண்ட உயர்தரக் கல்வியே சிறந்த சஞ்சீவி எனக்கண்டு அத்திட்டத்தை செயற்படுத்தலானார். அவ்வாறான நிலையில் இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய பண்பிற்கமைய நிகரில்லா ஆக்கங்கள் பலவற்றைப் படைத்துள்ளார். அவற்றுள் கங்கையில் விடுத்த ஓலையும் ஒன்றாகும்.

விபுலாநந்த அடிகள் வாழ்ந்தகாலம் (1892-1847) ஆங்கிலேயருடைய ஆட்சியின் உச்சகட்டமாகும். அக்காலத்தில் காணப்பட்ட அடிமைத்தனத்தையும் அறியாமையையும் ஒளித்து பிறருக்கு நன்மை விளைவிக்க கூடியனவாக அவரு டைய, முத்தமிழ்ப் பணிகள், சமயப் பணிகள், கல்விப் பணிகள் யாவுமே மனித

மேம்பாட்டையே மேம்படுத்துவனவாயிருந்தன. விடுதலை வேட்கை உடையவராய் பாரதியாருடைய சிந்தனையைப் பரப்பிய அவர், 1933ஆம் ஆண்டு இந்திய தேசியக்கொடியினைத் தமது வீட்டில் பறக்கவிட்ட ஒரே பேராசிரியர். சுவாமியினுடைய நோக்கம் கல்வியால் எதனையும் அடையலாம், அத்தகைய கல்வி முழுமைக் கல்வியாக இருக்கவேண்டும். கல்வியின் பெறுமானங்கள் பற்றி விளக்குவதற்காக உற்ற நண்பன் கந்தசாமியினுடைய மறைவினை சாதகமாகப் பயன்படுத்துகின்றார். கற்றவர்கள் எந்த உலகத்திலும் மதிக்கப்படுகின்றார்கள் என்பதனால் யாவரையும் கற்றத் தூண்டுவதற்கு முனைகின்றமை அவருடைய கல்விச் சிந்தனையினையின் உயர் பெறுமானத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சுவாமி விபுலாநந்த அடிகளது கல்விச் சிந்தனை ஆழமானது, எளிமையானது, அது முழுமையானது. அவருடைய கல்வி பற்றிய அணுகுமுறை நடைமுறை வாழ்வுடன் ஒத்துச் செல்லத்தக்கது. கிரேக்க ஞானி பிளேட்டோ தமது "குடியரசு" எனும் நூலில் பயனற்ற கல்வி என்பது "எதிர்மறை வாயிலாக உண்மை நிலை யினை தரிசிக்க வைக்கும் மார்க்கம்" என்றார். ரூசோ கற்க வேண்டிய விடயம் பற்றி விளக்குமிடத்து 'மாறுபட்ட திசைகளினின்றும் உண்மையெனும் ஒரே குறிக்கோளை அடைய முயலும் இரு மார்க்கங்கள் சுட்டும் தத்துவங்கள் இவை" என்றார். சுவாமியினைப் பொறுத்த வரையில் பயனற்றது இதுவென்றும் பயனுள்ளது இதுவென்றும் இரண்டையும் இணைத்துக் கூறுவதாக உள்ளது." எழுத்துக்களும் பணிகளும் மனதைப் பக்குவப் படுத்தி உண்மையை உணர வைப்பதே கல்வியின் தலையாய நோக்கம்" என்பதனைப் பதஞ்சலி முனிவர் விளக்குகின்றார். அவர் வஞ்சகத்தினைக் காணவிரும்பவில்லை. நற்பண்புகள் இல்லாதிருப்பதனைக் கண்டார்.

கந்தசாமி பற்றிக் குறிப்பிடுமிடத்து, தென்பாண்டி நாட்டில் சோழ வந்தானூ ரைச் சேர்ந்தவர். சைவநெறியினைக் கசடறக் கற்று தேர்ச்சி பெற்றவர். சங்கச் செய்யுள்கள் குறிப்பிடுகின்ற அகம், புறம் என்கின்ற துறைகளைச் சிறப்பாகக் கற்று இறைவன் இல்லை என்று மறுத்துக் கூறுபவர்களுக்கு இறையிருப்பினை நிலை நாட்டும் பெரும் புலவன். பல நூல்களைக் கற்றதனால் எழுத்தினையும் கலை யினையும் சிறப்பாகக் கற்றிருந்தார். தமிழ் புலவர்கள் கூடியிருக்கின்ற அறிஞர் அவையில் சிறப்பெய்தி நிற்கின்ற அவர் பெரும் புலவராகவும் அன்பான குணம் உடையவராகவும் இருந்துள்ளார். சொல்வகை, சொற்றொகை, சொல்நடை ஆகிய

வற்றைச் சிறப்பாகக் கற்றதனால் சொல்லில் சிறப்பெய்தினானார். அத்தகைய அடிகளாரின் உற்ற நண்பனான கந்தசாமி உலக ஆசைகளைத் துறந்து மெய்ப் பொருளான இறைவனையே நாடிச்செல்பவர், தவ ஒழுக்கத்தினை மேற்கொண் டவர், அடிகளிடம் அளவில்லாத அன்பு கொண்டவர், சுவாமி அவர்கள் வடநாடு சென்றவுடன் அவருடன் கடிதத் தொடர்பு கொள்வதற்காக முகவரியினை விசாரித்து அறிந்து வைத்திருந்தார். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பு நோயினால் இறந்து போகின்றார். இவ்விழப்பினால் மனம் முறிந்த சுவாமி தமது கவலையினைப் போக்கிக் கொள்வதற்காக வட இந்தியாவில் உள்ள கங்கைக்கரைக்குச் செல்கின்றார். அவருடைய கல்வியின் தன்மை பற்றி விளக்கு கின்றார். இந்த நிலையில் நோக்கும்போது கந்தசாமி சிறந்த கல்வியலாளனாகவும், பண்பாளனாகவும் விளங்கியிருக்கின்றார். அவருடைய இழப்பு சுவாமி அவர்களது மனதை ஆறாத் தீயாக கட்டவிழ்த்திருக்கின்றது கங்கையில் விடுத்த ஓலை எனும் படைப்பு அவருடைய நண்பன் கந்த சாமி என்பவருடைய இறப்புப் பறிறியதாக இருந்தாலும் அவற்றினூடாக கல்வி பற்றிய சிந்தனைகளே வெளிப்படுவதனைக் காணமுடிகின்றது. ஒருவர் கற்ற கல்வி மறுமைக்கும் உதவும் என்பதோடு, கற்றவர்கள் தேவலோகத்தில் அங்கிகரிக்கப்படுகின்றார்கள் என்ற கருத்தினையும் முன்வைக்கத் தவறவில்லை.

**"அகநெகுமன் பினிலூறு முரைபகரும் பொருட்டோ**
**ஆய்ந்தசில கலைமுடிபு தேர்ந்துணரும் பொருட்டோ**
**முகவரிபெற் றோலைவிட முயன்றனன்பே ரன்பன்**
**மூதறிஞ னெனவெண்ணி யாதரமுற் றிருந்தேன்"**

'அகநெகுமன் பினிலூறு முரைபகரும் பொருட்டோ ஆய்ந்த சில கலைமுடிபு தேர்ந்துணரும் பொருட்டோ" என்பதனால் கந்தசாமியினுடைய கல்வியின் உயர்ந்த நிலை விளக்கப்படுகின்றது. அவ்வாறான ஒருவருடைய இழப்பு சுவாமியினுடைய உள்ளத்தினை உருக்கியிருக்கின்றது. அவர் தன் நண்பன் கந்தசாமி சிறந்த தமிழ் அறிஞர் என்பதனை பல பாடல்களில் குறிப்பிடுகின்றார். "கற்றாரைக் கற்றவரே காமுறுவர்" என்பதற்கு ஏற்ப இவருடைய தமிழ்த் திறமையினை நன்கு அறிந்தி ருந்தார் சுவாமி. அத்தகையவரை அவர் சந்தித்தது சிறப்புக்குரியது என்று குறிப்பிடத் தவறவில்லை. 'நல்லொழுக்கத்தையும் ஆளுமையையும் மனவலுவையும் தன்னம்பிக்கையை வளர்க்கும் கல்வியை விவேகானந்தர் வேண்டி நின்றார்". இந்த கல்விச் சிந்தனை சுவாமி விபுலாநந்த அடிகளாது கல்விச் சிந்தனையில்

பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனை கந்தசாமியின் இணைப்பின் ஊடாகக் காண்கின்றார்.

> **"கந்தசா மிப்பெயரோன் வேட்களத்தி லென்னைக்**
> **கண்டநா என்பெனுங் கயிறுகொண்டு பிணித்தான்**
> **அந்தநாண் முதலாக நட்புரிமை பூண்டோம்**
> **அண்மையில்யான் வடநாடு நண்ணியதை யறிந்தே"**

உபநிடதம் கூறுகின்ற முழுமைக் கல்வி பற்றிய சிந்தனையினைக் கொண்டவர் சுவாமி விபுலாநந்த அடிகள். அவ்வாறான கல்வியினைக் கற்றவர்கள் வாழ்க்கை யினை சிறப்பாக முன்கொண்டு செல்வார்கள். அவர்களை "சமநிலை ஆளுமை உடையவர்கள்" என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாறான தன்மை இல்லாதவர்கள் இன்பம் வரும்போது சந்தோஷமாக இருப்பார்கள். தமக்கு நிகரானவர் இல்லை யென்று பெருமை கொள்வார்கள். ஆனால், துன்பம் வருகின்றபோது மயக்கமெனும் சுழல்காற்றில் பட்டு துவண்டு கண்ணீர் சொரிவார்கள் இவர்கள் யாரென்றால் முழுமையான கல்வி பெறாதவர்கள் என்றார்.

சுவாமி விபுலாநந்த அடிகள் கங்கைக் கரைக்குச் சென்றதும் பல இயற்கைக் காட்சிகளைக் காண்கின்றார். அந்தக் காட்சிகள் யாவும் சுவாமிக்கு ஏதோ ஒரு படிப்பினையைத் கொடுப்பதனை அறியமுடிகின்றது. கங்கைக் கரையின் மறு கரையில் சுடுகாட்டு நரிகளின் அழுகுரல் கேட்கின்றன. சுவாமி இருக்கின்ற கரைப்பக்கமாக அலையில் அடிபட்ட குச்சுகள் எற்றுண்டு குவிந்து கிடக்கின்றன அலையால் இழுபட்ட குச்சியொன்று ஒவ்வொரு கணமும் அலைவரும்போது மேல் எழுவதும் கீழ் வீழ்வதுமாக இருக்கின்றது. மேலும், பகலோன் மெலிந்து மறைகின்ற காட்சி, தென்றலது பனித்தூறல், பத்தாம் நாள் சந்திரனுடைய வருகை என்ற இயற்கைக் காட்சிகள் என்பவற்றையும் காண்கின்றார். இந்த காட்சியினைக் கண்டசுவாமி அவர்கள் மனிதர்களுடைய வாழ்க்கை இவ்வாறுதான் என்பதனை உணர்த்தி, இன்பமும் துன்பமும் வாழ்க்கையில் மாறிமாறி வரும் என்பதனை உணர்த்துகின்றார். சிறந்த கல்வியைப் பெற்றவன் இவற்றினை இயல்பாக உணர்ந்து கொள்கின்றான் என்கின்றார்.

> **"இன்பவிளை யாட்டினிடை மேலெழுந்து குதிப்பார்**
> **எமக்குநிக ராரென்பா ரிருகணத்தி னுளத்தில்**
> **துன்பமுற மண்ணில்விழுந் திருகண்ணீர் சொரியச்**
> **சோர்ந்தழுவார் மயக்கமெனுஞ் சுழல்காற்றி லலைவார்"**

கந்தசாமியின் இழப்பு என்பது சுவாமி விபுலாநந்த அடிகளைப் பொறுத்தவரையில் கசடறக் கற்ற ஒருவருடைய இழப்பாகும். அவர் இருந்திருந்தால் தமிழுலகுக்குப் பல சேவைகளைச் செய்திருப்பார் என்பதனை அவர் உணர்ந்திருக்கின்றார். வெறுமனே அவருடைய உடலம் இழந்தமையினைப் பற்றிய கவலை அவருக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. கந்தசாமியினுடைய திறன் பற்றிய அவருடைய உள்ளீடுகள் அதனைத் தெளிவுபடுத்துகின்றன. அத்தகைய அறிவாளனின் நிலை பற்றிய உண்மையினைத் உலக மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, கங்கைக் கரையில் காணுகின்ற காட்சிகளைச் சான்றாகின்றார். அதற்காக கங்கையைப் பார்த்து, வானத்தைப் பார்த்து, சந்திரனைப் பார்த்து வினவி தானே ஒரு முடிவிற்கு வருகின்றார். அந்த முடிவு என்பது கல்வியின் உயர்ந்த பெறுமதியைத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, "வாழ்க்கைக்கான உண்மைக் கல்வியைக் கற்றவனுடைய மறுவாழ்க்கை சிறப்பெய்யும்" என்பதனை இந்தப் பாடல்களில் தெளிவுபடுத்துகின்றார். சிறந்த கல்விதனைக் கற்றவர்கள் பாணினி, தொல்காப்பியர், பதஞ்சலி வாழுகின்ற உலகில் வாழ்வார்கள் என்று சுவாமி விபுலாநந்த அடிகள் அவர்கள் உயர்ந்த பெறுமானத்தினை முன்வைப்பதோடு, அவர்கள் தேவ உலகில் வைக்கப்படுகின்ற உண்மையினை தெளிவுபடுத்துகின்றார். அதன்வழி சுவாமியி னுடைய நோக்கம் மற்றவர்களையும் கல்வி கற்கத் தூண்டுவதோடு, கற்பதனால் தான் சமுதாய உயர்ச்சி வரும் என்பதனையும் சூக்குமமாகத் தெளிவுபடுத்துகின்றார். கங்கையில் விடுத்த ஓலையினுடைய சாராம்சமும் சுவாமி விபுலாநந்த அடிகள் அவர்கள் சொல்லவந்த விடயமும் சொல்லுகின்ற முறைமையும் இப்பாடல்களாலே வெளிப்படுத்தப்படுகின்றது. அதாவது, கங்கையில் விடுத்த ஓலையின் சாரம்சத்தை இப்பாடல்களால் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார்.

**வருந்தித்தான் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ**
**மறுமையிலு முதவுமோ வான்மதியே யென்றேன்**
**திருந்துகல்வி யெழுமையுமே மார்ப்புடைத்தென் றுரைத்த**
**செம்மொழியைத் தேர்தியென வெண்மதியம் விடுக்க**

**மாணியென வாழ்க்கைமுற்று மிலக்கணநூல் பயின்றோன்**
**வானகத்து மதுபயில்வா னெனுமுண்மை தெளிந்தேன்**
**பாணினிதொல் காப்பியன்சீர்ப் பதஞ்சலிவா முலகு**
**படந்தனனென் நண்பனெனும் பான்மையினை யுணர்ந்தேன்**

**தோற்றுவதும் மறைவதுவும் தொல்லியல்பென் றுணரத்**
**துயரகன்ற தெனினுமன்புத் தொடரகலா மையினால்**
**மாற்றமொன்று முரையாது வான்புகுந்தாற் கோலை**
**வரைவலென அன்புபொதி வாசகங்க ளெழுதி.**

**அறிவற்றங் காக்குமெனு மறவுரையை யெழுதி**
**அறநெறியா லின்பமெய்து மமைதியையு மெழுதி**
**உறுநட்பு நிலைபெறுமென் றுறுதிப்பா டெழுதி**
**ஓதுவிபு லாநந்த னுரையிவையென் றெழுதி**

அறிவு எப்போதும் அறியாமையினை அழித்துவிடும் என்பதனையும் அறநெறியால் இன்பம் கிடைக்குமென்றும், ஒருவர் கொள்ளுகின்ற நட்பு எப்போதும் என்றும் நிலைபெறும் என்றும் தெளிவுபடுத்துகின்றார். அத்தகைய நிலையிலுள்ள கந்தசாமி தெய்வலோகத்தில் தெய்வம் வாழுகின்ற இடத்தில் தமிழ் வழங்கும் தெருவில் ஒரு மனையில் எந்தத் துன்பம் இன்றியும் வாழ்கின்றார் என்பதனைக் குறிப்பிட வருவதனால் அந்த நிலை கந்தசாமி பெற்ற கல்வியின் மகத்துவத் தினையும், ஒவ்வொருவரும் கற்க வேண்டிய தேவையினையும் ஏற்படுத்தி நிற்கின்றது. "அறிவற்றங் காக்குமெனு மறவுரையையெழுதி…." என்ற வரியினால் கல்வியைக் கற்பதனால் ஏற்படும் பயன் பற்றிய விளக்கம் உணர்த்தப்படுகின்ற தன்மையினை அவதானிக்க முடிகின்றது. அறிவாந்த கல்வியைக் கற்பதனால் அழிவு, அவமானம், குற்றம், கேடு, துன்பம், பொய், மறைவு, வறுமை போன்றவைகள் இல்லாமல் போகும் என்று கூறுவதனால் கல்வியினுடைய உயர்ந்த பெறுமானமும் முழுமைக் கல்வியினைப்பெற்ற கந்தசாமியினுடைய தன்மையும் கற்கவேண்டிய அவசியத் தையும் சுவாமி தெளிவுபடுத்துகின்றார்.

தொகுத்து நோக்குமிடத்து சுவாமி விபுலாநந்த அடிகள் கல்வியினுடைய சிறப்பினையும் கற்றவர் அடையும் மேன்மையினையும் தனது நண்பன் கந்த சாமியினுடைய இழப்பின் பின்னணியில் விளக்கமாகத் தருகின்றார். அதாவது, ஒவ்வெருவரும் வாழ்க்கைக்கான முழுமைக் கல்வியினைப் பெறுவதற்கு முயல வேண்டும் என்பதோடு, அத்கைய கல்வியால் வாழ்வை வெல்லலாம் என்பதனை தனது உயர்ந்த அறிவினால் தெளிவுபடுத்திக் காட்டுகின்றார். அதற்காக அவர் இயற்கையோடு ஒன்றிய பல எடுத்துக்காட்டுக்களை முன்வைப்பதனை அவதானிக்க முடிகின்றது. எனவே, கல்வியினுடைய சிறப்பினைத் தருகின்ற கங்கையில் விடுத்த ஓலை விபுலாநந்தருடைய ஆக்கங்களில் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

**சான்றாதாரங்கள்**

1. சற்குணம், எம் (மலர் ஆசிரியர்), அடிகளார் படிவமலர் (1969), சிலை நிறுவனக் குழுவினர் காரைதீவு.

2. பூலோகசிங்கம், பொ. (2002), தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழர்களின் பெரு முயற்சிகள், குமரன் புத்தக இல்லம்.

3. இராமகிருஷ்ணன், ப.வே. (1992), விபுலாநந்தரின் அடிச்சுவட்டில்.... கல்வி, சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை மட்டக்களப்பு.

4. சுவாமி நூற்றாண்டு நினைவு மலர்கள் - 1, 2, 3 (1992), சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை மட்டக்களப்பு.

5. உள்ளக்கமலம், (1992), சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை வவுனியா.

# வீரம் விளைநிலத்தில் கல்விச் சிந்தனையும் இன்றைய கல்வி நிலையும்

## (புறநானூற்றுப் பாடல்களை அடிப்படையாகக்கொண்ட நோக்கு)

சங்ககாலம் என்பது கி.மு காலந் தொடக்கம் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலமென வகுப்பது ஒரு வகை. இக்காலத்தில் முடியுடை மூவேந்தர்களும், பாரி, காரி, பேகன் முதலிய குறுநில மன்னர்களும் வாழ்ந்து வந்தனர். சங்க காலத்தில் வாழ்ந்த மக்களது வாழ்க்கை தனிச்சிறப்பு வாய்ந்தது. அவர்களுடைய வாழ்க்கை யோடு இணைந்ததாக தமிழ் மொழியின் தனிச்சிறப்பும் பிணைந்துள்ளது. பொருளி லக்கண அடிப்படையில் அவர்களது வாழ்க்கை அகம் புறம் என இருதிணை வடிவு கொண்டதாக அமைந்திருந்தது. அகத்திணைப் பொருள்களை அகத்திணை யியல், களவியல், கற்பியல், பொருளியல் என நான்கு இயல்களாக தொல்காப்பியர் தெளிவுபடுத்தியுள்ளார். அகமாவது ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கு ஒருவர் தத்தமக்கு புலனாக இவ்வாறு இருந்ததென கூறப்படாதாய் யாண்டும் உள்ளத்துணர்வால் நுகர்ந்து இன்பமுறுவதாம். இவ்வாறன்றி எல்லோ ராலும் ஒருங்கு துய்த்து உணரப்படுவதாம். இவ்வாறு இருந்ததெனப் பிறருக்குக் கூறப் படுவதுமாகிய பொருளைப் புறமென்பர். இந்த இருதிணை வடிவங்களுள் புறத் திணை வீரம், கொடை, புகழ் கொண்டவை. புறப்பொருளை ஏழு திணைகளாக வகுத்துக் கொண்டு தொல்காப்பியர் ஆராய்ந்துள்ளார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடான் என்பனவாகும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்பன போர்முறை பற்றியனவாம். வாகை என்பது வெற்றியை பொருண்மையாகக் கொண்டது. அது இருவகைப்படும் ஒன்று அறம் பற்றியது, மற்றொன்று மறம் பற்றியது. காஞ்சி என்பது ஆடவரும் பெண்டிரும் தத்தமக்கு நேர்ந்த பிரிவுகண்டு அதனால் நிலையாமையை உணர்த்துபவராய், அழுதும்

அரற்றியும் உயிர் துறந்தும் நிற்பர். பாடாண் என்பது பாடப்படுவோரின் ஒழுகலாறு களைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் கூறுவதாகும். இதுவும் இருவகைகப்படும் ஒன்று தேவர்க்குரியது மற்றது மக்கட்க்குரியது.

அக்காலத்தில் மண்ணைக் காப்பதற்காகவும், அதனை வென்றெடுப்பதற் காகவும் உக்கிரமான முறையில் போர் இடம்பெற்றது. மக்கள் யாவரும் தான் வாழும் நாட்டினையும் அரசினையும் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை உடையவர்களாகவும் அரசன்மீது நன்மதிப்புக் கொண்டவர்களாகவும் இருந்தனர். மண்ணுரிமையினைப் பாதுகாக்க மக்களும் இணைந்து போராடினர். போரும் மற உணர்வும் பெரிதும் மதிக்கப்பட்டது. வீரத்தின் உயர்பெறுமதியான களச்சாவு இடம்பெற்று அது தியாகமாக மதிக்கப்பட்டது. ஒரு பெண் தன் தகப்பனையும் கணவனையும் களச்சாவில் இழக்கின்றாள். கணவனை இழந்த மறுநாளே தனது ஒரே மகனை முகமலர்ச்சியோடு களத்துக்கு அனுப்பி அவனையும் இழந்து வஞ்சினம் கூறி களம் சென்று அவனுக்கு மார்பில் அம்பு பாய்ததனை உறுதி செய்து பெருமையடைகின்றாள். களத்தில் மடிகின்ற உடலங்களைச் சுற்றிப் பருந்துகள் வட்டமிடுகின்றன. பருந்துகள் உடலத்தை அனுகாவண்ணம் வீர வணக்கம் இடம்பெறும்வரை மக்கள் காவல் செய்கின்றனர். மன்னன் தான் அணிந்த மாலையினை வீரச்சாவடைந்த வீரனுக்கு அணிகின்றான். வீரச்சாவ டைந்தவன் அணிந்திருந்த மாலையினை மன்னன் அணிகின்றான். இவ்வாறாக சோகமான நிகழ்வுகள் இடம்பெறுகின்றபோதும் வஞ்சின உரைகளும் இடம்பெற்று வீரம் அறைகூவப்படுகின்றது. வீரம் சங்ககாலத்தில் முதன்மையான இடத்தினை வகித்திருக்கின்றது என்பதனைக் கட்டியங்கூறிக் காட்டுவதாக புறநானூற்றுச் செய்யுள்கள் விளக்கிநிற்கின்றன. வீரம் விளைந்து வித்திட்ட வீரயுகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றமையினை அவதானிக்கும் போது, சங்ககாலத் தமிழர்களின் போராட்டம் கற்றவர்களாலே இடம்பெற்றிருக்கின்றது. அவர்களுடைய போர் வியூகங்கள் சிறப்பாக வகுக்கப்பட்டிருகின்றது என்பதற்கப்பால் அப்போராட்டம் அர்த்தம் நிறைந்தது என்பதனை தெளிவுபடுத்துவதோடு, அத்தகைய சிந்தனைகள் தமிழர் கல்வி மரபில் செயற்பாட்டில் உள்ளதனை பொதிந்து அவதானிக்க முடிகின்றது.

சங்ககாலக் கல்வி அமைப்பினை அவதானிக்கும்போது, அங்கு பள்ளிக் கூடங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. பள்ளிகள் என்பதற்குப் இணையாக

மன்றம் என்ற பெயரில் இயங்கி வந்திருக்கின்றன. கற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு சாதிக் கொடுமைகளையப்பட கல்வி அமைப்பு உதவியிருக்கின்றது கற்றவர்கள் உறவிலும் மேலாக மதிக்கப்பட்டிருக்கின்றனர். ஈகை, வாய்மை, பொய்யாமை, நன்மை செய்தல் என்ற மனித மேம்பாட்டுச் சிந்தனைகள் மேலோங்கி யிருந்தன. மாணவர்கள் முதல் வகை மாணாக்கன், கடை வகை மாணாக்கன், இடை வகை மாணாக்கன் என மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டனர்.

மனிதத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தண்டனை வழங்கப் பட்டது. உழைப்புக்கும் மொழிக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டு கல்வி வளர்க்கப் பட்டது. கேட்கப்படுகின்ற ஒவ்வொரு கேள்வியும் அறிவு நிரம்பியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மனித வாழ்க்கைக்கு அர்த்தம் புரியும். போருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அதனை வியூகமாக மேற்கொள்வதற்குப் போர்க் கல்வி கற்பிக்கப்பட்டிருக்கின்றது. பொதுவாக அவதானித்தால் ஒவ்வொரு விடயங்க ளிலும் தேர்ச்சி பெறும்போதுதான் வாழ்வினை வெற்றிபெறலாம் என்பதற்கு ஏற்ப கல்வி புகட்டப்பட்டிருக்கின்றது.

கல்வியின் மாண்பு பற்றிப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், "வீரத்தில் மாத்திரமன்றி தன் நாட்டிலுள்ளோர் கல்வி அறிவில் சிறந்திருந்தாலே உண்மையான சிறப்புப் பெறுமென மனதார எண்ணினான்." கற்பிக்கும் ஆசரிரியர் களை மதிக்கவேண்டும் என்றான். அவர்களுக்குத் தேவையானபோது உதவியும் கற்கும்போதே போதிய பொருள் கொடுத்தும் மாணாக்கர்கள் அறிவுச் செல்வத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென விரும்பினான். அத்தகைய பொருள் வழங்குவதால் மாணாக்கன் கர்வம் அடையாது ஆசிரியனை வழிபடுவதில் வெறுப்படையக்கூடாது என்பதும் அவன் நிலைப்பாடு. எல்லாக் குழந்தைகளையும் சமமாகவே கருதும் ஒரு தாய்கூட அறிவுமிக்க குழந்தையிடத்து மிகுதியான அன்பு செலுத்த இடமுண்டு. ஒரு குடியில் பிறந்த ஒருவனைத் தேர்ந்து எடுக்க வேண்டு என்று எண்ணும் ஒரு அரசன் அக்குடியில் மூத்தவனாகிய ஒருவனைக் கொள்ளாது, அறிவுடை ஒருவ னையே தேர்ந்தெடுப்பாள். நான்கு வேறுபட்ட வர்ணித்தவருள் கீழ்ப்பட்ட வர்ணத் தவன் கல்வியில் மேம்பட்டிருப்பானேயாகில் அவனது ஆணையின் வழியே மற்றவர்களும் ஒழுகுவார்கள். என்பதனை இப்பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**"உற்றுழி உதவியு முறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்ற னற்றே..."** (183)

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் வர்ணாச்சிரமதர்ம முறையில் குறிப்பிட்ட வர்கள்தான் கல்வி கற்கவேண்டும் என்ற முறையினை உடைத்து யாவரும் கற்கலாம் என்ற நிலையினை ஏற்படுத்தியவன் என்பதால் அவன் கல்வி கற்க வேண்டும் என்ற சமத்துவப் போக்கினை உருவாக்கியமையும் குறிப்பிடத்தக்கதே.

கல்லாதவர்களைப் பற்றி குறிப்பால் உணர்த்தப்பட்டாலும் அதில் முழுமையன பொருள் பொதிந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. விலங்குகளின் நடமாட்டம் காடுகளில் தொடர்ந்து இருப்பது வழக்கம். அந்த விலங்குகள் மற்ற விலங்குகளிலிருந்து தங்களைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக இரவும் பகலும் துயிலாது விரைந்துசெல்லுகின்றன. அந்த விலங்குகளை வேட்டையாடக் காத்தி ருப்பவனை கல்லாத வறியோன் என்கின்றது புறநானூறு. கல்லாத வறியோன் என்ற தொடரினை அவதானித்தல் அதில் கல்லாதவர்களுடைய இழிய குணமே முன்வைக்கப்படுகின்றது. விலங்குகள் படுகின்ற கஷ்டமும் அதனை வேட்டையாடத் துடிக்கும் ஒருவனைப் பற்றியும் குறிப்பிடுவது கல்வி கற்ற வேண்டும் என்பதனையே யாகும்.

**"நடுநாள் யாமத்து பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்"** (189)

உயிர்கள்மீது பற்றுவைத்து அதனைக் காப்பவன் உயர்ந்த மனிதன். அவன் தான் கற்ற கல்வியிலும் மேன்மையடைகின்றான். சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காக தனது உடலின் பாகத்தினை பருந்துக்குக் கொடுத்து உயிரினைக் காக்க வேண்டும் என்கின்ற சிந்தனையினை உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கின்றான்.

கடமை உணர்வோடு வாழ்ந்தவர்கள் எங்கள் தமிழர்கள் அவர்கள் ஆற்றிய கடமைகளில் முக்கியமானதும் முதன்மையானதுமாக முன்வைக்கப்படுவது, கல்வியில் தனது மகனை சான்றோன் ஆக்குதலையே. மனைவி பிள்ளையைப் பெற்றெடுப்பாள். தந்தையோ அவனைச் சான்றோன் ஆக்குவார். கொல்லன் வேல்வடித்துக் கொடுப்பான், வேந்தன் நல்லமுறையில் போர்ப்பயிற்சி கொடுப்பான். இவ்வாறான ஆளுமை கொண்ட ஒருவன் போரில் வாளினைச் சிறப்பாகச் சுழற்றி வெற்றிபெறுவான் என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. எனவே, கல்வி என்பது முழுமையான கல்வியாக இருக்கவேண்டும் என்பதனை "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற தொடரால் தெளிவுபடுத்தப்படுகின்றது. வள்ளுவப் பெருந்தகை இந்தச் சம்பவத்தினை,

**"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்"** (குறள் - 67)

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"** (புறம் - 312)

சான்றோன் ஆக்குதல் என்பது மிகவும் முக்கியமான கடமையாகும். அதாவது தன் மகனைக் கல்வி, கேள்விகளில் உயர்ந்தவனாகவும், சிந்தனையில் சிறந்த வனாகவும் ஆக்குதல் என்பது அவன் சிறந்த சமநிலை ஆளுமை கொண்டவனாக இருப்பதனை உறுதி செய்கின்றது. தனது ஆட்சியைவிட கற்றவர்களைப் பெரிதாக மதிக்கின்றான். (புறம் - 2:17) கற்றவர் கற்றவருடனே சேருவார்கள் ஒழுக்கமில்லாத வர்கள் அவர்களைச் சார்ந்தோரையே சேருவார்கள். அது எப்படியென்றால் பொன், பவளம், முத்து, மணி என்பன ஒவ்வொன்றும் வெவ்வேறு தொலை விடங்களில் கிடைப்பன. அவற்றினை ஒன்றாகச் சேர்க்கும்போது அணியாகச் சிறப்படைவது போலாகும். (புறம் - 218) எனவே கல்வி கற்ற ஒருவனால்தான் அவ்வவ் இடங்களில் எழுகின்ற முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பது மன்னனுடைய தீர்க்கமான முடிவுமாகும்.

குற்றம் செய்த ஒருவருக்குத் தண்டனை கொடுத்தல் என்பது ஒரு சிக்கலான எண்ணக்கரு. ஆனால், சங்ககாலத்தில் தண்டனை சிறப்பாக கொடுக்கப்பட்டிருக் கின்றது. மன்னன், கொடுமை என்று மனதிலே முடிவாகக் கருதிய ஒன்றை ஒருவன் செய்யக் கண்டால் முறைதவறாது நடுநிலை நின்று ஆராய்ந்து அவனுக் குரிய தகுந்த தண்டனையைக் கொடுப்பான். அவனே பிழையினை உணர்ந்து, அரசனைப் பணிந்து நின்றால் தண்டனையையும் குறைத்து அன்மீது முன்னிலும் பெரிதாக அன்பு பாராட்டுவாய். உண்மையில் தண்டனை என்பது குற்றம் செய் தவன் அதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும் என்பதும், அதற்குச் சிறந்த சூழ்நிலைக் கல்வியறிவினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் தெளிவு படுத்தப்படுகின்றது. மாணவர்களுக்கும் தண்டனை கொடுக்கும் போது அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருக்குமாக இருந்தால் பாடசாலையில் முரண்பாடுகள் எழ வாய்ப்பில்லை.

**"வழிபடு வோரை வல்லறி நீயே**
**பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே"** (புறம் - 10)

இன்று தண்டனை என்ற பதத்தினால் பலவகையான முரண்பாடுகள் எழுகின்றன. அதற்குக் காரணம் சரியான முறையிலும் பொருத்தமான முறையிலும் தண்டனை வழங்கப்படுவதில்லை என்ற குறைபாடு அணைத்து துறைகளிலும் எழுகின்ற போதும் கல்வியில் அதன் தாக்கம் அதிகமாகவே இருந்துவருகின்றது.

விழுமியப் பண்புகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படுமிடத்து அந்த நாடே சிறக்கும் என்பதனை புறநானூற்றுச் செய்யுள்கள் தெளிவுபடுத்துகின்றன. உமக்கு பல ஆண்டுகள் வாழக்கையில் கழிந்துவிட்டன. ஆனால், உனது தலைமயிர் நரைக்க வில்லை. இந்த நிலையினை எவ்வாறு பெற்றீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவன் கூறியபதில் மிகவும் அவசியமான தாகும். எனது மனைவி மாட்சியு டையவள். மக்களோ அறிவு நிரம்பியவர்கள். ஏவலரோ நான் காண்பது போன்ற இயல்பினை உடையவர். எனது அரசனும் அறத்துக்கு மாறாக எதனையும் செய்யமாட்டான். அவன் மக்களை முறையறிந்து காத்து வருகின்றான். இவற்றிற்கு மேலாக கல்வி அறிவால் நிறைந்த புலவர்கள் பலர் நான் வாழும் ஊரில் வாழ்ந்து வருகின்றனர். இதனால் எனக்குக் கவலை இல்லை. அதனால் நரைக்கவில்லை என்றார். அதாவது, எனது அரசனும் அறத்துக்குமாறாக எதனையும் செய்யமாட்டான் என்பதினூடாக உயர்ந்த விழுமியப் பண்பை தெளிவுபடுத்திக் காட்டுகின்றார். அதாவது, கல்வி கற்றவர்கள் வாழும் இடம் சிறப்படையும் என்பது தெளிவு.

**"மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்**
**யான்கண் டனையர்என் இளையரும் வேந்தரும்**
**அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை" (புறம் - 191)**

வாழ்க்கை அறத்தினை விஞ்சா வண்ணம் இருக்குமாக இருந்தால் அந்த நாடு சிறப்படையும். அல்லாவிட்டால் "அரசியல் பிழைத்தேர்க்கு அறன் கூற்றாகும்" என்பது போல் ஆகிவிடும். நாட்டின் சிறப்பிற்கு கற்ற கல்வியினைப் பொருத்தமாகப் பிரயோகிக்க வேண்டும் என்பதுதான்.

உலகத்திலுள்ள முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அதிலிருந்து விடுபடுவதற்கு ஒவ்வொருவரும் சமூதாயத்திற்கு நல்லவற்றைச் செய்யவேண்டும். அதற்கு கல்வியறிவு அவசியமானதாகும். அதாவது, ஒரு வீட்டில் உயிர் பிரிந்ததனால் சாப்பறை ஒலிக்கின்றது. இன்னொரு வீட்டில் திருமணம் இடம் பெறுகின்றது. மற்றொரு வீட்டில் கணவனை இழந்து துயருறுகின்றாள். இன்னொருவளோ பூமாலை அணிந்து சந்தோசமாக இருக்கின்றாள். இத்தகைய நிலையில் சமூக

அடுக்கமைப்பு அமையப் பெற்றுள்ளது. இந்த இயல்பினை உணர்ந்து, பொருத்த மற்றவற்றை எமது சிந்தனையிலிருந்து ஒக்கி. இன்பம் கண்டு மகிழ்வதற்கு வாழ்க் கைக்குத் தேவையானதை மட்டுமே தன்வயமாக்கிக்கொள்ள வேண்டும்.

**"ஓரி னெய்தல் கறங்க வோரில்**
**ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்"** (புறம் - 194)

இம்மை, மறுமை என்று எதிர்ப்பயன் கருதாது நற்செயலைச் செய்தல் மறுபிறப் புக்கும் அதுவே பயனைத்தரும் என்பது வெளிப்படுத்தப்படகின்றது. அறச் செயலி னைச் செய்யும் போது ஊதியங்கருதிச் செய்யக்கூடாது என்பதனை கீதையும் "கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே" என்கின்றது. அறம் செய்பவர்கள் கல்வி கற்ற சான்றோர் கூறிய வழி ஒழுகவேண்டும் என்கின்றது. கடமையுணர்வி னையே முடிவாகக்கொண்டு அறம் செய்வது சிறந்தது.

**"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**ஆறவிலை வணிக னாயலன் பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே"** (புறம் - 134)

சுவாமி விபுலானந்த அடிகள் இப்பிறவியில் கற்ற கல்வி மறுபிறப்புக்கும் உதவும் என்கின்றார்.

**"வருந்தித்தான் கற்றகல்வி மாய்ந்துமறைந் திடுமோ**
**மறுமையிலு முதவுமோ வான்மதியே யென்றேன்**
**திருந்துகல்வி யெழுமையுமே மார்ப்புடைத்தென் றுரைத்த**
**செம்மொழியைத் தேர்தியென வெண்மதியம் விடுக்க"**

(கங்கை - 23)

பலருக்கு மகளைத்தர மறுத்துப்போரை எதிர்நோக்கியிருந்த தலைவனது ஊரைப் பற்றி இரங்கிக் கூறப்படுகின்றது. இவள் தாயும் இவன்பால் பெருவிருப்பம் உடையவளன்றி, வல்லமை உடையவனான இவன் தமையனோ சிறந்த படைப்பயிற்சியும் அறிவும் நிரம்பியவன். நானும் ஒரு கல்வியோன். என்று சொல்லும் பணிந்த இயல்பும் உடையவன். ஒளி பொருந்திய வேலுடன் பேராற்றலிலும் சிறந்தவன் இவன் தந்தை என்று தெளிவுபடுத்தப்படுகின்றது.

**"பிறளே பால் என மடுத்தலின்**
**ஈன்ற தாயோ வேண்டாள் அல்லல...."** (புறம் - 346)

தான் வாழும் நாடு, அரசு என்ற உயர் மதிப்புகளின் அடிப்படையிலேயே வீரமும் உயர் மதிப்பாக எண்ணப்பட்டது. தனிப்பட்ட சண்டைகளில் ஏற்படும் உயிரிழப்பும் சண்டைகளில் ஏற்படும் உயிரிழப்பும் கொலையாகக் கருதப்பட்டுத் தொடர்புடைய வருக்குத் தண்டனை வழங்க அரசு முற்படுகிறது. ஆனால், மண்ணுரிமை என்ற அடிப்படையில் இடம்பெறும் போர்வினையும் மறவுணர்வும் சமூகத்தால் மதிக்கத்தக்க செயலாகின்றன. வீரத்தின் அடிப்படையில் இடம் பெறுகின்ற களச்சாவும் தியாகமாக மதிக்கப்படுகின்றது. இவ்வாறு வீரம் நிறைந்த வாழ்வாக சங்ககால மக்களது வாழ்வு அமைந்திருந்தது. இத்தகைய வீரமும் அதனால் கிடைக்கப்பெறும் வெற்றியும் ஒரு போர்க் கல்வியாக அக்காலத்தில் நிலவி வந்துள்ளது.

> **"படையழிந்து மாறின னென்றுபலர் கூற**
> **மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டவென்"** (புறம்- 278)

ஒவ்வொரு மனிதனும், மனித மனங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு கற்ற கல்விக்கேற்ப ஒழுகவேண்டும். அது அரசராக, கற்றவர்களாக, மற்றவர்களாக இருக்கலாம். இதற்கு ஒப்பாகத்தான் பிறதேவைகளும் அமைகின்றன. செல்வம் உடையவர்கள் அதனை வறியவர்களுக்கு ஈந்து கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்கவில்லை என்றால் அந்தச் செல்வம் பயனற்றது மட்டுமன்றி அதனால் அறம் , பொருள், இன்பம் இல்லாமல் போய் பேரின்பத்தையும் இழக்க வேண்டி வரும். பிறப்பின் நோக்கத்திற்கேற்ப மற்றவர்களையும் வாழ வைக்கவேண்டும். அத்தகைய செயற்பாடுதான் சொர்க்கத்தை நிற்சயிக்கும் என்று அழுத்தம் திருத்தமாகக் தெளிவுபடுத்தப்படுகின்றது. கற்றதன் பயன் மனிதத் தன்மையோடு வாழ்தல் என்பதை உண்டால் அம்ம இவ்வுலகம் (புறம் - 182) என்று தொடங்கும் புறப்பாட்டு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

புறநானூற்றில் கூறப்பட்டுள்ள கல்விநிலை பற்றி அவதானிக்கும்போது அதனுடைய செல்நெறிகள் பின்வந்த கல்வி அறிஞர்களுடைய கோட்பாடுகளிலும் பின்பற்றப்பட்டு இன்று நடைமுறையில், உள்ளமையினை உணர்ந்துகொள்ள முடிகின்றது. இன்று பாடசாலைக் கல்வியினை நோக்குமிடத்து, யாவருக்கும் கல்வி, யாவருக்கும் கற்கும் ஆற்றல் உண்டு என்ற சிந்தனை, சனநாயகச் சிந்தனைகள், சமத்துவச் சிந்தனைகள், மனித உரிமைகள் என்பனவற்றின் தாக்கம், பிள்ளைநேயக் கல்வி, அறிவுப் பொருளாதாரத்திற்குத் தேவையான கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி, பல்வகை விவேகம், சமூகத் தொடர்புகளை மேம்படுத்தல்

என்ற முக்கியமான விடயங்களை முன்வைக்கின்றது. மேலும் இன்று தேர்ச்சி மையக்கல்வி பற்றி ஒவ்வொரு நாடுகளும் அதிகம் பேசி நடை முறைப்படுத்துகின்றது. அவற்றுள் தொடர்பாடல் தேர்ச்சியில் எண்ணறிவு, எழுத் தறிவு, தகவல் தொழிநுட்ப அறிவு என்பனவும், ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள், சூழல் தொடர்பான தேர்ச்சிகள், வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள், சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுத் தொடர்பான தேர்ச்சிகள், கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் என்று அமைகின்றன. அத்தோடு கல்வியின் நான்கு தூண்களாக உலகலாவிய அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிதலுக் காகக் கற்றல், செயலாற்று வதற்காகக் கற்றல், சேர்ந்து வாழுதலுக்காகக் கற்றல், வாழக் கற்றல் ஆகியன. இவ்வாறான சிந்தனைக் கூறுகள் ஒவ்வொன்றையும் புறநானூற்றில் கூறப்பட்டுள்ள கல்விச் சிந்தனையில் மூழ்கியுள்ளமை புலனாகின்றது.

முடிவுரையாக சங்ககாலத்தில் புறநானூறு எனும் இலக்கியம் வீரம், கொடை, புகழ் போன்ற விடயங்களை வலியுறத்தி நின்றபோதும், அக்காலத்தில் நிலவிய கல்வி பற்றியும் தெளிவுபடுத்திச் செல்கின்றது. அந்தகைய கல்விச் சிந்தனைகளை நுணுகி ஆராய்ந்து பார்க்குமிடத்து அத்தகைய சிந்தனைகளை இன்று நடைமுறையில் உள்ள கல்விச் சிந்தனைகளும் நவீன கோட்பாடுகளும் வெளிப்படுத்தி நிற்பதனை தெளிவாகவே உணர முடிகின்றது. எனவே, பண்டைத் தமிழில் உள்ள கல்விச் சிந்தனைகளை உள்வாங்கி நாம் புதிய வடிவங்களில் கற்பித்தல் - கற்றலை மேற்கொண்டால் கல்வியில் மேலும் நிலையான மாற்றத்தினை ஏற்படுத்தமுடியும்.

### சான்றாதாரங்கள்


1. புலியூர் கேசிகன், புறநானூறு தெளிவுரை.
2. தியாகராசா, மு (2007), புறநானூற்றில் ஒரு சில, கொழும்பு தமிழ்ச்சங்கம்.
3. கௌமாரீஸ்வரி.எஸ் (2003) திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம்.
4. ஜீன் லாறன்ஸ், சே, பகவதி.கு (1998) தொல்காப்பிய இலக்கியக்கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. சந்திரசேகரம்.ப (2011), கல்வித் தத்துவம், சேமமடு பதிப்பகம்.
6. சேகர். து (2003), தமிழ் இலக்கணங்களில் கல்விச் சிந்தனைகள், சேமா பதிப்பகம்.

7. சண்முகம். சே.வை(1980) எழுத்திலக்கணக்கோட்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

8. கைலாசபதி. க (2006), தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம்.

9. இரவீந்திரன். ந (2009), திருக்குறளில் கல்விச் சிந்தனை, விஞ்சு.

10. இரத்தினசபாபதி.பி (2007), செம்மொழிக் கல்வி, சாந்தா பப்ளிகேஷர்ஸ்.

# தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சியும் மதுரை மாநகரின் இன்றைய கல்வி நிலையங்களும்

வீரம் உரைத்து, வீராப்புப் பேசி, வீறுநடை போட்டு, விதண்டாவாதம் செய்யாமல் வெற்றி கண்ட நெறிமுறையில் வந்தவர்கள் நம்ம தமிழர்கள். அதிலும் மதுரைத் தமிழர்கள் என்றால் வீரத்தின் கொடுமுடியைக் கண்டவர்கள் என்பதுதான் கருத்து. பண்டைக் காலம் முதற் கொண்டு தமிழர்களுடைய இருப்பு என்பது வீரத்தின் வெளிப்பாடாகவும் காதலின் நிலைக்களனாகவும் இருந்து வந்தமையினை வேத, புராண, இதிகாச காலங்களைத் தெடர்ந்து சங்க கால இலக்கியங்கள் நிலை நிறுத்தியவை வரைக்கு கண்டு கொண்டால், அதனைத் தொடர்ந்து வந்த காலங் களிலும் அவற்றின் நிலையினைத் தெளிவாகவே உணரலாம். இதற்குக் காரணம் மன்னர்கள் மக்கள் மீதுகொண்ட பற்றும், புலவன் மன்னனுடைய வீரதீரச் செயல்களை கவிவரிக்குக் கொண்டுவந்து உலகறியச் செய்தமையுமாகும். அத்தகைய மக்கள் மரபுவழியாகத் தொடர்ந்து வாழும் நகரங்களில் ஒன்றுதான் மதுரை மாநகராகும். இது மதுரை மாவட்டத்தின் தலைநகரமாகும். சங்ககாலத் திலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் தூங்கா நகரமாக, சுமார் 2500 ஆண்டு பழமை வாய்ந்த பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக கொள்ளப்படு கின்றது. தமிழ்மொழி அறிவுடையவர்களைக்கொண்டு மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்ட பெருமையுடைய நகரமென்று சிறப்பிக்கப்படுகின்ற மதுரை, உலகலாவிய கல்விக்கும் வித்திட்ட நகரமாகும்.

சங்ககால மன்னர்கள் பலரைப் பற்றி நாம் இலக்கியங்கள் வாயிலாக அறிகின் றோம். அவர்கள் மண்ணைக் காத்து, மானத்தை நிலை நாட்டுவதற்காக வஞ்சினம் உரைத்து ஆற்றிய வீரதீரச் செயல்கைப் பற்றிப் புரிகின்றோம். இராமாயாணத்தில் பாண்டிய மன்னர்களால் தமிழ்ச் சங்கம் வைத்து தமிழ் வளர்க்கப்பட்டது. பாண்டிய

மன்னர்களின் இடைச்சங்க தலை நகரான கபாடபுரம் பொன்முத்துக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது என்றும் முத்து, பொன் அலங்கரித்த கோட்டை வாயில் இருந்தது என்றும் இராமாயணத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் திருச் செங்குன்றில் பாண்டவர் படுக்கை உண்டு என்றும், திருப்பாண்டி கொடு முடிதான் விராடநாடு என்றும், பாண்டவர் கொடுமுடியின் புறநகரில் வன்னி மரத்தில்தான் ஆடைகளையும் ஆயுதங்களையும் மறைத்து வைத்தனர் என்றும், அருச்சுனன் பாண்டிய மன்னன் ஒருவன் மகளை மணந்தான் எனவும் உள்ளது. பல இந்து மதப் புராணங்களும், தமிழ் இலக்கியம் மற்றும் நாட்டுப்புறக் கதைகளும் பல பாண்டிய மன்னர்கள் இருந்ததாகவும் அவர்கள் வரிசையாகப் பதவியேற்ற தாகவும் குறிப்பிடுகின்றன. இது தவிர்த்து திருவிளையாடல் புராணங்களில் எழுபதுக்கும் மேற்பட்ட பாண்டிய மன்னர்களும், நற்குடி வேளாளர் வரலாற்றில் 201 பாண்டிய மன்னர்களும் இறையனார் அகப்பொருள் நக்கீரனார் உரையில் 197 பாண்டியர்களும் குறிப்பிடப்படுகின்றனர்.

சுமார் 300 கி.மு. மெகஸ்தெனஸ் இந்தியா வந்திருக்கின்றார். அவர் இங்கு 'பண்டையா' என்னும் அரசி பாண்டியர் நாட்டை ஆண்டதாக குறிப்பிடுகின்றார். மேலும், அவனது நாட்டுக் குறிப்பில் பாண்டிய நாடு பற்றி தகவல்கள் பல உள்ளன. எரெக்ளீசு (Heracles) என்ற மன்னனுக்கு "பண்டேயா" என்ற பெண் பிறந்தாள் என்றும், அவளுக்கு கடல்சார்ந்த தென்னாட்டைக் கொடுத்தாகவும், அதில் 350 ஊர்கள் இருந்தன என்ற குறிப்பும் உண்டு. அங்கு நாள்தோறும் அரசிக்கு ஓர் ஊர் மக்கள் திறை செலுத்த வேண்டும் என்று ஆணையிட்டான்" என்ற செய்தி யவன நாட்டுத் தூதுவனின் குறிப்பில் உள்ளதாகக் குறிப்புண்டு. மேலும், கி. மு. 60 - நிகோலசு தமாசுகசு மற்றும் ஸ்ட்ரேபோ மதுரையை ஆண்ட பாண்டியர் மன்னன் ஒருவன் அகஸ்டஸ் மன்னனுக்கு தூதனுப்பினான் என்றும், கி. பி. 1 - 140 பிளினி மற்றும் தொலமி மதுரையை பாண்டிய மன்னன் ஆண்டதாகவும், கி. பி. 1 - 200 முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தமிழர் யவனர்களோடு சிறந்த வணிகவுறவு வைத்திருந்தனர். அவர்கள் செங்கடல் செலவு என்னும் கிரேக்க வணிக நூலேட்டில் மூவேந்தர் துறைமுகங்களான நறவு, தொண்டி, முசிறி, நீலகண்ட நகரம், கொற்கை, அழகன்குளம், காலப்பட்டினம், பாண்டிச்சேரி, எயிற்பட்டினம் போன்றவை சிறந்த துறைமுகங்களாக இருந்ததாகவும் பெரிப்ளுசு கூறுகிறார். சுமார் கி.பி. 250 - சீன நாட்டு வரலாற்றியல் அறிஞர் யூ உவான் பாண்டியர் அரசாங்கத்தை பாண்யுவி எனக் குறித்திருக்கின்றார். பாண்டிய மக்கள் சீனர்களைப்

போலவே சிறிய உயரம் படைத்திருந்தனர் எனக் கூறியுள்ளார். சுமார் கி.பி. 1268 - 1310 குலசேகர பாண்டியனின் ஆட்சியில் மதுரை உலகின் தலைசிறந்த செல்வச் செழிப்புள்ள நகரமாக இருந்ததாக மார்க்கோ போலோ குறிப்பிடுகின்றார். பாண்டியர் களுக்கும் ஏமன் நாட்டவர்க்கும் 1289ஆம் ஆண்டில் சிறந்த குதிரை வணிகம் நடந்ததாக இபின் பட்டுடா குறிப்பிடுகின்றார். மெகஸ்தனிஸ் எனும் கிரேக்க நாட்டுத் தூதர் தனது "இண்டிக்கா" எனும் நூலிலும், கௌடில்லியர் தனது அர்த்த சாஸ் திரத்திலும் பாண்டிய மன்னர்களின் சிறப்பை அடையாளப்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் கி.மு.543ஆம் ஆண்டு காலத்தில் விஜயன் என்ற மன்னன் 700 தோழர்களுடன் இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றான். அவனுக்குத் திருமணம் செய்வதற்காக மதுரா புரியிலிருந்து பட்டத்து ராணி அழைத்து வரப் பட்டதாக மகாவம்சம் அடையாளப் படத்தியுள்ளது. இவ்வாறாக ஆட்சி இடம் பெற்று வந்தாலும் கி.பி.13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பாண்டிய மன்னர்களின் ஆட்சி பற்றிய தெளிவினைக் கண்டுகொள்ளலாம். இவர்கள் சோழ மன்னர்களுக்கு எதிராகப் போர்புரிந்து அவர்களை இலங்கையில் இருந்து துரத்தியவர்கள். அதில் கலிங்க மாகோனின் பணி வியந்து கூறத்தக்கது. தொடர்ந்து பாண்டிய இளவரசன் பராக்கிரமபாகு, ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன், மாறவர்மன் போன்ற பாண்டிய அரசர்கள் ஆட்சி செய்தனர். பாண்டியர் கட்டிடப் பாணியில் ஆலயங்கள் பல எழுந்தன. கோபுரங்களும் எழுச்சி பெற்றன. இலங் கையின் பொலநறுவையில் உள்ள முதலாவது சிவதேவாலயம் பாண்டியர் பாணி யில் முற்றாகக் கட்டப்பட்டன. பல பௌத்த தேவாலயங்களிலும் பாண்டியர் பாணியில் அமைந்த உறுப்புக்களைக் காணமுடிகின்றது. ஜடாவர்மன் வீரபாண்டியன் திருகோணமலைவரைச் சென்று பாண்டியர்களின் கொடியைப் பறக்கவிட்டவன். இவன் ஆட்சிக் காலத்தில் திருகோணமலைக் கல்கோட்டை வாயிலில் பாண்டியர் களின் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கின்றது. அதனை நாம் இன்றும் காணலாம் என்றால் பாண்டியர்களின் அடையாளங்கள் மாறாத வகையில் அவர்களுடைய ஆட்சிச் சிறப்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

தலையலங்கானத்துப் பாண்டிய நெடுஞ்செழியன் அவனுடைய பாட்டனான நெடுஞ் செழியன் எனும் பெயரைக் கொண்டிருந்தான். இவன் பாண்டிய நாட்டினை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களுள் குறிப்பிடத்தக்க நிலையில்வைத்துப் போற்றப் பட்டவன். தனது தகப்பன் பாண்டியன் நன்மாறனின் இறப்பிற்குப் பின்னர் முடி

சூடினான். (கி.பி. 205 - கி.பி. 215) மாங்குடிமருதனார் பாடிய மதுரைக் காஞ்சியிலும், மதுரைக் கனக்காயமகனார் நக்கீரர் பாடிய நெடுநல்வாடையிலும் இவனே பாட்டுடைத் தலைவன். மேலும், முல்லைப்பாட்டு இவன்மேல் பாடப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அந் நூலின் பாட்டுடைத் தலைவன் பெயர் குறிப்பிடப்பட வில்லை. இம்மன்னன் பெருவீரன் மட்டுமன்றி கல்வி அறிவும் உடையவன். இப்பாண்டிய மன்னர்களுள் முடியுடைய வேந்தனும் பெரும்புலவனுமாவான். ஆக்கமும் ஆற்றலும் மிக்க அம்மன்னன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். அறமுறை தவறாது மக்களை நீதியினின்றும் காக்கும் நன்னெறியுடையோனாக இருந்து பாண்டிய நாட்டின் பெருமை பேசியவன். அத்தகைய மன்னனுடைய காலத்தில் வஞ்சின உரைகள் இடம்பெற்று வெற்றி பெறப்பட்டபோதும், கல்விக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளமையினைக் கண்டுகொள்ளமுடிகின்றது. நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சியூடாகத் அம்மன்னன் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டிருக்கின்றான். இந்த நூல்களில் வருகின்ற செய்தியினை வைத்துப் பார்க்கும்போது, உண்மையிலே இவ்வாறான ஒரு மன்னன் சங்க காலத்தில் இருந்துள்ளானா என்று வியப்படையச் செய்யும் அளவிற்கு அவனுடைய பண்பும் பணியும் தெளிவுபடுத்தப்பட்டிருப்பது பெருவியப்புத்தான்.

பாண்டிய நெடுஞ்செழியனின் தகப்பன் மாபெரும் வீரன். இவனுடைய ஆட்சிப் புலத்தில் சேரரும் சோழரும் குறுநில மன்னர்களும் அடங்கிக் கிடந்தனர். இவ்வாறிருக்க, இவன் இறந்ததும் இவர்களுக்கு மகிழ்ச்சியும் சந்தோசமும் மனதிலே பொங்கி எழுந்துதது. ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று சந்தோசப்பட்டு படையைத் திரட்டினார்கள். இந்தக் காலத்தில்தான் பாண்டிய நெடுஞ்செழிய மன்னன் முடிசூடுகின்றான். இவனுடைய வயதோ மிகவும் இளமையானது. இந்த இளமைத்தன்மை கொண்ட நெடுஞ்செழியனை அழித்து பாண்டிய நாட்டைக் கைப்பற்றலாம் என்று எதிரிகள் படை திரட்டி வருகின்றனர். கொற்றவையின் அருள்பெற்ற நெடுஞ்செழியன் அஞ்சாது வஞ்சினம் உரைத்துப் போர் செய்யத் தயாராகின்றான். சாவா, வீழ்வா, வாழ்வா என்ற நிலையில், வாழ்ந்தால் மண்ணுக்காக வீழ்ந்தால் மக்களுக்காக என்று,

**"நகுதக் கனரே நாடுமீக் கூறுநன்**
**இளைய னிவனென வுளயக் கூறிப்..."** (புறம் 72)

அந்த நிகழ்வினை இம் மன்னனே வஞ்சினமுரைத்துப் பாடி, தன்னைப் பழித்த எதிரிகளின் தலையினை வீழ்த்துவேன் என்று புறப்பட்டுச் களத்துக்குச் செல்கின் றான். இந்தப் போரில் மன்னன் சோழன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் ஆகியோர் இவனை எதிர்த்து மாண்டனர். இப்போரிலே கோச்சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை எனும் சேர மன்னன் சிறைப்படுத்தப்பட்டனர். தொடர்ந்து கூடல் பறந்தலையில் இருபெரு வேந்தரை வென்றது, இருபெரு வேந்தரும் வேளிரும் சாயப் போரிட்டு வென்றது, தன்னைத் தாக்கிய ஒன்றுமொழி வேந்தரின் முரசுகளைக் கைப்பற்றிக் கொண்டது, பகைவர் நாட்டுக்கே துரத்திச் சென்று வென்றது, சேரநாட்டு முசிறியில் சேரரை வென்றது, குட்டுவர் (சேரர்) பலரை வென்றது, ஆலங்கானம் என்னும் தலையாலங்கானத்தில் எழுவரை ஒட்டியது, கொடித்தேர்ச் செழியன் எழுவரை வென்றது, மிழலை நாட்டு எவ்வியை வென்றது, முத்தூறு வேளிரை வென்றது, ஆய் குலத்தவரின் கீழிருந்த குற்றாலத்தை வென்றது, நெல்லின் ஊர் பகுதியை வென்றது, முதுமலைப் பகுதியை வென்றது, பலர் மதில்களை அழித்தது, தென் பரதவர் என்ற நெய்தல் மன்னர்களை வென்றது என்று இவனுடைய வெற்றி யினை அடையாளப்படுத்திக் கொண்டே செல்லலாம் என்றால் இவனுடைய போர்த்திறமையினை எவ்வாறு கூறுவது கூற முடியாதல்லவா?

போர் வெற்றி பெற்றால் இன்று கொண்டாட்டங்களும் கும்மாளங்களும் இடம்பெற்று வருகின்றன. ஆனால், பாண்டிய நெடுஞ்செழிய மன்னன் அப்படியாக நடந்து கொண்டதாக இல்லை என்று உரையாசிரியர்கள் உரைக்கின்றனர். போர்க்களத்திலே கொடுஞ்சித் தேர் பொலிய நிற்கின்றவன்! இத்துணைச் சிறுவன் முறை முறைாகத் தன்மேல் மண்டி வருகின்ற புதிய வீரரை மதித்ததும் இலன்! அவமதித்ததும் இலன்! அவரை இறுகப்பிடித்து விண்ணில் ஒலி எழும்படி கவிழ்ந்து உடலம் நிலத்தின் கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இலன்! இவ்வருஞ் செயல் செய்வரும் கருத்தமையப் பாடிய பாடல்கள் அம்மன்னனின் மறச் சிறப்பை முழுவதும் உணரப் போதிய சான்றாகும். தலையலங்கானத்து வெற்றியினை உலகம் புகழ்ந்ததோடு நல்லிசைப் புலவர் பலரும் பாராட்டிப் பாடினர். உலகம் வெற்றியைப் புகழ்ந்ததே தவிர பாண்டிய நெடுஞ்செழிய மன்னனோ அதனைப் பற்றிப் பொருட்படுத்தாமல், வெற்றி பெறுவதைத் தவிர புகழ் நோக்கம் இல்லாதவனாகவே செயற்பட்டான். பாண்டிய நெடுஞ்செழிய மன்னன் முற்போக்குச் சிந்தனையுடையவன். எந்த விடயத்தினையும் இடம்,

பொருள். காலம் பார்த்துச் செய்து வெற்றிபெறுவதோடு மட்டுமன்றி மக்கள் மனங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்றவன். பகைவரானாலும் அவர்களையும் மன்னித்து வாழவிட்டவன். பிழை செய்வராக இருந்தாலும் அவர்கள் தம் பிழையினை ஒப்புக் கொண்டால் மன்னிப்பு வழங்கியவன். இந்த நிலைமை உருவாவதற்குக் காரணம் அவர்களுடைய முன்னோர் நெறிமுறையும் மதுரை மன்னின் சிறப்பும் என்றே கூறலாம்.

தலையலங்கானத்துப் போரிலே மாபெரும் வீரர்களை வீழ்த் துவதற்குக் காரணம் பாண்டிய நெடுஞ்செழியன் சிறந்த போர்ப் பயிற்சி பெற்றிருக்க வேண்டியது அவசியமானதாகும். இளமையிலே போர் செய்து வெற்றி பெறுதல் என்பது சாதாரண விடயமல்ல. போர்ப் பயிற்சியினை அவனுடைய தகப்பனார் சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு வழங்கியிருக்கின்றார். சங்க காலத்தில் புறநானூற்றுப் பாடல்கள் போர்க்கல்வி பற்றிக் குறிப்பிடுகின்றது. போர்க்கல்வியைப் போதிப்பதற்காகப் போர்க்கல்வி நிலையங்கள் இருந்திருக்கின்றமையினை உணரமுடிகின்றது.

**"பிறளே பால் என மடுத்தலின்**
**ஈன்ற தாயோ வேண்டாள் அல்லல்**
**கல்வியென் என்னும் வல்லாண் சிறான்"** (புறம் - 346)

இவளுடைய தாய் பெரிய அறிவு உடையவளாகக் காட்டப்படாத போது அவளுடைய தமையன் சிறந்த படைப் பயிற்சியும் அறிவும் நிரம்பியவனாக உள்ளான். யானும் ஒரு கல்வியேன் என்று சொல்லும் பணிந்த இயல்பும் உடையவன். போர் செய்கின்ற ஆற்றலும் வல்லமையும் உடையவன் என்று வருகின்ற செய்தியினூடாக தெளிவாகத் தெரிகின்றது. சங்ககாலத்தில் போர்க்கல்வி என்பது வழங்குவதற்கான நிலையம் இருந்துள்ளது என்பது. அந்த நிலையத்தில் பாண்டிய நெடுஞ்செழிய மன்னன் சிறப்பாகப் பயிற்சி பெற்றிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. சிறப்புப் பயிற்சி பெற்றதனால்தான் எதிரிகளை இலகுவாகப் பந்தாடி வெற்றி பெற்றிருக்கின்றான். "முதலைக் குட்டிக்கு நீந்திப் பழக்க வேண்டிய அவசியமும் இல்லை"

கல்வியின் முக்கிய குறிக்கோள் சமத்துவத்தினை ஏற்படுத்துவதாகும். சங்க காலத்தில் சமத்துவக் கல்வி பற்றிய செய்திகள் பல இடங்களில் வருகின்றன. மக்களை மக்களாக மதிக்கும் மனோநிலையில் மன்னர்கள் இருந்துள்ளனர். ஆலயங்கள் சமத்துவ சிந்தனையினை வளர்த்ததோடு அறநெறிகளையும் ஊட்டியது. இவனுடைய ஆட்சியிலே பௌத்தப் பள்ளி, அந்தணர் பள்ளி,

அமணப்பள்ளி என்பன இருந்திருக்கின்றதென்றால் அவன் மக்கள் மீதும் சமயங்களின் மீதும் கொண்டிருந்த சமத்துவப்போக்கு தெளிவுபடுத்தப்படுகின்றது. பௌத்தர்கள் புத்தரை வழிபடும் இடம் பள்ளி என்றே அன்று சொல்லப்பட்டது. இது போன்று கோயில்களுடன் தொடர்புடைய சமயத்தவர்கள் நல்வழி காட்டும் விதமாக, மதுரை நகரில் வாழ்ந்து கொண்டிருந்தனர் என்பதனையும், அவர்கள் வழிபடுவதற்கும், வழிபாட்டு நெறிமுறைகளை அறிந்து கொள்வதற்கான வசதிகள் பௌத்தப் பள்ளி, அந்தணர் பள்ளி, அமண் பள்ளி எனும் மூன்று பள்ளிகளுடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது என்பதனையும் அறிந்துகொள்ளமுடிகின்றது. அத்தோடு, பாண்டிய நாட்டின் மதுரை நகருக்கு பிறநாடுகளிலிமிருந்து மக்கள் வந்து வியாபாரம் செய்து, கூடிக்குலாவிச் செல்கின்றார்கள் என்றால் பாண்டிய மன்னனுடைய ஜனநாயக ஆட்சிச் சிந்தனையும், அவன் சமத்துவக் கல்விக்குக் கொடுத்த மதிப்பும் புலனாகின்றது.

மதுரை மாநகரில் இருவர்களுக்கிடையிலான வழக்குகளை விசாரித்து, உண்மைகளை அறிந்து, அதற்கு நடுநிலையுடன் தீர்ப்பு சொல்வதற்கான அறங் கூறும் அவையம் அமைக்கப்பட்டிருந்தது குறித்து,

**"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"**

(மதுரைக்காஞ்சி 489 - 492)

என்ற அடிகள் புலனாகின்றன. அதாவது, அறம் கூறும் நடுவர், வழக்கிடுபவர் உள்ளத்தில் அச்சம் தோன்றாதபடி அவரது அச்சத்தைப் போக்கியும், வழக்கிடுபவர் இருவருள் ஒருவர் வெற்றியடைவதும், மற்றவர் தோல்வியடைவதும் உறுதி என்பதால், தோற்றவர் உள்ளத்தில் ஏற்படும் வருத்தத்தை, அச்சத்தை போக்கு வதற்காக அறத்தை நடுநிலையாக நின்று தேற்றக் கூறும் அறங்கூறு அவையம் இருந்துள்ளது. உண்மையிலே அறத்துக்கு முரணாகச் சென்று தோற்றவருடைய உள்ளத்தினைத் தேற்றி அவர் வருத்தம் கொள்ளாமல் இருக்கின்ற சமூக நிலை மையினை நினைத்துப்பார்ப்பதற்கே கஷ்டமாக உள்ளது. அத்தோடு வழக்கிடுவோர் உண்மையை அறிந்து தமர், பகைவர் வேறுபாடின்றி எல்லோரையும் சமமாக மதித்தல் என்பதும் பாண்டிய மன்னனுடைய ஆட்சியின் பெரும் சிந்தயையாகும். ஆலயங்களில் அறங் கூறுதல் என்பதனைக் காட்டிலும் வழக்குரைக்கும் இடங்களில்

அறங் கூறுவது சாலவும் பொருந்தும். இங்குதான் அறங் கூறவேண்டியவர்கள் உள்ளனர் என்பதோடு, அறங்கூற வருகின்றவர்கள் பெற்றிருக்கும் கல்வி அறிவு எத்தகையது?

அமைச்சர் தெரு, வணிகர் தெரு, நாற்பெருங் குழுவினர் உறையும் தெரு வென்று தெருக்கள் வகுத்தொதுக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் என்பவர்கள் அரசனுக்குப் பல்வேறு வழிகளில் ஆலோசனை செய்ய வேண்டியவர்கள் அப்படி யானால், அவர்கள் சிறந்த கல்வி அறிவும் உலகறிவும் உடையவர்களாக இருக்க வேண்டும். தங்கள் மனத்தினை நீதியின்பாற் செலுத்தி, ஈகையால் புகழ்பெற்று, காவிதிப்பட்டம் பெற்றவரும், வேளாளர் ஆகிய அமைச்சர்கள் வாழும் தெரு என்ற குறிப்பு வருகின்றது. வணிகர்கள் சிறந்து விளங்கிய நகரம் பற்றிச் சொல்லப்படு கின்றது. மணி, முத்து, பொன் முதலியவற்றைப் பண்டமாற்றாகப் பெற்றும், அயல் நாட்டிலிருந்து கொண்டுவந்த பண்டங்களை நாளங்காடி, அல்லங்காடி ஊடாக விற்கும் வணிகர்கள் தம்முடைய வணிக நெறியில் இருந்தும் இல்லற நெறியி லிருந்தும் விலகிச் செல்லாமல் வணிகம் செய்துள்ளனர். இவர்களைப் போல் பல்வேறு வணிகர்கள் வாழ்ந்துள்ளனர். நீதி நெறி தவறாதவர், ஒழுக்கத்தால் மேன்மையடைந்தோராகக் கருதப்படும் புரோகிதர், சேனாதிபதியர், தூதர், ஒற்றர் எனும் நான்கு வகையான பெருங் குழுவினர் வாழும் இடம் இது. இந்தத் தெருக் களில் வாழ்ந்தவர்கள் யாவரும் கல்வியை நன்றாகக் கற்றவர்கள். அத்தோடு வணிகம் செய்வதற்கென்று வேறு நாடுகளில் இருந்து மதுரை நகருக்கு வந்தவர்கள் மட்டுமன்றி அவர்கள் பல்வேறு மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய மொழிகளை விளங்கிக் கொள்ளும் அளவிற்கு மதுரை நகரில் வாழ்ந்த மக்கள் இருந்திருக்கின்றனர் என்றால் பிறமொழிக் கல்வியும் இங்கு வழங்கப்பட வாய்ப்பிருத்திருக்கின்றது. சிலப்பதிகார ஊர்காண் காதையிலும் தெருக்களின் சிறப்புப் பற்றி கூறப்படுகின்றது. புறஞ்சிறை மூதூரிலே, கவுந்தியும் கண்ணகியையும் தங்கியிருக்க வைத்துவிட்டுக் கோவலன் மதுரை நகருக்குள் சென்று அங்குள்ள செல்வர் வீதி, அரசர் வீதி, எண்ணெண் கலையோர் வீதி, அங்காடி வீதி, இரத்தினக் கடைத்தெரு, பொன்கடை வீதி, அறுவை வீதி, கூல வீதி ஆகிய பல்வேறு வீதிகள் வழியாகச் சென்று அவற்றின் சிறப்புகளையும் கண்டு, மீண்டும் அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேரும் செய்தி வருவதும் மதுரைமா நகரின் சிறப்பினையே காட்டுகின்றது.

பாண்டியர் ஆட்சியைத் தொடர்ந்து வந்தவன் தலையலங்கானத்துப் பாண்டிய நெடுஞ் செழியன். அவனைத் தொடர்ந்து, கி.பி 5 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13 ஆம் நூற்றாண்டுவரை இடைக்காலப் பாண்டியர் ஆட்சியும்ஞூ கி.பி 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16ஆம் நூற்றாண்டுவரை டெல்லி சுல்தானியர் ஆட்சியும் கி.பி 1520 நூற்றாண்டு தொடக்கம் 1736 ஆம் ஆண்டுவரை விஜயநகர நாயகர மற்றும் திருமலை நாயக்க மன்னர் ஆட்சியும் இடம்பெற்றது. கி.பி 1736ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றுகின்றனர். இவ்வாறாக தொண்டு தொட்டு பாண்டிய மன்னர் பரம்பரையினரின் ஆட்சி இடம்பெற்றுவந்தது. இந்தப் பின்னணியில்தான் தூங்கா நகரமாக அன்று தொட்டு இன்றுவரைச் செயற்பட்டு கின்ற மதுரை மாநகரத்தின் கல்வி நிலையங்கள் பற்றிய சிறப்பக்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இன்று கல்வியில் சிறந்த இடத்தினை வகித்து வருகின்ற மதுரை மாவட்டம் மாநிலத்தில் மூன்றாவது இடத்தினையும் இந்திய அளவில் 31வது இடத்தினையும், எழுத்தறிவு வீதம் அண்ணளவாக 79 வீதத்தி னையும் அடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த எழுத்தறிவு வீதம் இந்திய அளவை விட அதிகமானது. இந்த நிலை எதிர்காலத்தில் இன்னும் முன்செல்லும் நிலை உருவாகும். கல்வியில் சிறந்த இடத்தனை வகிக்கின்ற மதுரைமா நகரின் கல்வி உயர்வினை மேலும் உயர்த்துவதற்கு அங்குள்ள கல்வி நிலையங்கள் வழிவகுத்துக் கொடுக்கும்.

மதுரையில் அமைந்தள்ள கல்வி நிலையங்கள் என்பதனை விளக்குவதாக இந்தக் கட்டுரை முனையவில்லை. ஆனால், இந்தக் கல்வி நிலையங்களில் எழுச்சிக்கான பின்னணியைத்தான் நாம் ஆராய்து பார்க் வேண்டியுள்ளது. பண்டைநாளில் சிறப்பாக இருந்த இடங்கள் இந்நாளில் சிறப்பற்றிரக்கின்ற நிலை களை பல சான்றுகள் வழி பார்க்கமுடிகின்றது. அவற்றுள் நாயன்மார்களின் பத்திப் பணுவல்களால் சிறப்பாக பாடப்பட்ட ஆலயங்கள் பல இன்று சிறப்பில்லாமல் இருக்கின்றன. பல நகரங்கள் பெயர் மாறியும் செயலிழந்தும் இருப்பதனை கால வோட்டத்தில் காணமுடிகின்றது. ஆனால், மதுரைமா நகரமோ அதே பெயரிலும் நிலை தவறாமலும், நீட்சிபெற்று வந்தமையினை இன்று எம்மால் கண்டுகொள்ள முடிகின்றது. அவ்வாறெனின் இந்த நிலைக்கான காரணம், அன்று தொட்டு இன்றுவரை ஆட்சி செய்த ஆட்சியாளர்களுடைய தூருநோக்கும், அவர்கள் அறத்துக்கு மேலாக ஒழுக்கத்தில் கரிசனை காட்டியமையும், கல்விக்கு முன்னுரிமை கொடுத்ததுமாகும். குறிப்பாக மதுரை பல நூற்றாண்டுகளாக தமிழ் கலாச்சாரம்,

இலக்கியம், இசை, நடனம் மற்றும் பல கலைகளைக் கற்பிக்கும் மையமாக விளங்கியது. மதுரையை மையமாகக் கொண்டு மூன்று தமிழ்ச் சங்கங்கள் இயங்கி வந்துள்ளன. சங்க இலக்கியங்கள் பல இங்குதான் அரங்கேற்றப்பட்டன எனவும் நம்பப்படுகிறது. மதுரைத் தமிழ்ச் சங்கம் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் ஆய்வுக்கும் துணையாகச் செயல்படுகிறன. சங்கத் தமிழ்க் காட்சிக் கூடம் பழந்தமிழர்களின் மேன்மையை படம் பிடித்தும் காட்டுகிறது.

மதுரையின் கல்விப் போக்கு பழமையானதாக இருந்தபோதும், கல்வி நிலையங்களின் எழுச்சியானது மதுரையின் பழமையான கல்லூரி, 1881 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அமெரிக்கன் கல்லூரியினை முதலாகக் கொண்டே ஆரம்ப மாகின்றது. தொடர்ந்து, நகரின் முதல் பெண்கள் கல்லூரியாக 1948 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட டோக் பெருமாட்டி கல்லூரி உள்ளது. இவை தவிர, தியாகராசர் கல்லூரி (துவங்கப்பட்ட ஆண்டு 1949), மதுரைக் கல்லூரி (துவங்கப்பட்ட ஆண்டு 1889), பாத்திமா கல்லூரி (துவங்கப்பட்ட ஆண்டு 1953), தியாகராசர் மேலாண்மைக் கல்லூரி (துவங்கப்பட்ட ஆண்டு 1962), நாட்டின் பழமை யான மேலாண்மைப் பள்ளிகளுள் ஒன்று மற்றும் சௌராஷ்டிரா கல்லூரி, சௌராட்டிர மேல்நிலைப் பள்ளி, வக்பு வாரியக் கல்லூரி (துவங்கப்பட்ட ஆண்டு 1964) ஆகியவை நகரின் பழமையான கல்வி நிலையங்களில் குறிப்பிடத்தக்கவை.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் (ஆரம்ப காலங்களில் மதுரைப் பல்கலைக்கழகம்) 1966 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட, ஒரு மாநிலப் பல்கலைக் கழகமாகும். இதனுடன் மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலுள்ள 133 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன. நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மட்டும் 47 (தன்னாட்சி, அரசு உதவி, சுயநிதி, உறுப்பு கல்லூரி மற்றும் மாலை நேரக் கல்லூரிகள் உட்பட) பல்கலைக்கழகத்தால் ஏற்புப் பெறப்பட்ட கல்வி நிறுவனங்கள் உள்ளன. இது தவிர ஏழு பல் தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் 5 தொழிற்பயிற்சிப் பள்ளிகள மதுரையில் உள்ளன. இவற்றுள் அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி, தமிழ்நாடு பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை குறிப்பிடத்தக்கன. மதுரை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம் என இரு மருத்துவக் கல்வி நிலையங்களும், 11 துணை மருத்துவக் கல்வி நிலையங்களும்

மதுரையில் உள்ளன. அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்ற ஏழு பொறியியல் கல்வி நிலையங்கள் உள்ளன. இதில் தியாகராஜர் பொறியியல் கல்லூரி பழமையானதாகும்.

இது தவிர மதுரையைச் சுற்றிலும் பல சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. 1979 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட மதுரை சட்டக்கல்லூரி, தமிழகத்தில் உள்ள ஏழு அரசு சட்டக் கல்லூரிகளுள் ஒன்றாகும். இது தமிழ்நாடு அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவை தவிர மதுரை நகரில் மூன்று ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், இரு இசைக் கல்லூரிகள், மூன்று மேலாண்மைக் கல்லூரிகள் மற்றும் 30 க்கும் மேற்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. 1965 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது) தென் மாவட்டங்களில் குறிப்பிடத்தக்க வேளாண்மைக் கல்லூரி ஆகும். இதனுடன் மனையியல் கல்லூரி ஒன்றும் உள்ளது. மதுரை நகரில் சுமார் 369 ஆரம்ப, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஒரு காலத்தின் தொடர் தன்மையினைக் வரலாற்று அடிப்படையில் கண்டுகொள்வதற்கு மதுரையில் காணப் படகின்ற இந்த கல்வி நிலையங்கள் சிறந்த சான்றாகும். தலையலங்கானத்து செருவென்ற பாண்டிய மன்னனுடைய முற்போக்கு சிந்தனைகள் பலவற்றுள் அவன் கல்விக்குக் கொடுத்த இடம் காலவோட்டத்தில் மதுரை நகரைக் கல்வி நிலையங்களால் இன்று அலங்கரிக்கின்றன.

தொகுத்துப்பார்க்கும்போது பாண்டிய மன்னர்களின் ஆட்சியானது மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு இடம்பெற்றிருக்கின்றது. அவர்கள் போரிடுவதிலும் பண்பாட்டுடனான கல்வியை வளர்ப்பதிலும் சிறந்த ஆளுடையுடையவர்களாக இருந்துள்ளனர் என்பதனைக் கண்டுகொள்ள முடிகின்றது. அவர்களுள் தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டிய மன்னனின் ஆட்சியானது உலகமறிய சிறப்புப் பெற்றது. அவ்மன்னன் போர் வீரனாகவும், சிறந்த போர்ப் பயிற்சியுடன் கல்வி அறிவு நிரம்பப் பெற்றவனாகவும், அறத்தின்மேல் நம்பிக்கை கொண்டு கொற்றவையை வணங்கி அருள் பெற்றவன் போன்ற பல்வேறு பண்புகளால் காட்டப்படுகின்றான். இந்தகைய மன்னர்களின் நூரநோக்கினால் மதுரையில் இன்று காணப்படுகின்ற கல்வி வளர்ச்சிக்கு இங்கு கல்விப் பணி செய்து வருகின்ற கல்வி

நிலை யங்களைக் கொள்ளமுடிகின்றது. மதுரையின் கல்விநிலை மேலும் ஒருபடி செல்வதற்கு கல்வியலாளர்களும் கல்வி நிலையங்களும் உறுதுணையாக இருக்க மீனாட்சியம்மா அருள்பாலிப்பார் என்பதோடு, நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்ற நீதியும் நேர்மையும் தவறாத புலவர்களையும் கல்வியலாளர்க ளையும் தந்த பாண்டிய மன்னர்களின், குறிப்பாக தலையலங் கானத்து பாண்டிய மன்னனின் தூரநோக்கு தமிழ் உலகிற்கு பெருவிருந்து என்றே கூறவேண்டியிருக் கின்றது. இவ்வாறான பாண்டிய மன்னர்களின் தூரநோக்கும் துவளாத மனமும் குறிப்பாக தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டிய மன்னனுடைய வீரமும் விவேகமும் இன்றையத் தமிழர்களிடம் காணப்படுகின்றமையினை மதுரைத் தமிழர் வாயிலாக கண்டுகொள்ள முடிகின்றது. அந்த தொப்புழ்கொடி உறவுதான் தமிழ் ஈழத்திலும் நிலைகொண்ட மையினைக் காலவோட்டத்தில் கண்டு கொண்டிருக்கின்றோம். நெஞ்சில் நஞ்சைக் கட்டி, வஞ்சினம் உரைத்து, வீர வெற்றியினையும் வீரச் சாவினையும் சந்தித்தமை தலையலங்கார வெற்றியையே கண்முன்கொண்டுவருகின்றது. 'மதுரை சிறந்தால் நம்ம தமிழே சிறக்கும்'.

**சான்றாதாரங்கள்**

1. இந்திரபாலா, கா., இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை ஒரு வரலாற்று அறிமுகம், குமரன் பப்பிளிஷர்ஸ், சென்னை, 1971.
2. கைலாசபதி, க, (2006) தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், சென்னை,
3. சிவலிங்கனார், ஆ, (1993) தொல்காப்பிய உரைவளம் பொருளதிகாரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. சோமசுந்தரனார், பொ.வே., (1977) மதுரைக் காஞ்சி, கழகவெளியீடு.
5. புலியூர்க் கேசிகன், (1961) தொல்காப்பியம் (முழுவதும்), பாரிநிலையம், சென்னை.
6. புலியூர்க் கேசிகன், புறநானூறு தெளிவுரை.

# கல்வியின் பிரதான செல்நெறிகளைத் தெளிவுபடுத்தும் பண்டைய தமிழ் இலக்கியங்கள்

**(தொல்காப்பியம், புறநானூறு, திருக்குறள், நன்னூல் அடிப்படையிலானவை)**

உடல், அறிவு, உணர்ச்சி ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து முழுவளர்ச்சி பெறச் செய்வதே கல்வியின் நோக்கம் என்று கல்வியலாளர்கள் பொதுவிதி கொள்கின்றனர். தமிழ் மக்கள் "சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" சான்றோன் எனக் கேட்ட தாய்" "அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்று கல்வியின் நோக்கம் சான்றோன் ஆக்குதல் என்று பேராசிரியர் ப.சந்திரசேகரம் குறிப்பிடுவார். வள்ளுவர் "மாதாகும் மாந்தர்க்கு உணர்ச்சி" என்றும், "சிந்தையை அடக்கும் திறம்பெற கல்வி பயிற்றல் வேண்டும்" என்றும் தாயுமாணவரும் குறிப்பிடு கின்றனர். நாம் அறிவியல் முன்னேற்றத்தினைப் பெற்றுவரும் இக்காலத்தில் பழந்தமிழ் அறிவுக் கருவூலங்களை மீண்டும் தேடிக் கண்டு புதுவகை அறிவுடன் இணைத்து பலதுறை வளர்ச்சி நோக்கில் செயலாற்ற முடியும். பண்டைக் காலங் களில் கல்வி கற்க விரும்பியோர் கற்றவர்களிடம் சென்று அவர்கள் கருணையை எதிர்பார்த்துக் கல்வி கற்க வேண்டும். அவர்கள் ஏவின பணிகள் எல்லாம் செய்ய வேண்டும். அவர்கள் எப்பொழுது படிப்புச் சொல்லிக் கொடுக்கின்றார்களோ அப்பொழுது கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிக் கற்றுக்கொள்ளும் முறைக்குக் குருகுலக் கல்வி என்று பெயர் என்று சாமிசிதரம்பரனார் எடுத்துரைக்கின்றார். இத்தகைய கல்வி முறைகள் பற்றியும் கற்கவேண்டிய முறைபற்றியும் இவ்விலக் கியாங்கள் தெளிவுபடுத்துகின்றன. தமிழ்ச் சமூகத்தின் கல்வி வரலாறு பன்னெடுங் காலத்திற்கு முன்பே தோற்றம் பெற்றிருந்தாலும் ஆதாரப்பூர்வமாக அறியமுடிவது தொல்காப்பிய காலத்திலும், சங்க இலக்கிய காலத்திலுந்தான். சங்க காலத்தில் கல்வி என்பது மேம்பட்ட நிலையைக் கொண்டிருந்தது என்பதை யாரும் மறுக்க இயலாது. சங்க காலத்தில் தனியாள் கல்வி, குழுக்கல்வி என்ற இரண்டு நிலை

களிலும் கல்வி கற்பிக்கப்பட்டது. சங்ககலாக் கல்வியின் இலக்கு மனிதனைப் பண்படுத்துவது என்ற முதனிலை மாற்றத்தைக் கொண்டிருந்தது. இதனை கலித்தொகைப் பாடல் "பண்பெனப்படுவது பாடறிந்தெழுகுதல்" (கலி 133 நெய்தல் கலி 16) என்றும், நற்றினையின் பயனும் பண்பும் பாடறிந்தொழுகல் (நற் - 60.2) என்ற பாடலடிகள் கல்விக் கான நோக்கத்தினைத் தெளிவுபடுத்துகின்றன.

இன்றைய கல்வியின் செல்நெறிகள் பலவாறு காட்டப்படுகின்ற போதும் அவற்றுள் பிரதானமாகப் பேசப்படுபவை சில தெளிவுபடுத்தப்படுகின்றன. கல்வியின் நான்னு தூண்கள், வுளுமின் கற்றல் கொள்கை, கற்றலுக்காகக் கற்றல், தண்டணை வழங்கல், வாழ்க்கைக் கல்வி, சமத்து வக்கல்வி, விழுமியம், கற்பித்தல் உத்திகள், கற்பிக்கும்போது தவிர்க்கப்பட வேண்டியவைகள், மனப்பாடம் செய்யும் உத்தி, மாணவர் வகை போன்ற விடயங்களை நாம் மனங்கொள்ள வேண்டியுள்ளது. இந்த விடயங்கள் இன்று கல்விப்போக்கில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இத்தகைய கல்விச் சிந்தனைகள் பண்டையத் தமிழ் இலக்கியங்களில் தெளி வாகவும் ஆழமாகவும் காட்டப்படுகின்றன. இதன் அடிப்படையில் கல்வி அக்காலத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதனால் அக்கால மாணவர்கள் அறிவில் சிறந்த இடத்தினை வகித்தமையினை இலக்கியங்கள் தெளிவுபடுத்தியுள்ளமையினையும் கண்டுகொள்ளமுடிகின்றன.

## முழுமைக் கல்வி

**"உளரெனினும் இல்லாரொடு ஒப்பர்களன் அஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்"**

என்பது வள்ளுவம் தான் கற்றவற்றை அவைக்கு அஞ்சி அவையோர் ஏற்பச் சொல்ல இயலாதவர் உயிரோடு இருப்பினும் இறந்தவருக்கு ஒப்பாவர் என்பது இக்குறளின் பொருள். இவ்வாறு இல்லாமல் கற்ற கல்வியின் பயன் உடையவராகத் திகழத் தொல்காப்பியம் வழி நன்னூல் கூறுகின்றது. 'ஆசானுரைத் தவையமை வுரக் கொளினும்.." என்ற நூற்பாக்கள் மூலம் ஆசிரியர் கூறியதை மனம் நிறைய ஏற்றுக் கொண்டாலும் ஆசிரியரின் புலமையில் கால்பங்கு மட்டுமே பெற முடியும் என்பதும் தன்னுடன் பயிலும் மாணவருடன் பழகுவதால் கால்பங்கும் தான் கற்றதை பிறருக்கு எடுத்துக்கூறுவதால் அரைப் பங்கும் புலமை பெறுவான் என்பதும் உணர்த்தப்படுகின்றது. கல்வியின் வெற்றி என்பது பிறருக்கு எடுத்துக் கூறுவதிலே தங்கியுள்ளமையினை இன்றைய செல்நெறியில் காண்கின்றோம்.

## சான்றாண்மைக் கல்வி

நாகரிகத்தையும் பண்பாட்டையும் உலக அமைதியையும் காக்கும் சான்றாண்மைக் கல்வியினைச் சங்ககாலப் புலவர் வேந்தர்க்குச் சமயம் வாய்த்த இடத்திலெல்லாம் செவியற மொழிந்தனர். சந்து செய்வித்தும், நாணும் தகவிடைத்து என விலக்கியும், குடிப்பொருள் அன்று நும் செய்கை எனத் தடுத்தும், இன்றே போல்கதும் புணர்ச்சி என நட்புக் கூட்டியும் சான்றோர் உலகம் பண்டைத் தமிழ் உலகின் அமைதி காத்தது. புலவோரின் கல்வி ஆளுமை பறைசாற்றுகிறது. அன்னாய் இவனோர் இளமாணாக்கன்.." (குறுந்.33) என்ற செய்யுள் மோசிகீரனாரின் பாடல் தலைவி தன்னை வருத்திக்கொண்டு கல்வி கற்கும் மாணவனின் பெருமையினைக் காட்டுகின்றார். கல்வி கற்பதற்காகப் பிரிதல் ஏனையப் பிரிவுகளினும் உயர்ந்ததாகக் கருதப்பெறுகிறது. வாழ்நாள் முழுவதும் கல்விகற்கும் முயற்சி சங்ககாலத்தில் இருந்தமை இதன்மூலம் அறியப்படுகிறது. இன்று நாம் வாழ்நாள் கல்வி பற்றிப் பேசுகின்றோம். வாழ்க்கை மேன்மையுறுவதற்கு அக்கல்வியின் அவசியம் அன்றே உணர்த்தப்பட்டிருக்கின்றது.

## சமத்துவக் கல்வி

சங்ககாலத்தில் வாழ்ந்த நக்கீரர் கணக்காயனாருடைய மகனாவர். அவருடைய பாடல் சமத்துவச் சிந்தனையை வெளிப்படுத்தி நிற்கின்றது. 'தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி.." (புறம்: 189) அரசர்களானாலும், கற்றவர்களானாலும், மற்ற வர்களானாலும் அவர்கள் ஒவ்வொருவருக்கு இடையேயான நடைமுறைகளில் மாற்றமில்லை. மனித வாழ்வின் பிற தேவைகளும் அப்படியே. ஆகவே, மனிதர் களுக்குள் வேறுபாடு இல்லை, அது தேவையுமில்லை என்கிறார். அத்தோடு, செல்வம் பெற்றவர்களே! அதனை வறியவர்களுக்கு ஈந்து மகிழுங்கள்! எல்லாச் செல்வத்தையும் நாமே துய்ப்போம் என்று எண்ணாதீர்கள்! அதனால் பலவற்றை (அறம், பொருள், இன்பம்) இழக்க நேரிடும் என்று ஈதலின் அவசியத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். பின்னர் வருவதனை முன்னர் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். பிறப்பின் நோக்கம் மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்தலாகும். ஆனால், நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருந்து வாழ்து மற்ற வரை வாழவிடுதல் வேண்டும். அதுதான் நம்மை சொற்கத்துக்குக் கொண்டு செல்லும். 'பல்சான் றீரே! பல்சான் றீரே!..." (புறம் - 195) அமைந்த குணங்கள் யாவும் உடையீர்! மீன்முள்போன்ற நரையதிர்ந்த கண்களையும் உடையீர்!

பயனற்ற முதிரும் மூப்பினை உடையீர்! நல்வினைகள் செய்யமாட்டீராயினும் தீவினைகளையாவது செய்யாது விலகுங்கள். உங்களை யாவரும் புகழ்வதற்கும் உங்களை நல்வழியிலே செலுத்தி உய்யுமாறு செய்வதற்கும் அதுவே ஏற்றவழி யாகும் என்று புலவர் தன் பாடலில் சான்றோர்களுக்குச் சொல்லும் அறிவுரை சாமானியர்க்கும் பொருந்துவதாகவே உள்ளது. புலவரின் அறிவுக் கூர்மைக்கும், பொதுநலச் சிந்தனைக்கும் சான்று பகர்கின்ற மேற்கண்ட பாடல்கள் விழுமியக் கல்வியின் அவசியம்பற்றியும் தெளிவுபடுத்துகின்றது.

**வாழ்க்கைக் கல்வி**

அடுத்து நம்மை ஈர்ப்பது பக்குடுக்கை நன்கணியார் என்னும் புலவர் பெருந்த கையின் பாடல் மனித வாழ்க்கை என்னும் நாடகத்தில் நீக்க இயலாத இரு பாத்திரங்கள் (Characters) இன்பமும், துன்பமுமே என்கின்றார். அதைத் தவிர்ப் பதோ, தள்ளிவைப்பதோ மனிதர்களால் ஆகக்கூடியதா? நடைமுறை வாழ்வில் நாம் காணுகின்ற துன்பத்தையும், இன்பத்தையும் அளிக்கக்கூடிய இரு நிகழ்வு களை நம் கண்முன் கொண்டுவந்து, வாழ்க்கைக்கான வழிமுறைகளைக் கற்பிக்கும் ஓர் 'வாழ்க்கைக் கல்வி' ஆசிரியராகவே இப்புலவர் நமக்குக் காட்சியளிக் கின்றார். இவருடைய பாடல் நெஞ்சை நெகிழவைக்கும் வாழ்வியல் பாடமாகும். "ஓரி னெய்தல் கறங்க வோரில்" (புறம் - 194) ஒரு வீட்டில் சாப்பறை (சாவு மேளம்) ஒலிக்க, இன்னொரு வீட்டிலோ திருமண மேளம் முழங்குகின்றது. ஒருத்தி பூக்களை அணிந்துகொண்டு கணவனோடு மகிழ்ச்சியாக இருக்கின்றாள், இன்னொ ருத்தி கணவனை இழந்து கண்ணீர் சொரிய நிற்கின்றாள். இத்தகைய முரண் பாடுகளோடு இவ்வுலகைப் படைத்த நான்முகன் (பிரம்மா) பண்பில்லாதவன் என அவனைச் சாடும் புலவர், மானிடர்களே! உலகத்தின் தன்மை இப்படிப்பட்டதுதான் இதற்காக நீங்கள் வருந்துவதில் பயனில்லை. எதையும் தாங்கும் இதயத்தோடு வீட்டின்பத்தை (சொர்க்கம்) அடைவதற்குகந்த நல்லனவற்றைச் செய்து வாழுங்கள் என்று அறிவுறுத்துகின்றார் பக்குடுக்கை நன்கணியார். துன்பம் கண்டு துவளாத மனநிலை மட்டும் நமக்கு வாய்க்குமேயானால் வாழ்வில் வெற்றி பெறுவது ஒன்றும் சிரமமான செயலில்லை என்பதனை திருக்குறளும் தெளிவுபடுத்துகின்றது.

**"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
**அல்லற் படுவ தெவன்"** (குறள் - 379)

நல்லனவற்றைக் கண்டு மகிழ்கின்ற மனிதன், துன்பம் வரும் வேளையில் துவள்வது ஏன்? என வினவும் தெய்வப்புலவர் 'இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகவே மதியுங்கள்' என்றே வலியுறுத்துகின்றார். எனவே, வாழ்க்கையின் நிலையாமையினையும் அதனை வெற்றி கொள்வது பற்றியும் தெளிவாகவே வலியுறுத்தப்படுகின்றது.

**சேர்ந்து வாழுதலுக்காகக் கற்றல்**

ஒப்பரவு அறிதல், செய்ந்நன்றி அறிதல், அவையறிதல், இடனறிதல், ஒப்பரவறிதல், காலமறி தல், குறிப்பறிதல், வலியறிதல் என்ற தலைப்புக்களில் சேர்ந்து வாழ் தலுக்கான கற்றல்முறை வருகின்ற போதும் அவற்றில் ஒப்புரவறிதல் சிறப்புடைய தாகும். இதனை உலகநடையறிந்து ஒழுகுதல் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்**
**பேரறிவாளன் திரு"** (திரு - 215)

இன்று நாம் ஒழுக்கத்தின் அவசியம் பற்றியும் செர்ந்து வாழ்வதால் அடையும் சிறப்புப் பற்றியும் பேசுகின்றோம். அதாவது, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வே என்கின்றோம்.

**வாழக்கற்றல்**

வாழ்க்கை என்பது மனிதனுக்கு இன்றியமையாத ஒன்று. அதனைச் செம்மை யாகவும், பொறுமையாகவும்மனித நேயத்துடன் கொண்டு செல்லவேண்டும். வாழுகின்ற காலத்தில் நல்ல செயற்பாடுகளைச் செய்து வாழ்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படு கின்றது. வாழக்கல் என்று அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைப்பர்.

**"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"** (திரு - 664)

**தெளிவாகக் கற்றல்**

**"கற்க கசடற கற்க கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"** (திரு - 391)

கற்கத் தகுந்த நூலைத் தெளிவாகக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பின்னர் கற்ற கல்விக்கு ஏற்ப நடைமுறையில் ஒத்துச் செல்கின்ற வகையில் சரியான

நெறியில் நிற்க வேண்டும். பிழையறக் கற்று வாழக்கையில் ஒழுகுவதனால்தான் குற்றம் நீங்குகின்றது. கல்வியின் நோக்கம் வாழ்க்கையை சீர்செய்து சிறப்பாக வாழவைப்பதாகும். இதனை "வாழக்கல்" என்பர். தெளிவாகப் பெறுகின்ற கல்வியால் தான் இடர்களைக் களைய முடியும். கற்கின்ற பாடப்பொருளை அனுபவமாக்கி கல்வியின் மாண்பினைப்பேண வேண்டும். கல்வியறிவு ஒரு மனிதன் இவ்வாறு தான் இருக்கவேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. 'கசடறக் கற்றல்" பற்றிய எண்ணக்கருவுக்குப் பலர் பலவாறு விளக்கம் தந்துள்ளனர். பாரதியார் 'கற்றது ஒழுகு" என்றும், பிளட்டோ 'கல்லாமைதான் தீவினையின் மூலவேர்" என்றும், பாரதிதாசன் கல்லாத மூடனை 'வா" என்பார், கற்றவர்களை எல்லாரும் 'வாருங்கள்" என்றழைப்பர் என்று பலவாறு குறிப்பிடுவதனை நோக்க முடியும்.

ஒரு விடயத்தில் தெளிவு உண்டாவதற்கு தேடல் அவசியமாகும். அதனால் அவனுடைய அறிவு அதிகரிக்கின்றது. மணல் உள்ள இடத்திலே கேணி தோன்றும் போது நீரானது அளவில்லாமல் ஊறுகின்றது. அதுபோல ஒருவர் தொடர்ந்து தேடுவதாலும் அதனை ஆராய்ந்து கற்பதனாலும் அறிவு பெருகுகின்றது. இதனை கல்வியலாளர்கள் கற்றலுக்காக் கற்றல் என்பார்கள். 'கற்றது கைமண்ணளவு" என்பதற்கு ஏற்ப கல்வியானது முடிவில்லாதது. கல்வி பயில்வது அறிவு பெறுவதற் காகவே. இந்த அறிவானது ஒரு மனிதனின் வாழ்வில் நல்லனவற்றைக் கண்டு அதனைத் தம் வாழ்வில் பயன்படுத்தி வாழ்வினை இன்பமாக்கிக் கொள்வதற்கும், அல்லனவற்றைக் கண்டு அதனை விட்டு ஒதுங்கிக் கொண்டு துன்பங்கள் வாழிவில் தொடர்ந்து வராமல் காத்துக்கொள்வதற்கும் இந்த அறிவானது பெரிதும் பயன் படுகின்றது. இந்த அறிவானது மென்மேலும் வளரக் கூடியதாகும்.

**"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"** (திரு - 396)

**கற்றலுக்காகக் கற்றல்**

உலக அடிப்படையான தற்போதைய சவால்கள் தனிப்பட்டவரின் வளர்ச்சித் தேவையை வேண்டி நிற்கின்றன. அதாவது, தனிப்பட்ட வர்கள் ஒவ்வொருவரும் உலக அடிப்படையில் சிந்தித்து உள்ளூர் ரீதியாகச் செயற்படக்கூடியவர்களாக உருவாக்கப்பட வேண்டிய தேவை உலக சவால்களால் உருவாகியுள்ளன. இந்தத் தொடர்பில் Delores Commision 21 ஆம்நூற்றாண்டுக்கான கல்வி நோக்கங்களைப்

பரிந்துரைத்துச் செய்கையில் (Goal of education for the 21 first censury) முக்கியமான ஒரு கல்வி நோக்காகக் "கற்றலுக்காகக் கற்றல்" என்ற புதிய நோக்கத் தையும் காட்டுகின்றனர். இன்று கல்வி உலகில் பேசப்படுகின்ற கற்றலுக்காக் கற்றல். அறிவுக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ப உயர்ந்து நிற்கின்றது. அறிவு என்பதன் வாயிலாக அறிவுக்கோட் பாடறிந்து, அறிவின் இயல்பறிந்து, ஏற்புடைய முடிவறிந்து எனும் மூன்று விடயங்களை துலக்கமுறுவதனைக் காட்டுவார். திருக்குறளில் கற்றலுக்காகக் கற்றல் என்ற கருப்பொருளை வள்ளுவப் பெருந்தகை தெளிவுபடுத்திக்காட்டுகின்றார்.

**"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்"** (திரு - 273)

**புதிய விடயங்களைக் கற்றல்**

தலைவியிடம் இன்பம் நுகரும் தலைவனுக்கு ஒவ்வொரு கணமும் அனுபவிக்கப் படும் சிற்றின்பமானது ஏற்கனவே, அதாவது ஒருகண நேரத்துக்கு முன்னர் அனுபவித்த பொய்த்து விட்டதுபோல் இருந்தது. ஏற்கனவே உள்ளதைக் காட்டிலும் நிகழ்காலத்தில் அனுபவிக்கப்படும் இன்பமானது புதுமை பயப்பதாக உள்ளது எனும் கருத்தினை கற்றலோடு தொடர்புபடுத்தி கற்றலென்பது புதுமையைத் தேடும் செயற்பாடென்று தெளிவுபடுத்திக் காட்டுகின்றார்.

**"அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்**
**செறிதோறும் சேயிழை மாட்டு"**

அறிவிற்கு எல்லையில்லை மென்மேலும் அறிய அறிய முன்னைய அறிவின் செறிமை குறைந்துவிடும். அறிவதற்கு எல்லையின்றி மென்மேலும் அறிய அறிய புதிய அறிவு வந்து சேருகின்றது.

**ஐந்து தூண்கள்**

அன்பு, நாண், கண்ணோட்டம், ஒப்பரவு, வாய்மை ஆகிய தூண்களை ஊன்றி யவன் வள்ளுவன். கண்ணோட்டம் உலக மனப்பான்மையிலிருந்து தோன்றுகின்ற ஒன்று. இன்று உலக அரங்கில் கல்வியின் நான்கு தூண்கள் பற்றிப் பேசுகின்றனர். அவை அறிவதற்காகக் கற்றல், ஆற்றுவதற்காகக் கற்றல், வாழ்வதற்காகக் கற்றல், சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல் பற்றித் தெளிவுபடுத்தப்படுகின்றது. நாம் இன்று சிந்திப்பவற்றை வள்ளுவன் அன்றே சிந்தித்து விட்டான். வெற்றி நமக்கு வேண்டு

மானால். நான்கு விசயங்கள் நமக்குத் தேவை என்பதனையும் வள்ளுவர் சுட்டுகின்றார்.

**வாசிப்புக்கோட்பாடு**

இன்றைய வாசிப்புக்கோட்பாடு அடிப்படையில் வாசகர் நூலின் பொருளைக் கட்டமைப்பதாகக் கூறும் கோட்பாட்டுக்கு இது உதாரணமாக அமைவதைக் காட்டுவர். நுண்ணிய நூல் பல கற்பினும் ஆற்றலற்ற அறிவு பெருகப்போவதில்லை. அறியும் பொருள் நூலில் இல்லை, அது வாசிப்பவரின் அறிவைப் பொறுத்தது என்பதே இங்கு புலனாகின்றது.

> **"பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்**
> **ஆகுதல் மாணார்க்கு அரிது"** (திரு - 823)

**மெய்யறிவைக் காண்பது**

அறிவைப் பெறுதல் என்பது ஆழ்ந்த பொருள் கொள்கின்றார் வள்ளுவர். கல்வி அறிவினூடாக மெய்யறிவு வந்தடைவதனை வா.செ.குழந்தைசாமி வலியுறுத்து வார். "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" திரு - 423) என்றும், 'எப்பொருள் ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்பொருள் காண்பதறிவு" (திரு - 355) எப்படிப்பட்ட பொருட்கள் எப்படியாக இருப்பினும் அப்பொருளில் மெய்ப்பொருளைக் காண வேண்டும். அதாவது, மெய்ப்பொருளின் வழி உண்மைக் கல்வியின் நிலையினை எடுத்தரைக் கின்றார். ஒரு விடயத்தினை மாணவனுக்கு கற்பித்துக் கொடுக்குமிடத்து அந்த விடயத்தில் வருகின்ற உட்பொருளினைச் சரியாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும். அதனை இன்று Turnig Point என்று கல்வியளர்கள் கூறுகின்றனர்.

**பிறருக்கு எடுத்துக்கூறுதல்**

கல்வியினைக் கற்பது என்பது இலகுவான விடயமல்ல. அதனைக் கற்றதும் ஒருவன் சிறப்படைகின்றான். அதனைவிடச் சிறப்பு தான் கற்ற கல்வியை ஒருவருக்கு விளங்கும் வகையில் எடுத்துச் சொல்வதாகும். அதில்தான் அவரவர் கற்ற கல்வியின் சிறப்புத் தங்கியுள்ளது. இதனை மேலும் விளக்கும் வகையில், மலர் என்றால் வாசம் வீசவேண்டும். வாசம் வீசாத மலர்கள் கொத்துக்கொத்தாக மலர்ந்தும் பயனேதும் இல்லை.

**"இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற**
**துணர விரித்துரையா தார்"** (திரு - 650)

## கற்பித்தல் உத்தி

கற்பித்தலுக்காக முப்பத்திரெண்டுவகை உத்திகளை தொல்காப்பியரும், நன்னூலாரும் தருகின்றனர். நுதலியறிதல், அதிகாரமுறை, தொகுத்துக் கூறல், வகுத்து மெய்ந்நிறுத்தல், மொழிந்த பொருளோடு ஒன்றவைத்தல், மொழியாததனை முட்டின்றி முடித்தல், வாராத தனான் வந்துமுடித்தல். வந்ததுகொண்டு வாராத துணர்தல், முந்து மொழிந்ததன், தலை தடுமாற்று, ஒப்பக்கூறல், ஒருதலை மொழித், தன்கோட் கூறல், முறை பிறழாமை, பிறனுடம் பட்டது தானுடன்படுதல், இறந்தது காத்தல், எதிரது போற்றல், மொழிவாம் என்றல், கூறிற்று என்றல், தான் குறியிடுதல், ஒருதலையாண்மை முடிந்தது காட்டல், ஆணை கூறல், பல பொருட் கேற்பின் நல்லது கோடல், தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல், மறுதலைச் சிதைத்துதன் துணிபுரைத்தல், பிறன்கோட் கூறல், அறியாதுடம் படல், பொருள் இடையிடுதல், எதிர்ப்பொருளுணர்த்தல், சொல்லி னெச்சஞ் சொல்லியாங்குணர்த்தல், தந்து புணர்ந்துரைத்தல், உய்த்துக்கொண்டுணர்தல், ஞாபகங்கூறல் என்பன வாகும். இன்று பல்வேறுபட்ட கற்பித்தல் உத்திகளை அறிமுகப்படுத்தினாலும் அவை இந்த உத்திகளிலிருந்து விலகிச்செல்லாது.

## வாய்மை

வாய்மை தவறாமல் வாழ்வது சிறந்த வாழ்க்கை என்பதனை தெளிவாகவே காட்டப்படுகின்றது. பண்டைய காலத்தில் அரிச்சந்திர புராணம் அதனைத் தெளிவாகவே காட்டியுள்ளது. இன்றைய வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு நாம் கற்ற கல்வியின்படி ஒழுகவேண்டும் என்று புறநானூற்றுப்பாடல் தெளிவுபடுத்தப்படுகின்றது.

**"பீடில் மன்னர் புகழ்ச்சி வேண்டிச்**
**செய்யாக் கூறிக் கிளத்தல்**
**எய்யா தாகின்று என்சிறு செந்நாவே"** (புறம் - 148)

## பொய்யாமை

பெய்சொல்லுவதால் வாழ்வில் அடையும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் இல்லை. ஒரு மனிதன் வாழ்க்கையைச் செம்மையாக வாழ்வதற்கு பொய்கூறாமல் இருக்கும் விழுமியமே சிறந்த வழி என்பதனை புறநானூறு தெளிவுபடுத்துகின்றது.

"வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல்" (புறம் - 139)

**நன்மைசெய்தல்**

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்" (புறம் - 195)

"பாடறிந்து ஒழுகும் பண்பி னோரே" (புறம் - 197)

"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்"

என்ற கலித்தொகைப் பாடலடியை ஒத்ததாகும்.

படைப்பாற்றலைத் புறநானூறு தெளிவுபடுத்துகிறது. இத்தகைய படைப்பாற்றல் வழியாக மனிதவள மேம்பாட்டுச் சிந்தனைகள் விளைகின்றன. அகத்திணையின் முதல், கரு, உரிப்பொருள் களும் புறத்திணையின் அரசு, சமூகம், உலகியல்களும், புறத்திணையைப் பொறுத்த அளவில், மனிதவள மேம்பாட்டுச் சிந்தனைக் கூறு களாக உழைப்பு, மொழி, கல்வி ஆகியன விளங்குகின்றன. புறத்திணை வாழ் வியல் விழுத்திணை வாழ்வியலாக அமைதல் வேண்டும் என்பது புறநானூற்றுப் புலவர்களின் மனிதவள மேம்பாட்டுச் சிந்தனையாகும்.

**சான்றோர் நெறி நிற்றல்**

இம்மை என்று சொல்லப்படுகின்ற இப்பிறவியில் செய்யும் தருமவினை மறு பிறப்பில் பயன்தருமென்று தருமத்தை ஒரு பயனை எதிர்பார்க்கும் விலைப் பொருளாக என்னிச் செய்பவன் அல்லன். அவன் செய்வது தனக்குப் பயன் எண்ணாச் செய்கையே. ஏன் அதைச் செய்ய வேண்டு. பெரியோர்களாகிய சான்றோர்கள் அந்த வழியில் நின்றார்கள். அதே போல் அவர்கள் வழியில் அவன் நிற்கின்றான். அவ்வளவே அவன் கொடைத் திறமும்.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்.." (புறம் - 134) சுவாமி விபுலானந்த அடிகள் இப்பிறவியில் கற்ற கல்வி மறுபிறப்புக்கும் உதவும் என்கின்றார்.

**அறம்**

ஒரே பாடலில் உலகப் புகழ் பெற்ற புறநானூற்றுப் புலவன் கணியன் பூங்குன்றனும், ஆற்றிலே செல்லுகின்ற தெப்பம் போன்றது இம்மானுட வாழ்வு என்பதை அறிஞர்களின் நூல்கள் வாயிலாய் உணர்ந்து கொண்டோம். ஆகவே பெரியோரை (அறிவிலோ, செல்வத்திலோ!) வியந்து போற்றவும் வேண்டாம் சிறியோரை

இகழவும் வேண்டாம் என அறிவுறுத்துகின்றார். எத்துணைப் பொருள் பொதிந்த பொன்மொழிகள்! "கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று.." (புறம்: 192) தீதும், நன்றும், நோதலும், தணித்தலும் பிறரால் வருவதன்று.நம்மாளே விளைவதாம். சாதனை இவ்வுலகில் புதிய செய்தியன்று வாழ்தலே இனிது என மகிழ்தலும் வெறுத்து அதனை இன்னதென ஒதுக்கவும் மாட்டோம். செல்வம் வந்தவிடத்து பெரியோரை மதித்தலும் சிறியோரை இகழ்தலும் கூடாது. பொதுவாக அவரவர் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவமளிக்க வேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்து கின்றன.

## மாணாக்கர் வகை

### முதல் மாணாக்கர் (அன்னம், பசு)

அன்னம் பாலையும் நீரையும் வேறுபடுத்திப் பாலை மட்டுங்குடித்தல் போல முதல் மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறுபிரித்துக் குணத்தை மட்டுங் கொள்ளுதலாலும் பசு மிகுந்த புல்லையுடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்த பின்பு ஓரிடத்தில் போயிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக்கொண்டு மென்று தின்றல்போல முதல் மாணாக்கர் மிகுந்த கல்வி யுடைய ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியைத் தன்னுள்ளம் நிறைய கேட்டுக் கொண்டு பின் ஓரிடத்தில் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற்கொண்டு வந்து சிந்தித்தலால் அவருக்கு அவ்விரண்டும் உவமையாகக் கூறப்பட்டது. இவ்வகை மாணவர்களை கல்வியலா ளர்கள் மீத்திறன் உடைய மாணவர்கள் என்கின்றனர். இவர்களுக்கான மீத்திறன் மட்டம் 130க்கும் அதிகமானதாகும் என்பர்.

### இடை மாணாக்கர் (மண், கிளி)

மண் உழவர் வருந்திப் பயிர் செய்யும் முயற்சியளவினதாகிய விளைவைத் தன்கண் காட்டல்போல இடைமாணாக்கர் ஆசிரியர் வருந்திக் கற்பிக்கும் முயற்சி யளவினதாகிய கல்வியறிவைத் தன்கண் காட்டுதலாலும், கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன் றையும் சொல்லமாட்டாமைபோல இடை மாணாக்கர் தமக்குக் கற்பித்த நூற்பொருளையன்றி வேறொரு நூற்பொருளைச் சொல்ல மாட்டாமையாலும் அவருக்கு அவ்விரண்டும் உவமையாகக் கூறப்பட்டது. இவ் வகை மாணவர்களை கல்வியலாளர்கள் சாதாரண மாணவர்கள் என்கின்றனர். இவர்களுக்கான மீத்திறன் மட்டம் 100 தொடக்கம் 130 வரைக்குமாகும் என்பர்.

**கடைமாணாக்கர் (இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யறி (பண்ணாடை)**

பொள்ளற்குடம் நீரை வார்க்குந்தோறும் ஒழுகவிடுதல் போல, கடை மாணாக்கர் நூற்பொருளைக் கற்பிங்குந்தோறும் மறந்துவிடுதலாலும், ஆடு ஒரு செடியில் தளை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது செடிதோறும் போய் மேய்தல் போலக் கடை மாணாக்கர் ஓராசிரியனிடத்து மிகுந்த கல்வி இருந்தாலும் புலமைநிறையக் கற்றுக் கொள்ளாது பலரிடம்போய்ப் பாடங்கேட்டலாலும், எருமை குளத்து நீரைக் கலக்கி குடித்தல் போல கடை மாணாக்கர் ஆசிரியனை வருத்திப் பாடங் கேட்டலாலும், பண்ணாடை தேன் முதலியவற்றைக் கீழே விட்டு அவற் றிலுள்ள குற்றங்களைப் பற்றிக் கொள்ளுதல் போலக் கடை மாணாக்கர் நல்ல பொருளை மறந்துவிட்டுத் தீய பொருளைச் சிந்தித்துப் பற்றிக் கொள்ளுதலாலும் அவருக்கு அந்நான்கும் உவமையாகக் கூறப்பட்டது. நெய்யறியாவது நெய்யை வடிகட்டுங் கருவி. பன்னாடை என்பதும் அது. பதநீரை வடிகட்டுங்கருவியைப் பண்ணாடை என்பது இந்நாள் வழக்கு. இவ்வகை மாணவர்களை கல்வியலா ளர்கள் மீத்திறன் குறைந்த மாணவர்கள் (மெல்லக் கற்போர்) என்கின்றனர். இவர்களுக்கான மீத்திறன் மட்டம் 70க்கும் குறைவானதாகும் என்பர்.

**குற்றமும் தண்டனையும்**

> **"வழிபடு வோரை வல்லறி நீயே**
> **பிறர்பழி கூறுவோர் மொழி தேறலையே.."** (புறம் - 10)

ஒன்றைச் செய்து பின் அதற்காக வருந்தாது முதலில் எதனையும் செம்மையாகச் செய்பவன் நீ. உனது வழியில் செல்பவரை உணர்ந்துகொள்பவன் நீ. புறங் கூறுபவர்கள் சொற்களை நீ கேட்கமாட்டாய். கொடுமை என்று மனதிலே முடிவாகக் கருதிய ஒன்றை ஒருவன் செய்யக் கண்டால் முறைதவறாது நடுநிலை நின்று ஆராய்ந்து அவனுக்குரிய தகுந்த தண்டனையை அழிபாய். அவனே வந்து உனது திருவடிகளைப் பணிந்து உன் முன்னே நின்றால் தண்டணையும் குறைந்து உன்மீது முன்னிலும் பெரிதாக அவன்மீது அன்பு பாராட்டுவாய். உன்னை அடைந்து எம் துயரை தீர்த்துக்கொள்ளக் கருதி நானும் வந்தேன். உன்னைப் புகழ்கின்றோம். உண்மையில் தண்டணை என்பது குற்றம் செய்தவன் அதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்க வேண்டும் என்பது. நடுவுநிலை தவறாது இருக்கவேண்டும் என்பதும் தெளிவுபடுத்தப்படுகின்றது. மாணவர்களுக்குத்

தண்டனை கொடுக்கும்போது அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருக்குமாக இருந்தால் பாடசாலையிலும் சமூகத்திலும் முரண்பாடுகள் எழ வாய்ப்பில்லை.

## புளூமின் கற்றல் கோட்பாடு

**"மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்து கொண்டு**
**இனத்தின் சேர்த்தி உணர்த்த வேண்டும்"**

(தொல்காப்பியம் மரபியல் - 112)

இதனை நோக்கும்போது, தொல்காப்பியர் ஓர்தல் (அறிவாற்றல்) - Cognition நிலையைப் பற்றிக் கூறுகிறார் என்பது மிகத் தெளிவாகின்றது. உளவியல் கூறுகளான ஓர்தல், உணர்தல், செயற்பாடு என்னும் மூன்றில் ஓர்தலையே அவர் முதன்மைப்படுத்துவது சிறப்பாகும். அறிவு, புரிந்துகொள்தல், செயற்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல், ஒருங்கி ணைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்னும் ஆறு கூறுகளையும் ஒருங்கிணைத்தே தொல்காப்பியம் கூறுகின்றது. இதனை பென்சமின்வுளூம் நினைவிலிறுத்தல், விளக்குதல், பிரயோகித்தல், பகுப்பாய்தல், மதிப்பிடுதல், உருவாக்குதல் எனக் காட்டுகின்றார்.

தொகுத்து நோக்கும்போது கற்பித்தல் - கற்றல் வளம்பெறுவதற்காக பண்டைய தமிழ் இலக்கியங்களில் தெளிவுபடுத் தப்பட்ட கல்வியின் செல்நெறிகள் பல. அவற்றுள் பிரதானமாகப் பேசப்படும் சிலவற்றுக்கான கருவூலங்களே இங்கு ஆராயப்பட்டுள்ளன. அத்தகைய செல்நெறிகள் நவீன கல்விக்கோட்பாடுகளிலும் தத்துவங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எனவே பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கூறப்படாத ஒன்று நவீனகல்வியலில் வரவில்லை என்பது ஆய்வின் மூலம் கண்டுகொள்ளவதோடு, தமிழ் இலக்கியங்களைச் சரியாகப் போதிப்பதற்கும், அதனை முன்கொண்டு செல்வதற்கும் ஆசிரியர்கள் தமிழ் அறிவுடன் கல்வி அறிவினையும் பெறவேண்டிய அவசியமும் உள்ளன.

## சான்றாதாரங்கள்

1. கணேசையர், சி. தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர், பாரத்துவாசி நச்சினாக்கினியாருரையும், திருமகள் அழுத்தகம், சுன்னாகம். (வி.தெ)
2. கௌமாரீஸ்வரி, எஸ். (பதிப்பாசிரியர்) திருக்குறள் - பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை. (2002)

3. சாமிநாதையர், உ.வே. எட்டுத்தொகையுள் எட்டாவதாகிய புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். (1985)

4. சுந்தரமூர்த்தி, கு. (பதிப்பாசிரியர்) தொல்காப்பியம் சொல்லதிகாரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். (1966)

5. தொல்காப்பியம், எழுத்திகாரம் - இளம்பூரணர் உரை.(1955) திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை.

6. புலியூர்கேசிகன், (பதிப்பாசிரியர்) ஆறுமுகநாவலர் நன்னூல் காண்டிகையுரை,

7. பகுதி - 1, 2 எழுத்ததிகாரம், முல்லைநிலையம். (1991)

# கற்பித்தல் – கற்றலுக்கான மூலத்தைத் தெளிவுபடுத்திய தொல்காப்பியம்

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம் தமிழ் நூல்களில் முதல் நூல் என்ற பெருமையினைப் பெறுகின்றது. இந்நூல் எழுத்த திகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பகுப்புக்களை உடையது. தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம், தொல்காப்பியம் செய்தவர் தொல்காப்பியர் என்னும் இருவேறு கருத்துக்கள் அறிஞர்களிடையே நிலவிவருகின்றன. தொன்மை + காப்பியம் = தொல்காப்பியம். மிகவும் தொன்மையான காப்பிய நூல் என்பதாலும் இது "தொல்காப்பியம்" என்று அழைக்கப்படுகிறது. வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த நூல்களாகிய தொல்காப்பியமும் நன்னூலும் மொழி இலக்கணத்தோடு மொழிக் கல்விக்கான சில கொள்கைகளையும் உருவாக்கியிருக்கின்றன அக்கொள் கைகளைத் தற்கால அறிவியல் மொழி கற்பித்தல் கொள்கைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அந்த இலக்கணங்களின் சிறப்பு மேலும் புலப்படுகிறது. இலக்கணம் ஒரு மொழியின் அமைப்பை விளக்குகிறது. மொழி பயில்பவர்கள் / இலக்கணம் பயில்பவர்கள் மொழியின், அமைப்பின் உள்ளும் புறமும் நோக்கி ஆராய்ந்து அந்த அறிவை வெளிப்படுத்துவதோடு, உரையாடலில் அல்லது கருத்துக் கோவை யில் தம் திறன்களை வெளிப்படுத்த வேண்டியதோடு, சொற்பொருளையும் உயர் திறனான இலக்கியத் திறனாய்விலும் ஈடுபட வேண்டிய நிலைக்கு உள்ளாகின் றார்கள். மேற்கூறிய எல்லாவற்றையும் உள்ளடக்கியிருந்தாலும் தொல்காப்பியம், நன்னூல் போலக் கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டில் ஈடுபாடு காட்டவில்லை. எனினும் கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டுக்கான ஏராளமான மூலங்களை எடுத்தியம்பியுள்ளது. மொழியறிவு மட்டுமே போதாது. அத்தோடு, சமுதாய நோக்குகளையும் மாற்ற வேண்டும் என்பது தொல்காப்பியத்தின் குறிக்கோளாக அமைகின்றது. தொல்காப்பியரைப் பொறுத்தவரை அறிவின் வளர்ச்சியே கல்வியின் குறிக்கோள். அதாவது, மொழியின் இலக்கணத்தைப் புரிந்துகொள்ளுதல்,

செய்யுளை அறிதல், சமுதாயப் பண்பு நலன்களைப் பாராட்டல் முதலியவற்றை வளர்த்துக்கொள்ளுதல் இதை உரமாகக் கொண்டுதான் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களில் அவர் பிரித்து ஆராய்ந்து முறைப்படுத்துகிறார். முதலிரண்டு அதிகாரங்களும் மொழியின் இலக்கணக் கூறுகளைக் கூற, மூன்றாம் அதிகாரம் ஒன்பது இயல்களில் சமுதாய நடத்தையை வலியுறுத்துகிறது. தொல் காப்பியத்தின் அடிப்படையில் நோக்கும்போது நவீன யுகத்தில் நடை முறையில் உள்ள கல்விச் சிந்தனைகளின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும், தத்துவங்களுக்கும் அடிப்படையாக தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கின்ற கல்விக் கொள்கைகளும் மொழியியல் சிந்தனைகளும் கற்பித்தல் - கற்றல் உத்திகளும் அரண் சேர்க்கின்றன என்பது இந்த ஆய்வின் கருவாக அமைவதோடு, அவை பற்றிய விளங்கங்களும் விதப்புரைகளும் காரண காரிய அடிப்படையில் முன்வைத்து ஆய்வு மெய்ப்பிக்கப் படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

1. தொல்காப்பியத்தில் காணப்படுகின்ற கல்விச் சிந்தனைகள் தற்காலக் கல்வி யியல் நடை முறையில் வேரூன்றியுள்ளமை தெளிவுபடுத்தித் காட்டப்படு கின்றன.

2. தொல்காப்பியரைப் பொறுத்தவரை அறிவின் வளர்ச்சியே கல்வியின் குறிக் கோள் என்பார். அதாவது, மொழியின் இலக்கணத்தைப் புரிந்துகொள்தல், செய்யுளை அறிதல், சமுதாயப் பண்பு நலன்களைப் பாராட்டுதல் முதலிய வற்றை வளர்த்துக் கொள்ளுதல் என்பன கண்டறியப்பட்டு முன்வைக்கப்ப டுகின்றது.

3. கற்பித்தல் - கற்றல் என்கின்ற எண்ணக்கருவானது இன்று கற்பித்தல் - கற்றலை மேற்கொள்பவர்களிடையே முரண்பாடான அடிப்படையில் வேறு பட்டுக்காணப்படுவதனை அறியமுடிகின்றது. அவற்றுக்கான காரணங்கள் தொல்காப்பிய நூலின் அடிப்படையில் மேலும் கண்டு கொள்ளப்பட்டு தெளிவாக முன்வைக்கப்படுகின்றன.

4. தற்காலக் கல்வியியல் நோக்கில் பார்க்கும் போது மொழி "விதிகளின் தொகுப்பு" என்றும் மொழி "திறன்களின் தொகுப்பு" என்றும் கூறப்படுகின்றமை தொல் காப்பியத்தில் தெளிவுபடுத்தப்படுகின்றன.

5. மொழியறிவு மட்டுமே போதாது. அதோடு, சமுதாய நோக்குகளையும் மாற்ற வேண்டும் என்பது தொல்காப்பியத்தின் குறிக்கோளாக அமைவது வெளிப் படுத்தப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

'கற்பித்தல் - கற்றலுக்கான மூலத்தைத் தெளிவுபடுத்திய தொல்காப்பியம்" எனும் தலைப்பில் ஆய்வுப் பிரச்சினை முன்வைக்கப்படுகின்றது. இன்றைய பாடசாலைக் கட்டமைப்பில் கற்பித்தல் - கற்றலை முன்கொண்டு செல்வதில் இருக்கின்ற முரண் பாட்டுத் தன்மை? கருப்பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ளாமைக்கான காரணம்? ஏன் மாணவர்கள் பாடங்களைக் கற்பதற்குத் தயங்குகின்றனர்? இதற்கு யார் காரணம்? இத்தகைய் பிழைகள் எங்கே நிகழ்கின்றன? இதனை எவ்வாறு நிவர்த்தி செய்யமுடியும்? போன்ற வினாக்களை முன்வைத்து இந்த ஆய்வு அடையாளப்படுத்தப்படுகின்றது. இன்று மாணவர்கள் கற்பித்தலைச் சரியாக விளங்கிக் கொள்ளாமை காரணமாக பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளு கின்றனர். அதிலிருந்து விடுதலை பெறமுடியாத வகையில் எதிர்கொள்ளுகின்ற இந்தப் பிரச்சினைக்கு கற்பித்தல் - கற்றலில் உள்ள இடைவெளி காரணம் என்பது கண்டறியப்படுகின்றது. அதிகமான ஆசிரியர்கள் இது வரையும் மரபு அடிப்படையில் பின்பற்றப்பட்டுவந்த கற்பித்தல் முறையினைப் பின்பற்றியே பாடப்பொருளைக் கற்றுக் கொடுக்கின்றார்களேயொழிய இலகுவான முறையில் முன்கொண்டு செல்லக்கூடிய முறைகள் பின்பற்றப்படவில்லை என்பதோடு, தொல்காப்பியத்தில் வருகின்ற கற்பித்தல் - கற்றலுக்கான கல்விச் சிந்தனைகளும் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை என்பதும் கண்டுகொள்ளப்படுகின்றது. ஆசிரியர்கள் கற்பித்தல் பற்றிய கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் சரியாக விளங்கிக் கொள்ளா ததினால் கற்பி த்தலை மேற்கொள்வதில் முரண்பாடுகளைச் சந்திக்கின்றனர். அதாவது, தொல்காப்பியத்தில் வருகின்ற கற்பித்தல் - கற்றலுக்கான மூலங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு வகுப்பறை முகாமைத்துவம் முன்கொண்டு செல்லப் படுமாக இருந்தால் கல்வியின் செல்நெறி மேலும் வலுப்படுத்தப்படும் என்பது கண்டறியப்பட்டு முன்வைக்கப்படுகின்றது.

### ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது கற்பித்தல் - கற்றலுக்கான மூலங்களைக் கண்டறிந்து அதனை எவ்வாறு இலகுவாக கொண்டுசெல்லமுடியும் என்பதனை முன்வைக்கின்றது. விடயங்கள் தொகுக்கப் பட்டும் வகுக்கப்பட்டும் முன்கொண்டு செல்லப்பட்டுவதினால் மதிப்பீட்டு ஆய்வு முறையும். தொல்காப்பியத்தின் கற்பித்தல் - கற்றலுக்கான மூலங்கள் தற்கால கல்வியல் மற்றும் கற்பித் தல் - கற்றல் நிலைமைகளுடனும் நன்னூலுடனும் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதனால் ஒப்பீட்டு முறை ஆய்வு முறையும், விடயங்கள் காரண காரிய அடிப்படையில் தற்கரீதியாக நிருபிக் கப்பட்டு நுட்பமான அடிப்படையில் முன்வைக்கப்படுவதி னால் பரிசோதனை முறையிலான ஆய்வு முறையும் முன்வைக்கப்படுகின்றது. இந்த ஆய்வு கற்பித்தல் - கற்றல் இலகுதன்மை கருதி மதிப்பீடு, ஒப்பீடு, பரிசோதனை ஆகிய ஆய்வு முறைகளில் முன்வைக்கப்ப டுகின்றன.

### கண்டுபிடிப்புக்களும் ஆலோசனையும்

கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டுக்கான ஏராளமான தகவல்களைத் தொல்காப்பியம் எடுத்தியம்பியுள்ளது. மொழியறிவு மட்டுமே போதாது. அதோடு, சமுதாய நோக்கு களையும் மாற்ற வேண்டும் என்பது தொல்காப்பியத்தின் குறிக்கோளாக அமை கின்றது. தொல்காப்பியரைப் பொறுத்தவரை அறிவின் வளர்ச்சியே கல்வியின் குறிக்கோள். அதாவது, மொழியின் இலக்கணத்தைப் புரிந்து கொள்ளுதல், செய்யுளை அறிதல், சமுதாயப் பண்பு நலன்களைப் பாராட்டல் முதலியவற்றை வளர்த்துக் கொள்ளுதல் என்பனவற்றைத் தெளிவுபடுத்துகின்றார்.

தொல்காப்பியத்தின் முதலிரண்டு அதிகாரங்களும் மொழியின் இலக்கணக் கூறுகளைக் கூற, மூன்றாம் அதிகாரம் ஒன்பது இயல்களில் சமுதாய நடத்தையை வலியுறுத்துகிறது. அகத்திணையில் சமுதாய நடத்தையையும், புறத்திணையில் அரசியல் நடத்தையையும் களவியல், கற்பியல் இரண்டும் குடும்ப நடத்தையையும், மெய்ப்பாட்டியல் உணர்வுகளின் வெளிப்பாட்டையும், உவமையியல் ஒரு சில பகுத்தறிவுச் சிந்தனைகளையும் ஒருவகை யதார்த்தத்தையும், செய்யுளியல் செய்யுள் யாத்தல் மற்றும் இசைக் கூறுகளை தெளிவுபடுத்தல், பொருளியல் விதி விலக்குகளையும், மரபியல் கற்றல் மற்றும் உயிரியல் கூறுகளையும் கூறுவதி லிருந்து தொல்காப்பியரின் மொழிக் கல்வியின் குறிக்கோள்கள் தெளிவாகின்றன.

இயற்கையான வாழ்க்கையோடு தொடர்புபடுத்தித் தொல்காப்பியம் வாழ்வையும், கல்வியையும் ஆராய்வதால் இங்கு நீதிக் கல்விக்கும் ஆண்டவன் பற்றிய உணர்வுக்கும் வழியில்லாமல் போகின்றமை கண்டறியப்படுகின்றது. சமுதாயவியற் கூறுகளையும், சமுதாய மொழியியற் கூறுகளையும் மொழி மற்றும் இலக்கிய அறிவுக் கூறுகளையும் கற்றலே தொல்காப்பியத்தின் குறிக்கோளாக அமைகின்றது. கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டின் அடுத்த கூறு பாடநூல் - நூல். இன்றையக் காலகட்டத்தில் பாடப்பொருள்கள் எனக் கூறப்படுபவை அச்சு, ஒலி, ஒளி, பல்லூடகம் என்னும் நான்கு ஊடகங்களிலும் அமைகின்றன. தற்காலப் பாடங்கள் தயாரித்தல், முறையான முறையில் தெரிவு செய்தல், அடுக்குதல், விளம்பல், மதிப்பீடு செய்தல் எனும் நான்கு கூறுகளும் மிகச்சிறப்பாகப் பேசப்படுகின்றன. தொல்காப்பியமும் நன்னூலும் மிகச் சிறப்பாகப் பாடப்பொருள் உருவாக்கத்தை விளக்குகின்றன. நூல் எனப்படுவது இங்கு பாடநூலாகக் கொள்ளப்படுகின்றது. எந்த ஒரு நூலுக்கும் இக் கூற்று ஓரளவு உண்டு. பாடநூலாக்கம் கடந்த ஒரு சில நூற்றாண்டு காலமாக வளர்ச்சி அடைந்து அது ஓர் அறிவியல் கூறாக மாறியுள்ளது. பயன் அடிப்படையிலும் ஆய்வு அடிப்படையிலுமான இம் மாற்றங்களுக்கு மூலமாகத் தொல்காப்பியம் விளக்குகின்றது.

இன்று பெரிதளவும் பேசப்படுகின்ற மொழி மற்றும் உள்ளடக்கத் தெரிவு, விளக்க அமைப்பு, அமைப்பு முறையிலான மற்றும் புரிந்து கொள்ளல் அடிப்படையிலான அடுக்கமைவு, இவற்றைப் பயில்நரின் கூறுகளின் அடிப்படையில் விளம்புதல், பயிற்சி, கற்பித்தல் முறைகள், கற்றல் கோட்பாடுகள், தேர்வு போன்ற வற்றோடு முழுவதுமாக ஒப்பிட்டுக் கூற முடியாது இருக்கின்றமையும் கண்டு கொள்ளப்படுகின்றது.

அறிவியல் கூறுகளின் சிறப்பியல்புகளையும் நுண் அமைப்புகளையும் தொல்காப்பியம் எடுத்தியம்புகின்றது. தொல்காப்பியத்தில் பாட்டு, உரை, வாய்மொழி, நூல், பிசி, அங்கதம், முதுசொல் என ஏழு வகையாகப் பாடப்பொருள்களை வகைப்படுத்தியிருப்பதைக் காணலாம். கல்வியின் பாடத்திட்டத்தின்படி அமைவது பாடநூல்கள். தற்கால பாடநூலாக்கம் தெரிவுசெய்தல், படியமைப்பு செய்தல், வழங்குதல், மதிப்பிடுதல் என்னும் நான்கையும் முக்கியக் கொள்கைகளாகக் கொள்வது போலவே தொல்காப்பியரும் இவற்றை வெகுச் சிறப்பாக விளக்குகிறார்.

**ஈர் ஐங் குற்றமும் இன்றி நேரிதின்**
**முப்பத்திரு வகை உத்தியொடு புணரின்**
**நூல் என மொழிய நுணங்கு மொழிப் புலவர்.** 100 (மரபியல்)

இவற்றைப் போன்றே பாடநூலில் அமையக் கூடாத பத்துக் குற்றங்களைப் பற்றியும் தெளிவாக்குகிறார். கூறியது கூறல், மாறு கொளக் கூறல் போன்ற பத்து குற்றங்களையும் பாடநூலாக்கத்திற் கானவையாகக் கொள்ளலாம். அதே போன்று அவற்றைக் கற்பித்தலின் உத்திக் குறைகளாகவும் கொள்ளலாம் என்பதும் விளக்கப்படுகின்றது. இந்த விடயங்கள் மனம் கொள்கின்ற வகையில் அவை விளக்கப்பட வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்து ஆகும். இன்னொரு வகையான பகுப்பையும் மரபியல் 95 - 112 வரிகளில் காண்கிறோம். முதல் நூல் தொகுத்தல், வகுத்தல் என்பனவற்றைக் கூற, வழி நூல் தொகை விரி, மொழிபெயர்ப்பு என்பன வற்றைக் கூறுகின்றன.

மேற்கூறிய வரிகளில் தொல்காப்பியம் தருகின்ற பகுப்பாய்வு, மொழிகற்பித்தல் துறைக்கு மிகச் சிறந்த ஒரு பங்களிப்பாகும். பாடங்களும் உள்ளடக்கப் பொருளும் விளம்பப்படும் போது அதில் மயக்கம் ஏற்படாதிருக்க வேண்டும் என்பது இன்றைய சிந்தனையாகத் தோன்றினும் அதையே தொல்காப்பியம், 'நூண்ணிதின் விளக்-கல் அது அதன் பண்பே" (தொல். செய். 159) 'நுண் மையொடு புணர்ந்த" (தொல். மரபியல் 102) 'ஏது நடையிலும் எடுத்துக் காட்டினும்" (தொல். மரபியல் 104) இம் மூன்று சூத்திரங்களுமே பாடங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான கூறுகளே என்பதும் தெளிவாக முன்வைக்கப் படுகின்றன.

தொல்காப்பியத்தின் வழி நோக்கும் போது தொல்காப்பியர் ஓர்தல் / அறிவாற்றல் (Cognition) நிலையைப் பற்றிக் கூறுகிறார் என்பது மிகத் தெளிவாகின்றது. உளவியல் கூறுகளான ஓர்தல், உணர்தல், செயற்பாடு என்னும் மூன்றில் ஓர்தலையே அவர் முதன்மைப்படுத்துவது சிறப்பாகும். அறிவு, புரிந்து கொள்ளுதல், செயற்படுத்துதல், பகுப்பாய்வு செய்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்னும் ஆறு கூறுகளையும் ஒருங்கிணைத்துக் காட்டுகின்றார். இக்கோட் பாட்டின் வழி புளுமின் கோட்பாடு எழுகின்றது.

முதுநிலையில் பயில்வோர் தம் மொழித்திறன்களை உயர்த்துவதன் பொருட்டு, தொல்காப்பியர் பொருள்கோள் உத்திகளைத் தந்திருப்பது மிகச் சிறப்பான பங்களிப்பாகும். இலக்கியம் கற்றலின் போது அடிப்படை மொழித்திறன்க ளோடு வேறு

பல உயர்திறன்களும் தேவைப்படுகின்றன. திறனாய்வு செய்தல், பொருள் தெளிதல், பனுவல் வெளிப்படுத்துகின்ற உட்பொருள் அறிதல் போன்றவைகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த கற்பித்தல் - கற்றல் முறையைத் தொல்காப்பியர் கொடுத்திருப்பது தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகளில் மிகச் சிறப்பானதொன்றாகும்.

மாணவர்களைப் பற்றி நன்னூலும் தொல்காப்பியமும் பலவாறு கூறுகின்றன."ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' (அகம் - 26) எனத் தொல்காப்பியம் கூறுகின்ற உயர்ந்தோர் என்பது நல்லொழுக்கத்தைச் சுட்டுவதாகும். நன்னூல் (பாயிரம் - 38, 39) மாணவர் வகை களையும், "அன்னம் ஆவே மண்ணொடு கிளியே இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி' யார் மாணவர் ஆகாதார் என்பதற்கான குறிப்புகளையும் (பாயிரம் - 39) தந்திருப்பது தற்கால மொழி கற்பித்தலின் - கற்றலின் கோட்பாடுகளை ஒட்டி அமைகின்றது. "ஒரு குறி கேட்போன் இரு காற் கேட்பின்.." என்பது இன்றைய கற்பித்தல், வலுவூட்டல் (Reinforcement) என்னும் கருத்தை வெளிப்படுத்துவதாகும் "எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம் அறத்தின் திரியாகப் படர்ச்சி" என்பது மொழித்திறன்களை வலியுறுத்தும் ஒரு கூற்றாகும் இன்றைய நிலையில் மாணவர்கள் மீத்திறன் உடையோர், மீத்திறன் குறைந்தோர், மெல்லக் கற்போர் என்று வகைப்படுத்துவதனையும் கண்டுகொள்ள முடிகின்றது.

தொல்காப்பியம் மொழி கற்பித்தல் - கற்றலுக்கான இலக்கண நூல் அன்று. கற்பிக்கும் முறைகளையோ, உத்திகளையோ விளக்க முற்படவில்லை. ஆயினும் அதிலிருந்து கிடைக்கின்ற கூறுகள், தகவல்கள் பாடநூலாக்கத்துறைக்கும் பெரிதும் பயன் படுகின்றன. தொல்காப்பியமும் நன்னூலும் வெறும் மொழி இலக்கணங்கள் மட்டுமல்ல, வாழ்விலக்கணங்கள் மட்டும் அல்ல, அவை தற்கால மொழிகற்பித்தல் - கற்றல் செயற்பாட்டை ஒட்டிய, அதற்கு அடிப்படையாகின்ற கருத்துகளையும் தெள்ளத் தெளிவாக்கியிருப்பது சிறப்பாகும். தற்காலக் கல்வியியல் நோக்கில் பார்க்கும் போது மொழி விதிகளின் தொகுப்பு" என்றும் மொழி 'திறன்களின் தொகுப்பு" என்றும் கூறப்படுகின்றது எனவே, தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கின்ற கருத்துக்களில் பெரும்பான்மை தற்கால கல்வியற் சிந்தனைக்கு மூலமாக உள்ளமையினை ஆய்வின்வழி கண்டுகொள்ள முடிகின்றது.

**சான்றாதாரங்கள்**

1. புலியூர்க் கேசிகன், - பதிப்பாசிரியர், தொல்காப்பியம், முல்லை நிலையம், சென்னை.

2. புலியூர்க் கேசிகன், - பதிப்பாசிரியர், ஆறுமுகநாவலர் நன்னூல் காண்டிகையுரை, முல்லை நிலையம், சென்னை.

3. கணபதி, வி. (2007) நற்றமிழ் கற்பிக்கும் முறைகள், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.

4. நாகராஜன், கி. சீதாராம், தேவ (2015), உளவியல் நோக்கில் கற்போரும் கற்றலும், ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை.

5. நாகராஜன், கி. (2015) கற்றலும் கற்பித்தலும், ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை.

6. நுஃமான், எம். ஏ. (1999) அடிப்படைத் தமிழ் இலக்கணம், பூபாலசிங்கம் புத்தக நிலையம், கொழும்பு.

# வாழ்வை வெற்றிகொள்ளும் வள்ளுவனின் கல்விச் சிந்தனைகள்

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பல கல்வியின் செல்நெறிகள் பற்றித் தெளிவுபடுத்து கின்றன. அவற்றுள் திருக்குறள் பிரதானமாகக் கொள்ளப்படுகின்றது. திருக்குறளின் 40வது அதிகாரம் கல்வி பற்றியும், 41வது அதிகாரம் கல்லாமை பற்றியும் குறிப்பிடு கின்றது. எனினும், நூற்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களில் கல்வியின் மகத்துவம் பற்றித் தெளிவுபடுத்தப்படுவதோடு, கல்விச் சிந்தனைகள் குறித்துப் பல தொடர்களாலும் ஆங்காங்கு தெளிவுபடுத்தப்படுகின்றது. பொதுவாக வள்ளுவப் பெருந்தகை முப்பாலூடாகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்க வேண்டிய அவசியத்தி னையும், அதனால் உண்டாகும் சிறப்பினையும் தெளிவுபடுத்திச் செல்கின்றார். வள்ளுவப்பெருந்தகையின் அறிவில் மூழ்கிய கல்வியல் சிந்தனைகள் இன்றைய உலகில் பேசுபொருளாக மாறியுள்ளமையுள்ளமையினைக் கண்டுகொள்ள முடிகின்றது. திருக்குறளில் கல்வியல் சிந்தனைகள் பல மூழ்கினாலும் கட்டுரையின் கனதியினைக் கருத்திற்கொண்டு அவை மட்டுப்படுத்தப்பட்டநிலையில் முன்வைக்கப் படுகின்றது. அதாவது, 21ஆம் நூற்றாண்டின் பேசுபொருளாகவும் எதிர்காலத்தைச் செப்பனிடுவதாகவும் மாறியுள்ள கல்வியின் நான்கு தூண்கள், கற்றலுக்காகக் கற்றல், புதிய விடயங்களைக் கற்றல், கற்ற கல்வியை ஒழுங்குபடுத்திப் பிரயோ கித்தல், சேர்ந்து வாழக்கற்றல், வாழக்கற்றல், தெளிவாகக் கற்றல், கற்றோன் ஆக்குதல், கல்வி கற்கும் முறை, தனது கருத்தை வெளிப்படுத்தும் திறன் என்று நீண்டு செல்கின்ற பிரதானமான விடயங்களைக் இக்கட்டுரை அடையாளப்படுத்த முனைகின்றது.

கல்வியின் மகத்துவத்தினைப் பற்றிப் பேசுகின்ற வள்ளுவர் அதனை நியாயப்படுத்த வாழ்க்கைக் கல்வியை வெற்றி கொள்வதற்கு ஐந்து தூண்கள் பற்றிப் பேசுகின்றார். அன்பு, நாண், கண்ணோட்டம், ஒப்பரவு, வாய்மை ஆகிய

தூண்களை வாழ்க்கையில் வெற்றி பெறும் தூண்களாகக் காட்டுகின்றார். ஆனால் இன்று கல்வியின் நான்கு தூண்கள் பற்றி 1996ஆம் ஆண்டு வெளியான யுனஸ் கோவின் டெலோஸ் அறிக்கை அடையாளப்படுத்துகின்றது. அந்த நான்கு தூண்களும் அறிவதற்காகக் கற்றல், ஆற்றுவதற்காகக் கற்றல், வாழ்வதற்காகக் கற்றல், சேர்ந்து வாழ்வதற்காகக் கற்றல் என்பனவாகும். இந்த நான்கு விடயங்க ளையும் கல்வி உலகு ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துகின்றதென்றால் அது வள்ளுவத்தின் உள்ளீட்டையே பேசுகின்றது. வெற்றி நமக்கு வேண்டுமானால், ஐந்து விடயங்கள் நமக்குத் தேவை என்பதனையும் வள்ளுவர் சுட்டுகின்றார்.

மாணவன் ஆசிரியர் முன் 'யார் துணையுமின்றி நின்று கல்வியினைக் கற்றுத்தேற வேண்டும்' என்பதனை "உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்" (திரு - 395) என்று அடையாளப்படுத்த, புறநானூறு "உற்றுழி ஊதவியும் ஊறுபொருள் கொடுத்து, பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (புறம் - 183) என்று குறிப்பிடுகின்றது. கல்வியைப் பெறுவதற்காகக் கற்றவரிடத்தில் மாணவன் பணிந்து நிற்கவேண்டும். எவ்வளவுதான் இடையூறு வந்தாலும் கல்வியினைக் கற்றுக்கொள்ளவேண்டும். ஔவையார் "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று கூறுகின்றார். ஒருவன் இப்பிறவியில் கற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் உதவும் என்பதனைத் "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற் (திரு - 398) என்ற குறட்பாவினால் தெளிவுபடுத்துகின்றார். மறுபிறப்புக் கல்விச் சிந்தனையினை சுவாமி விபுலாநந்தரும் கங்கையில் விடுத்த ஓலையில் தனது நண்பன் கந்த சாமியின் கல்வி மறுபிறப்புக்கும் உதவுமென்று சந்திரனைப் பார்த்து வினவி முடிவுகொள்கின்றமையும் குறிப்பிடத்தக்கதே. ஒருவன் முற்பிறவியில் கற்ற கல்வியின் பயனால்தால் இப்பிறவியில் பல சாதனைகளை நிலைநிறுத்துகின்றான் என்று வள்ளுவப்பெருந்தகை "எழுமையும் ஏமாப் புடைத்து" எனும் தொடரால் காட்டுகின்றார். "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு (திரு - 400) ஒருவர்க்கு அழிவில்லாத சீரிய செல்வமானது கல்வியாகும். இக்கல்வியைத் திருடர்களால் களவாடிச் செல்ல இயலாது, தீயினால் எரித்துவிட முடியாது, நீரினால் அடித்துச் செல்ல முடியாது, பிறருக்குக் கொடுத்தாலும் மிகுமே அன்றி குறையாது. இத்தகைய கல்வியே கேடில் விழுச்செல்வமாகும் என்றார்.

கற்றலுக்காகக் கற்றல் என்பது இன்று பேசுபொருளாக மாறியுள்ளது. உலக அடிப்படையான சவால்கள் தனிப்பட்டவரின் வளர்ச்சித் தேவையை வேண்டி

நிற்கின்றது. அதாவது, தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் உலக அடிப்படையில் சிந்தித்து செயற்படக் கூடியவர்களாக உருவாக்கப்படவேண்டிய தேவை உலக சவால்க ளால் உருவாகியுள்ளன. இந்தத் தொடர்பில் Delores Commision 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வி நோக்கங்களைப் பரிந்துரைத்துச் செய்கையில் (Goal of education for the 21 first century) முக்கியமான கல்வி நோக்காகக் "கற்றலுக் காகக் கற்றல்" என்ற புதிய நோக்கத்தையும் முன்வைக்கின்றது. இன்று கல்வி உலகில் பேசப்படுகின்ற "கற்றலுக்காக் கற்றல்" அறிவுக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு ஏற்ப உயர்ந்து நிற்கின்றது. அறிவு என்பதன் வாயிலாக அறிவுக்கோட்பாடறிந்து, அறிவின் இயல்பறிந்து, ஏற்புடைய முடிவறிந்து துலக்கமுறுவதனைக் காட்டி யுள்ளனர். "பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்து" (திரு - 61) என்ற குறட்பாவினால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஒரு விடயத்தில் தெளிவு உண்டா வதற்குத் தேடல் அவசியமாகும். அதனால் அவனுடைய அறிவு அதிகரிக்கின்றது. மணல் உள்ள இடத்திலே கேணி தோன்றும்போது நீரானது அளவில்லாமல் ஊறுகின்றது. அதுபோல ஒருவர் தொடர்ந்து தேடுவதாலும் அதனை ஆராய்ந்து கற்பதனாலும் அறிவு பெருகுகின்றது. இதனை கல்வியலாளர்கள் கற்றலுக்காகக் கற்றல் என்பார்கள். கற்றது கைமண்ணளவு என்பதற்கு ஏற்ப கல்வியானது முடிவில்லாதது. கல்வி பயில்வது அறிவு பெறுவதற்காகவே. இந்த அறிவானது ஒரு மனிதனின் வாழ்வில் நல்லனவற்றைக் கண்டு அதனைத் தம் வாழ்வில் பயன்படுத்தி வாழ்வினை இன்பமாக்கிக் கொள்வதற்கும், அல்லனவற்றைக் கண்டு அதனை விட்டு ஒதுங்கிக்கொண்டு துன்பங்கள் வாழ்வில் தொடர்ந்து வராமல் காத்துக்கொள்வதற்கும் இந்த அறிவானது பெரிதும் பயன்படுகின்றது. இந்த அறிவானது மென்மேலும் வளரக்கூடியதாகும். என்பதனை "தொட்ட னைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் (திரு - 396) எனும் குறள் தெளிவுபடுத் துகின்றது.

இன்றைய வாசிப்புக்கோட்பாடு அடிப்படையில் வாசகர் நூலின் பொருளைக் கட்டமைப்பதாகக் கூறும் கோட்பாட்டுக்கு இது உதாரணமாக அமைவதைக் காட்டுவார். நுண்ணிய நூல் பல கற்பினும் ஆற்றலற்ற அறிவு பெருகப்போவதில்லை. அறியும் பொருள் நூலில் இல்லை, அது வாசிப்பவரின் அறிவைப் பொறுத்தது என்பதே. "பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்" (திரு - 823) புலப்படுத்து கின்றது. "கற்க கசடற கற்க கற்றவை கற்றபின்" (திரு - 391) என்பது. கற்கத் தகுந்த நூலைத் தெளிவாகக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற பின்னர் கற்ற கல்விக்கு ஏற்ப நடைமுறையில் ஒத்துச் செல்கின்ற வகையில் சரியான நெறியில் நிற்க

வேண்டும். பிழையறக் கற்று வாழக்கையில் ஒழுகுவதனால்தான் குற்றம் நீங்குகின்றது. கல்வியின் நோக்கம் வாழ்க்கையைச் சீர்செய்து சிறப்பாக வாழ வைப்பதாகும் என்பதனை "வாழக்கல்" என்பர். தெளிவாகப் பெறுகின்ற கல்வியால் தான் இடர்களைக் களையமுடியும். கற்கின்ற பாடப்பொருளை அனுபவமாக்கிக் கல்வியின் மாண்பிணைப்பேண வேண்டும். கல்வியறிவு ஒரு மனிதன் இவ்வாறு தான் இருக்கவேண்டும் என்பதனைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. கசடறக் கற்றல் பற்றிய எண்ணக்கருவுக்குப் பலர் பலவாறு விளக்கம் தந்துள்ளனர். பாரதியார் "கற்றது ஒழுகு" என்றும், பிளட்டோ "கல்லாமைதான் தீவினையின் மூலவேர்" என்றும், பாரதிதாசன் 'கல்லாத மூடனை வா' என்பார், 'கற்றவர்களை எல்லாரும் வாருங்கள் என்றழைப்பர்' என்று பலவாறு குறிப்பிடுவதனை நோக்க முடியும்.

கல்வியினைக் கற்பது என்பது இலகுவான விடயமல்ல. அதனைக் கற்றதும் ஒருவன் சிறப்படைகின்றான். அதனைவிடச் சிறப்பு, தான் கற்ற கல்வியை ஒருவருக்கு விளங்கும் வகையில் எடுத்துச் சொல்வதாகும். அதில்தான் அவரவர் கற்ற கல்வியின் சிறப்புத் தங்கி யுள்ளது. இதனை மேலும் விளக்கும் வகையில், மலர் என்றால் வாசம் வீசவேண்டும். வாசம் வீசாத மலர்கள் கொத்துக்கொத்தாக மலர்ந்தும் பயனேதும் இல்லை என்கின்றார். "இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற" (திரு - 650) என்றார். ஒப்பரவு அறிதல், செய்ந்நன்றி அறிதல், அவையறிதல், இடனறிதல், ஒப்பரவறிதல், காலமறிதல், குறிப்பறிதல், வலியறிதல் என்ற தலைப்புக் களில் சேர்ந்து வாழ்தலுக்கான கற்றல்முறை வருகின்றபோதும் அவற்றில் ஒப்புர வறிதல் சிறப்புடையதாகும். இதனை உலகநடையறிந்து ஒழுகுதல் என்று "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் (திரு - 215) வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

வாழ்க்கை என்பது மனிதனுக்கு இன்றியமையாத ஒன்று. அதனைச் செம்மை யாகவும், பொறு மையாகவும் மனித நேயத்துடன் கொண்டு செல்லவேண்டும் (திரு - 664). மெய், வாய், கண், மூக்கு, செவி அகிய ஐம்புலங்கள் சிறப்பாக இயங்குவதனால் கல்வியினை இலகுவாக விளங்கிக்கொள்ளமுடியும். கல்வியின் வெற்றிக்கு ஐம்புலப் பயிற்சி அவசியமானதாகும் என்பதனைப் 'புரோபல்' போன்ற கல்வியலாளர்கள் ஆய்வின்வழி மெய்ப்பித்துள்ளனர். கேட்டல் மூலமாகக் கல்வி இடம்பெறுவதனை திருவள்ளுவர் கேள்விச் செல்வம் என்கின்றார். "கற்றீண்டு மெய்ப்பொருள்" (திரு - 356) வீடுபேற்றினைப் பெறுவதற்கு முதற்பொருளினை

மூன்று உபாயங்கள் உணர்த்துகின்றன. அவை கேள்வி, விமர்சனம், பாவனை அவற்றுள் கேள்வி சிறப்பாகக் கூறப்படுகின்றது.

தலைவியிடம் இன்பம் நுகரும் தலைவனுக்கு ஒவ்வொரு கணமும் அனுப விக்கப்படும் சிற்றின்பமானது ஏற்கனவே, அதாவது, ஒருகண நேரத்துக்கு முன்னர் அனுபவித்த பொய்த்து விட்டதுபோல் இருந்தது. ஏற்கனவே, உள்ளதைக் காட்டிலும் நிகழ்காலத்தில் அனுபவிக்கப்படும் இன்பமானது புதுமை பயப்பதாக உள்ளது, எனும் கருத்தினை கற்றலோடு தொடர்புபடுத்தி கற்றலென்பது புதுமையைத் தேடும் செயற்பாடென்று தெளிவுபடுத்திக் காட்டுகின்றார். "அறிதோ றறியாமை கண்டற்றால் காமம் (திரு - 1110) அறிவிற்கு எல்லையில்லை மென்மேலும் அறிய அறிய முன்னைய அறிவின் செறிமை குறைந்துவிடும். அறிவதற்கு எல்லையின்றி மென்மேலும் அறிய அறிய புதிய அறிவு வந்து சேர்கின்றது.

கற்றவர்கள் எப்போதும் பொது நன்மை குறித்தே செயற்படுவார்கள். அவர்கள் சமுதாயத்தில் உயர்ந்தே நிற்பார்கள். அவர்கள் பிறர் மகிழும்படி மற்றவர்களுடன் கூடிப் பழகி நற்கருத்துக்களை வெளிப்படுத்துவார். கேடில்லாத பழைய கேள்வி ஞானம் உடையவர்கள் தம்முள்மாறுபாடு இல்லாமல் அறிவுக்கூர்மையால் கூடியிருந்து மகிழ்வார்கள். அத்தகைய நிலை எப்படியென்றால், அகன்ற வானத்தில் தேவர்கள் உறைவதாகிய உயர்ந்த உலகத்தைக் காட்டிலும் அரிதாக இருக்குமாம். கல்வியினால் மகிழும் மகிழ்ச்சிக்கு ஈடாகச் செய்வது தெய்வலோகத்திலும் இல்லை எனக் கூறப்படுகின்றது. மேலும், பலநூல்களையும் கற்று அவற்றினால் விளையும் பயனை அறிந்து யாவர்க்கும் விளங்கும் வகையில் சிறப்பாகச் சொல்லுவார்கள். "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு" (திரு - 397) கற்றவனுக்கு தன்னூர், தன்னாடு என்றில்லாமல் எல்லாநாட்டிலும் அவன் சிறப்படைவான் என்று பெருமைபடக் கூறுகின்றார்.

கல்வி என்பது அறிவைப் பயனுள்ள வழியில் பிரயோகிக்கும் கலை அதனைப் பெருக்கிக் கொள்ளும் முறைதான் கல்வி கற்றல் என்று கல்வியலாளர்கள் கூறுவர். கல்வி கற்றவர்களுக் குத்தான் இரண்டு கண்களும் கண்களாக உள்ளது. கல்லாத வர்களுக்கு அவை புண்களாகவே காட்சியளிக்கின்றன (திரு - 393). கற்றவர் முன்னர் கல்லாதவர் அனைத்தையும் இழந்து நிற்பது போன்றது (திரு - 395). கல்விதான் உயர்ந்த செல்வம் ஏனையவை யாவும் விலை மதிப்பற்றவை மட்டு மல்ல அவை செல்வமாகமாட்டாது (திரு - 400). தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்க

வேண்டும். அது அறிவினைப் புதுப்பிக்கும் (திரு - 396). அறிவைப் பெறுதல் என்பது ஆழ்ந்த பொருள் உடையது என்கின்றார் வள்ளுவர். கல்வி அறிவினூ டாக மெய்யறிவு வந்தடைகின்றது. "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" (திரு - 423) என்றும், எப்படிப்பட்ட பொருட்கள் எப்படியாக இருப்பினும் அப்பொருளில் மெய்ப்பொருளைக் காண வேண்டும் (திரு - 355). அதாவது, மெய்ப்பொருளின் வழி உண்மைக் கல்வியின் நிலையினை எடுத்துரைக்கின்றார். ஒரு விடயத்தினை மாணவனுக்குக் கற்பித்துக் கொடுக்குமிடத்து அந்த விடயத்தில் வருகின்ற உட்பொருளினைச் சரியாகச் சொல்லி மாணவர்களை சிந்தனைக்கு விருந்தளிக்க வேண்டும். இதனை இன்று Turnig Point என்று கல்விய லாளர்கள் கூறுகின்றனர்.

கல்லாமை என்ற அதிகாரத்தில் கற்றோர்களின் நிலையினைத் தெளிவுபடுத்திக் காட்டுகி ன்றார். நூல்களைக் கல்லாத ஒருவன் சபையிலே முன்னின்று எதனையும் கூறமுடியாது (திரு - 401). அவன் நல்லவனாவதற்குக் கற்றோர் சபையிலே ஒன்றையும் சொல்லாதிருக்கவேண்டும் என்று கூறுகின்றார் (திரு - 403). கல்லாத ஒருவன் உரிய சான்றுகளுடன் தமது கருத்தினை முன்வைத்தாலும் அவன் சொல்லும் கருத்து உயர்ந்ததாயினும் சான்றோர் ஏற்க முன்வரார் (திரு - 404). ஆனால், அவன் அவையஞ்சாது கற்றறிந்ததைப் பிறருக்குப் பயன்படுமாறு எடுத்து ரைக்கும் திறனையும் வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

தொகுத்து நோக்குமிடத்து வள்ளுவப்பெருந்தகை கல்வியின் செல்நெறிகளை முதல் குறளிலே அடையாளப்படுத்தி கல்வி, கல்லாமை என்ற அதிகாரங்களில் ஆழப்பாய்ச்சி, ஆங்காங்கே பல குறட்பாக்களில் தெளிவுபடுத்திச் செல்கின்றார். உலகநடை அறிந்து ஒழுகுவதற்கு கல்வி பெறவேண்டிய அவசியத்தினை அவர் அடையாளப்படுத்தியுள்ளார். இவ்வாறான ஒழுக்கக் கல்வியின் அவசியத்தினை அடையாளப்படுத்திய பின்னணியில் இன்றைய கல்விச் சிந்தனை சூழ்கின்ற மையினை உலக ஓட்டத்தில் உணர்ந்து கொள்ளமுடிகின்றது. இவ்வாறான பின்னணியில் வள்ளுவருடைய சிந்தானைகளை உள்வாங்கி உலக கல்விச் செல்நெறி பயனிப்பதனை தெளிவாகவே உணர்ந்துகொள்ள முடிகின்றது.

## சான்றாதாரங்கள்

1. இரவீந்திரன். ந (2009) திருக்குறளில் கல்விச் சிந்தனை, சமூகநோக்கில் ஒரு மறுவாசிப்பு, விஞ்சு வெளியீடு, வவுனியா.
2. கௌமாரீஸ்வரி எஸ். (பதிப்பாசிரியர்) (2002.) திருக்குறள் - பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
3. சந்தானம். எஸ் (1981) கல்வியின் தத்துவ, சமூக அடிப்படைகள், பழனியப்பா பிரதர்ஸ்.
4. சந்திரசேகரம். சோ (2008) சமகாலக் கல்வி முறைகளின் சிலபரிமாணங்கள், சேமமடு பதிப்பகம், இலங்கை.
5. தாமரைச் செல்வி.(2001) திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம், (குடும்பம், அரசு) செயலாம் பதிப்பகம், புதுச்சேரி.
6. புலவர் குழந்தை. (1964) திருக்குறளும் பரிமேலழகரும், இளங்கோ புத்தகசாலை, ஈரோடு.

# கற்றல் திறன்களை மேம்படுத்துதல்

## (இடைநிலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு)

இன்று கற்பித்தல் கற்றலில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதோடு அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் பாடசாலைக் கலைத் திட்டத்தில் காணப்படுகின்ற பிரச்சினையாக இன்று கொள்ளத்தக்கவை கற்பித்தல் திறன்களில் உள்ள சிக்கல்களாகும். இது எல்லோருக்கும் தெரிந்த விடயமாக இருந்தபோதிலும் அது பிரதான சிக்கலாக இருந்து வருகின்றமையினைத் கள ஆய்வின்வழி அறியமுடிகின்றது. பேச்சுத் திறன், கேட்டல் திறன், படித்தல் திறன், வாசிப்புத்திறன் என்பவற்றோடு உணரும் திறனும் அமையப்பெறுகின்றது. இவற்றுக்கு அப்பாலும் செய்தி திரட்டும் திறன், வினவும் திறன், கேட்டுக் குறிப் பெடுக்கும் திறன், குறிப்பினைப் பெருக்கி கட்டுரை எழுதும் திறன், சுருக்கி வரைதல் திறன், மொழியாக்கத்திறன், உரையாடல் திறன், படைப்புத்திறன் போன்றவை களையும் கொள்ளமுடிகின்றது. இவற்றுள் மேலே கூறிய ஐந்து திறன்களும் கற்பித்தல் கற்றலில் பிரதானமான இடத்தினைப் பெறுகின்றது. இந்தத் திறன்கள் சரியாகப் பின்பற்றப்படுமாக இருந்தால் கற்பித்தல் கற்றலில் காணப்படும் இடர் நீங்கி முரண்பாடற்ற தன்மை குறைவடைகின்றது.

கற்றல் திறன்களை மேம்படுத்துதல் ஆசிரியருக்கு சிறந்தது மட்டுமன்றித் அது தனி ஆழுமையும்கூட இந்தத் திறன்களும் உடையவர் மொழியைக் கையாழும் திறன் பெற்றவராவார். கேட்டல் திறனில் சிறப்புத் தன்மை கொண்டவர்கள் பேசுதல் திறனில் சிறப்புத் தன்மை பெறுவார்கள். இந்தத் திறன்கள் ஒலியை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும். இந்தத் திறன்களை உட்செல் திறன்கள் என்கின்றோம். (Receptive Skills) படித்தல் திறனைச் சிறப்பாக மேற் கொள்ளுகின்ற மாணவர்கள் எழுதுதல் திறனைச் சிறப்பாக மேற்கொள்வார்கள். இந்தத் திறன்களால் செய்திகளை அல்லது கருத்துக்களை நாம் அறிந்துகொள்கின்றோம். படித்தல்

மூலமும் எழுதுதல் மூலமும் நாம் பிறருக்கு அறிவிக்கவேண்டிய கருத்துக்களையும் செய்திகளையும் வெளியிடுகின்றோம். எனவே, இவற்றை வெளியிடும் திறன்கள் என்கின்றோம். (Expressive Skills) இந் நான்கு அடிப்படைத் திறன்களும் ஒன்றொடு ஒன்று தொடர்புடையவை அவற்றினை பாடத்தினைக் கற்பிப்பதன் ஊடாக முன்கொண்டு செல்லவேண்டும்.

இந்த ஆய்வின்வழி கற்றல் திறன்களை முன்வைத்தல், கற்பிக்கப்படுகின்ற முறையினை விளக்குதல் என்ற நோக்கங்கள் நிறைவு செய்யப்படுவதாக அமையப் பெறுகின்றது. அத்தோடு ஆய்வுப் பிரச்சினையாக பாடம் கற்பிக்கப்படும்போது நான்கு திறன்களும் முன்வைத்துக் கற்பிக்கப்படுவதில்லை. அதில் குறைபாடு நிலவுவதால் பாடப்பொருளினை விளங்கிக்கொள்வதில் முரண்பாடும் சிக்கலும் இடம்பெறுகின்றதோடு, எல்லாத் திறன்களையும் படிப்படியாக முன்வைத்துக் கற்பிக்கும் ஆற்றல்சார் திறன்கள் ஆசிரியரிடம் காணப்படாமையும் ஒரு சிக்கலான செயற்பாடாக ஆய்வின்வழி கண்டறியப்படுகின்றது. இந்த ஆய்வினை வரையறுத்து முன்வைப்பதற்காக இலங்கையின் கல்வித்திட்டத்தில் உள்ள இடைநிலை மாண வர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றார்கள். (இடைநிலை மாணவர்களாக தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்கள்). அத்தோடு ஆய்வினை இலகுவான முறையில் உதாரணத்துடன் விளக்குவதற்காக "செந்தமிழ் போற்றிய சேரன்" என்ற பாடமும் முன்வைத்து விளக்கப்படுகின்றது.

இன்று கற்பித்தல் கற்றலினை முன்கொண்டு செல்பவர்கள் கற்றல் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சியினைப் பொருத்தமாகப் பிரயோகிப்பதில்லை. அதனால், மாணவர்கள் பற்பல இடர்பாடுகளைச் சந்திப்பதனை ஆய்வுகளும் ஆய்வறிக்கைகளும் தெளிவுபடுத்துகின்றன. எனவே முதலில், நான்கு திறன்க ளையும் பற்றிக் குறிப்பிட்டுப் பின்னர் அதன் பிரயோகத் நிலையினை விளக்குகின்ற முறையில் ஆய்வு முன்கொண்டுசெல்லப்படுகின்றது.

## கேட்டல்

நான்கு திறன்களுள் கேட்டல் திறனே அடிப்படையானதும் மிக இன்றியமையாததும். கேட்டல் திறனில் குறைபாடுடையவர்கள் பேச்சுத் திறனில் குறைபாடுடையவர்களாக இருப்பார்கள். அத்தகைய மாணவர்கள் வகுப்பிலும் பாடப்பொருளினை விளங்கு வதில் குறைபாடுடையவர்களாகவே இருப்பார்கள். இந்த நிலையினை அகற்று

வதற்காக ஆசிரியர் பாடத்தினை ஆர்வமூட்டித் தொடங்கவேண்டும். அதற்காக அவர் கதைசொல்லி ஆரம்பிக்கலாம். பின்னர் சிறிய சிறிய வினாக்களைக் கேட்டும் உரையாடியும் நகைச்சுவையாக கற்பித்தல் துணைக்கருவிகளுடன் முன்கொண்டு செல்லலாம். ஆசிரியர் முதலில் பாடப்பொருளினைச் சிறப்பாக தெளிவுபடுத்தியதன் பின்னரே ஐயங்களைக் கேட்பதற்கு வழிப்படுத்தவேண்டும். "பல்வேறு நோக்கங் களும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்கு வார்" எனும் தேர்ச்சிக்கு எற்ப ஆசிரியர் பாடத்தினை முன்வைக்க வேண்டுமாக இருந்தால் ஆசிரியர் பாடத்தின் உள்ளடக்கத்தினை சிறப்பாக முன்வைக்கவேண்டும். அதாவது பாடச் சுருக்கத்தினை கற்பித்தல் திறன்களின் அடிப்படையில் முன்வைப்பது அவசியமாகின்றது. கதையினை மாணவர்கள் விரும்பிக் கேட்பதால் பாடத்தினைக் கதைவடிவில் முன்வைப்பது சிறப்பானதாகும். கதைவடிவில் முன்வைக்கும்போது பாடத்தின் முழுமையும் முன்வைக் கப்படவேண்டும். அவ்வாறு முன் வைப்பதனால் பாடத்தின் உள்ளடக்கத்தினை மாணவன் இயல்பாக விளங்கிக் கொள்கின்றான். அதனைத் தொடர்ந்து அவன் "கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார்" என்ற தேர்ச்சி மட்டத்தினை அடைகின்றான். பொதுவாக வகுப்பறை முகாமைத் துவம் என்பது முற்றிலும் இருவழி தொடர்பாடல் சார்ந்ததாகும். ஆகவே மாணவர் களின் கேட்டல் திறனை அதிகரிப்பதற்காக அவர்கள் பெரிதும் முயற்சி செய்ய வேண்டும். கவனத்துடன் கேட்டல், பாடப் பொருளினைப் கூறுகளாகப் பிரித்து விளங்கச் செய்தல், சொற்களின் பெருளையும் சொற்றொடர்களின் பொருளையும் அறிதல், பாடத்தின் நுண்பொருளை அறிதல், கருத்துக்களின் தொடர்ச்சியினை அறியச் செய்தல், மையக் கருத்தினை அறிதல், முதன்மை மற்றும் சிறப்புக் கருத்தக்களை அறிதல், உணர்வு நிலையினை அறிந்து கொள்ளுதல் முதலிய அறிவினை வெளிக்கொணரும் வகையில் கற்பிப்பது சிறப்பானதாகும்.

### பேச்சு

கேட்டல், திறன்கனைத் தொடர்ந்து பேச்சுத் திறனுக்கு வரவேண்டும். நம்முடைய கருத்தக்களை வெளியிடுவதற்குப் பொருளுடைய சொற்களைக் கூறுவதற்கு இது வழிவகுக்கின்றது. "செந்தமிழ் போற்றிய சேரன்" பற்றிய பாடப்பொருள் பற்றி ஆசிரியர் பேசிக்காட்டுதல் வேண்டும். ஆசிரியர் பேசும் போது பேச்சின் பண்புகளை அனுசரித்துப் பேசவேண்டும். பேச்சு என்பது ஒருவருடைய ஆளுமையினை வெளிப்படுத்தவதாகும். பேச்சுத் திறனை வளர்ப்பதற்காக ஆசிரியர்கள் மாணவர்க

ளுக்குத் தெளிவாகவும் திருத்தமாகவும் பேசுவதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல் வேண்டும். ஆரம்பத்திலே வாய்மொழிப் பயிற்சியினைப் பெறுதல் அவசியமான தாகும். பல சமூகங்களில் இருந்து மாணவர்கள் பாடசாலைகளில் கற்பதனால் பல பிரதேசக் கிளைமொழிகள் வரவாய்ப்பு ஏற்படுகின்றது. அதனை ஒரு பொது மொழிக்குள் கொண்டுவருவது அவசியமாகும். அதன் பின்னர் ஒலிப்புப் பயிற்சி, நாநெகிழ் பயிற்சி, நாபிறழ் பயிற்சி, போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஒருவர் பேசும்போது மற்றவர் கேட்பதும், அதற்கு விடை யளிப்பதும், உரையாடுவதும் என்ற அடிப்படையில் பேச்சுத்திறனை வளர்க்கலாம். இவ்வாறான பயிற்சிகளைச் செய்யும்போது பேசும் திறன் தானகவும் இயல்பாகவும் வளர்ந்துவிடுகின்றது.

## வாசிப்பு அல்லது படித்தல் திறன்

கேட்டல், பேச்சுத் திறனில் பாடத்தினை நடத்திச் செல்கின்ற நிலையில் வாசிப்புத் திறனுக்கு கொண்டுச் செல்லவேண்டும். ஆசிரியர் பாடத்தினை நடத்திச் செல் வதற்காக பாடத்தினை வாசிக்க வேண்டும். வாசிப்புக்குரிய பண்பு மாறாமல் அதனைச் முன்கொண்டு செல்லவேண்டும். அசிரியர் நன்கு தெளிவாக வாசித்துக் காட்டியதன் பின்னர் மாணவர்களை வாசிக்கச் செய்யவேண்டும். இதற்காக வகுப்பறை முகாதைத்துவத்தனை அவர் நன்கு விரிவுபடுத்தலாம். மாணவர்களைத் தனியா கவோ அல்லது குழுக்களாகவோ பிரித்துவிடலாம். அப்போது அவர்களை ஆழ்ந்து வாசித்தல், அகன்று வாசித்தல், வாய்விட்டு வாசித்தல், வாய்க்குள் வாசித்தல் என்ற அடிப்படையில் வாசிப்பதற்கு வழிப்படுத்தலாம். இவ்வாறான நிலையில் வாசிப்புப் பற்றிய தெளிவு ஏற்படுவதோடு எழுத்துக்களை இனங்காண்பதில் உள்ள சிக்கல்நிலையில் இருந்தும் அவன் விடுபட வாய்ப்பு எற்படுகின்றது. இந்தச் செயற்பாடு தொடர்ந்து இடம்பெறவேண்டும். அப்போது கற்பித்தல் கற்றலில் உள்ள சிக்கல்கள் நீங்கு கின்றது.

## எழுத்தும் திறன்

கேட்டல், பேச்சு, வாசிப்பு ஆகிய திறன்கள் முடிவடைந்ததன் பின்னர் எழுத்துத் திறன் இறுதியாக முன்வைக்கப்படுகின்றது. இந்தத் திறனுக்கு வருவதற்கு முன்னரே மாணவன் பாடப்பொருள் பற்றிய தெளிவினைப் பெற்றுவிடுவான். அப்போது அவனுக்கு எழுத்துப் பற்றிய சிக்கல் நிலை தோன்ற வாய்ப்பு ஏற்படாமல் போகலாம்.

எழுதுதல் என்பது சற்றுச் சிக்கலானதாகும். இதற்கு எழுத்துக்களின் வரிவடிவத் தினைத் தெரிந்திருப்பது அவசியமானதாகும்.(கட்டுரை 8) இந்தச் சிக்கலான செயற்பாட்டினை பயிற்சியின் மூலம் வளர்த்துக்கொள்ளலாம். அந்தப் பயிற்சி பாடத்துடன் இணைந்த தொடர் பயிற்சியாக இருப்பது அவசியமானதாகும். எழுத்துத் திறனை மேலும் வளர்ப்பதற்காக சிறந்த பயிற்சியினைக் கொடுக்க வேண்டும். எழுத்துத் தேர்ச்சி பல்வேறு நிலைகளில் மதிப்பிடப்படலாம். அவற்றைப் பாடப் பொருள்நிலையில் மதிப்பிடல், பாடத்திற்கு வெளியில் நின்று மதிப்பிடல் என்ற அடிப்படையில் அணுகுதல் வேண்டும்.

**உணரும் திறன்**

பாடமுடிவில் மாணவர்கள் பாடப்பொருள் பற்றி என்ன நிலையில் உள்ளனர் என்பதனை அறிந்து கொள்ளும் திறன் இதுவாகும். ஒரு பாடப்பகுதி படித்து முடிந்ததன் பின்னர் அந்தப் பாடல் பகுதி பற்றிப் பொருள்புரிந்துள்ளனரா? என்பது பற்றி அறியும் திறன் இதுவாகும். இந்தத் திறன் கேட்டுப் பொருள் உணர் திறன், படித்துப் பொருள் உணர் திறன் என இரண்டுவகையாக அமையும். பாடமுடிவில் தேர்வினை வைத்து அவர்களுடைய உணர்திறனை அளவிடுகின்றோம். கவனத் துடன் படித்தல், தொடர்ச்சியாக கண்ணியத்துடன் படித்தல், தகுந்தவிதமாகத் தொடர் பிரித்தல், சொற்பொருள், சொற்றொடர்ப் பொருள், மரபுப் பொருள் அறிதல், அருஞ் சொற்களுக்கு இடம்நோக்கிப் பொருள் அறிதல், கருத்துத்தொடர்ச்சி அறிதல் என்று பலவாறு இதன் நிலையினை உணர்ந்துகொள்ளமுடிகின்றது. இத்தகைய திறன் களை ஒரு பாடம் கற்பிப்பதன் ஊடாக எவ்வாறு வளர்த்தெடுக்கலாம் என்பதனை இந்த ஆய்வு முன்வைக்கின்றது. மரபு அடிப்படையிலான வரைவிலக்கணங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்படுவதனைத் குறைத்து, ஒரு பாடப்பொருளினை எவ்வாறு அதன் திறன்களை மேம்படுத்தலாம் என்ற கருத்துக்கள் அங்கு ஆராயப் படுகின்றது. அதற்காக 'செந்தமிழ் போற்றிய சேரன்' என்ற பாடத்தில் இந்தத் திறன்களை மேம்படுத்துவதற்கான நிலையினை முன்வைத்து முன்கொண்டு செல்வதாக இந்த ஆய்வு அமையப்பெறுகின்றது.

**பாடப் பொருளினை கதைவழியில் சுருக்கமான முன்வைத்தல்**

**செந்தமிழ் போற்றிய சேரன்**

பண்டைய தமிழ்ப் பாரம்பரியம் தொடர்பான விழிப்புணர்வை மாணவர் பெற வழிகாட்டுவது ஆசிரியர் கடைமை. இப் பாடத்தில் பெரஞ்சேரல் இரும்பொறை எனும் அரசனது வாழ்வில் நடந்த சம்பவம் ஒன்று இடம்பெறுகின்றது. இம்மன்னன் வஞ்சிமானகரில் இருந்து அரசாண்ட சேர மன்னன் ஆவான். அவனது அவைக்கு மோசிகீரன் எனும் அரசன் வந்தான் கால்நடையாக வந்த காரணத்தினால் மிகவும் களைப்புற்றிருந்த அவர் அரசனது முரசு கட்டிலில் அயர்ந்து உறங்கிவிட்டார். அதனைக் கேள்வியுற்று வாளை உருவி வந்த அரசன் அங்கு உறங்குவது புலவர் என்பதை அறிந்தார். சாமரை எடுத்து வீசினார். திடுக்கிட்டு எழுந்த புலவர் அரசனது செயலுக்கு மனம் நெகிழ்ந்தார். அரசன் தமிழ் மீது கொண்ட பற்றே அவனது செயலுக்குக் காரணம் எனக் கூறிப் புகழ்ந்தார். (இக்கதையினை ஆசிரியர் மேலும் பொருத்தமாக முன் கொண்டு செல்லலாம்)

**பகுதி –** I

**கேட்டல்**

ஆசிரியர் உரைநடைப் பகுதியின் உட்பொருளை சந்தேகமோ அல்லது இடர்பாடோ வராமல் கதை வடிவில் முன்வைத்தல் வேண்டும். கதைவடிவில் முன்வைக்கப்பட்ட விடயத்தினை மாணவர்களைக் கூறச் செய்தல் வேண்டும். அதாவது அவர்கள் கதையினைச் சுருக்கமான முறையில் முன்வைப்பார்கள். அதற்கு ஆசிரியர் சிறந்த செயற்பாட்டாளராக இருக்கவேண்டும். மாணவர்கள் கதையினை முன் வைத்ததன் பின்னர் மீண்டும் அந்த கதையினைத் தெளிவுபடுத்திக் கூறி அடுத்த விடயத்திற்குச் செல்லுதல் வேண்டும்.

**பகுதி** – II

**பேச்சு**

கதையினைக் கூர்ந்து கேட்ட மாணவன் அந்த விடயம் பற்றிப் பேசுவதற்கு முன்வருவான். முதலில் கதையின் கருத்துக்களை ஓரிரு நிமிடங்கள் பேசச் செய்தல் வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தினை எல்லா மாணவர்களுக்கும் வழங்கு வது அவசியமாகின்றது. (வகுப்பறைச் சூழலுக்கு ஏற்ப)

**பகுதி** – III

**வாசிப்பு**

1. விடயத்தினை மாணவர்களுக்கு முன்வைத்து வாசித்துக் காட்டுதல்.
ஆசிரியர் என்ற வகையில் முதலில் பாடம் தொடர்பான விடயத்தினை முன்வைத்து வாசித் துக்காட்டுவது அவசியமாகின்றது. வாசிக்கும் போது அதற்குரிய திறன் பின்பற்றப்படவேண்டும். சிறந்த வாசிப்பு மாணவர்களுக்கு பாடம் தொடர்பான விடயத்தினை மேலும் விளங்கிக் கொள்வதற்கு இலகுவாக இருந்துவிடுகின்றது.

2. மாணவர்களை வாசிக்கச் செய்தல் (குழுவாகவோ, தனியாகவோ)
ஆசிரியர் வாசித்ததன் பின்னர் மாணவர்களை வாசிக்கச் செய்வது அவசிய மானதாகும். இதற்காக மாணவர்களை தனியாகவோ குழுவாகவோ பிரிக்கச் ஆக்கலாம். முழுப்பாடத்தினை வாசிக்காவிட்டாலும் பந்தி பந்தியாக ஒவ்வொ ருவராக வாசிக்கச் செய்யலாம். இடருறுகின்ற மாணவர்களுக்கு ஆசிரியர் உதவி செய்வது அவசியமாகும்.

3. அதிலுள்ள அருஞ்சொற்கள், சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், இணை மொழிகள், மொழிநயங்கள், இலக்கணச் சிறப்பு முதலியவற்றை பாடப் பொருளுடன் விளக்கி வாசித்தல்.
மாணவர்கள் வாசித்ததன் பின்னர் அதிலுள்ள அருஞ்சொற்கள், சொற் றொடர்கள், மரபுத் தொடர்கள், இணைமொழிகள், மொழிநயங்கள், இலக்கணச் சிறப்பு முதலியவற்றை பாடப்பொருளுடன் விளக்கி வாசித்துப் பொருள் விளக்க வேண்டும். அப்போது அதனை இலகுவாக விளங்கிக்கொள்ள வாய்ப்பு எற்படுகின்றது. இது தெரிந்ததில் இருந்து தெரியாதவற்றுக்குச் செல்லும் உளவியல் வழிமுறையாகும்.

4. பிரதான கருத்தினை முன்வைத்து வாசித்துக்காட்டுதல்.
பாடத்தில் காணப்படும் பிரதான கருத்தினை மாணவர்களிடம் கேட்டறிந்ததன் பின்னர், அதன் பொருத்தப்பாடுணர்ந்து பிரதான கருத்தினை முன்வைக்க வேண்டும். இதற்காக மாணவர்கள் உணரும் திறன் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

5. துணைக் கருத்துக்களைப் பட்டியற்படுத்தி வாசித்துக் காட்டுதல்.

பிரதான கருத்தினை முன்வைத்ததன் பின்னர் துணைக் கருத்துக்களைக் கூறச் செய்தல் வேண்டும். மாணவர்கள் முன்பின்னாக இக்கருத்தக்களை முன்வைப்பார்கள். அவற்றை யெல்லாம் கரும்பலகையில் எழுதிய பின்னர் ஆசிரியர் ஏறுவரிசைப்படி அக்கருத்துக்களை மாணவர்களின் துணையுடம் முன்வைத்தல் வேண்டும்.

6. பாடப்பொருள் பற்றி ஆசிரியரும் மாணவர்களும் கலந்துரையாடி, வினாக் களைத் தொடுத்தல்.

இவ்வாறான செயற்பாடுகள் முடிந்த பின்னர் மாணவர்களும் ஆசிரியரும் பாடப்பொருள் பற்றி மேலும் கலந்துரையாட வேண்டும். இருசாராரும் வினாக் களையும் விடைகளையும் முன்வைக்கலாம். அப்போது மேலும் கற்றல் திறன்கள் பற்றிய தெளிவு எற்படுகின்றது.

7. விடயத்தின் முக்கிய பகுதிகளைக் குறிப்புக்கள் எடுக்கச் செய்து வாசித்துக் காட்டுதல்.

இறுதியாக விடயத்தின் கருப்பொருளினை குறிப்பெடக்கச் செய்தல் வேண்டும். குறிப்பெடுத்ததன் பின்னர் அதனை வாசித்துக்காட்டச் செய்தல் வேண்டும். இங்கு பல திறன்கள் ஒன்றாக மேம்படுகின்றது.

**பகுதி** – IV

**எழுத்து (அ)**

1. வினாக்களைக் கொடுத்தல்.

இந்தப் பகுதியில் வினாக்களைத் கொடுத்தல் வேண்டும். வினாக்களை முதலில் வாய்மொழியாகத் தொடுக்கலாம். அதன் பின்னர் எழுதுவதற்குக் கொடுப்பது அவசியமாகும். வினாக்களைப் பல்வேறு நிலைகளில் முன்வைக்க வேண் டும். பொருத்தமான விடையின்கீழ் கோடிடுதல், சரி பிழை கூறுதல், இணைத்தல் என்ற வகையில் வினாக்களை முன்வைக்கவேண்டும். அந்த வினாக்களை மாணவர்களின் கற்பித்தல் நிலையினை மேலும் ஊக்கப் படுத்தும்.

2. வினாக்களைத் திருத்திக் கொடுத்தல்.

வினாக்களைக் கொடுத்ததன் பின்னர் அதனைத் திருத்திக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனுடைய திறனும் இந்த நிலையில் வெளிப்படு வதனால் ஒவ்வொருவருடைய திறனும் மதிப்பிடப்படுதல் வேண்டும். பயிற்சிக் கொப்பிகள் நன்கு அவதானிக்கப்பட்டு கருத்துக்கள் முன்வைக்கப்படுதல் வேண்டும். எல்லா மாணவர்களையும் இந்த நிலையில் ஊக்கப்படுத்தப்படுதல் வேண்டும். இந்த நிலை மாணவனை அடுத்தகட்டத்தனை நோக்கிச் சிந்திக்கச் செய்யும்.

3. மேலும் விளக்கம் கொடுத்தல்.

வினாக்களுக்கான விரைடயினை முன்வைத்து மேலும் விளக்கம் கொடுத்தல் வேண்டும். அதனால், மாணவன்விட்ட தவறினை உணர்ந்து கொண்டு செயற்படுவதற்கு வாய்ப்பு எற்படுகின்றது.

## எழுத்து (ஆ)

ஆக்கச் செயற்பாடுகள்

வீட்டுவேலை கொடுப்பதன் ஊடாக ஆக்கச் செயற்பாட்டினை விருத்தியடையச் செய்யமுடியும். பாடப்பொருளினை முன்வைத்து கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாடகம் போன்ற ஆக்கங்களை எழுத வழிப்படுத்தமுடியம். இந்தச் செயற்பாடு ஆக்கச் செயற்பாடுள்ள மாணவனை இணங்காண்பதற்கு வழிப்படுத்துகின்றது. ஒரு மாணவன் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கச் செயப்பாடுள்ள துறையில் மேம்பட்டு நிற்பதற்கு இத்தகைய செயற்பாடுகளைச் மேற்கொள்வதற்கு ஆசிரியர் முன்னின்றுழைக்க வேண்டும். இது ஒவ்வவொரு பாடத்திற்கும் சிறந்த உதாரணமாகும். ஆக்கங்களை மாணவர்கள் எழுதி வந்ததன் பின்னர் அதனைத் திருத்திக் கொடுத்து மேலும் விளக்கம் இருப்பின் அதனையும் முன்வைக்க வேண்டும். சில மாணவர்கள் இத்தகைய செயற்பாடுகளில் மேலோங்குவார்கள். அதனை ஏனைய மாணவர்களுக்கும் எடுத்துக்காட்டி அவர்களையும் அதன்வழி மேம்படுத்த வேண்டும்.

பாடமுடிவில் விழுமியச் சிந்தனைகள் பற்றிய எண்ணக்கருவினை வளர்ப் பதற்காக பாடத்தில் அமையப்பெற்றுள்ள விழுமியக் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். அதாவது, இந்தப் பாடத்தின் வழி தமிழ் உயிரைவிட மேலானது, அரச

நீதி, தருமம், பிறரை மதித்தல் போன்ற விழுமியப் பண்புகள் வெளிப்படுவதனை முன்வைத்து எடுத்துக்காட்டுதல் வேண்டும். (வேறு கதைகளைக் கூறலாம்)

தொகுத்து அவதானித்தால் கற்றல் திறன் மேம்பாடு என்பது படிப்படியான முறையில் இடம்பெறவேண்டும். அதாவது கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்ற தொடர் நிலையில் இடம்பெற்று உணரும் திறன் உடையவராக மாணவர்கள் மாறுவதற்கு ஆசிரியர் வழிப்படுத்த வேண்டும். இவ்வாறு கற்பித்தல் - கற்றல் இடம்பெறுமாக இருந்தால் மாணவர்கள் கற்றல் திறன்களை விளங்குவதிலும் அதனை மேம்படுத்துவதிலும் ஆர்வம் உடையவர்களாக விளங்குவார்கள். அதற்காக ஆசிரியர் சிறந்த கற்பித்தல் திறன் உடையவராகவும் முன்மாதிரியாக இருப்பதும் அவசியமானதாகும் என்பது ஆய்வின்வழி கண்டுகொள்ளப்படுகின்றது.

# தமிழ் எழுத்துக்களைக் கற்பதற்கான சிக்கல்களும் தீர்வுகளும்

## (இரண்டாம் மொழி – தமிழ் கற்கின்ற மாணவர்களை அடிப்படையாகக் கொண்டது)

இரண்டாம் மொழி - தமிழை கற்கின்ற சிங்களத்தினைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்கள் மட்டுமன்றித் தமிழினைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களும் எழுத்துக்களைச் சரியாக இனங்கண்டு கற்பதில் முரண்பாடுகளைச் சந்திக்கின்றனர். தமிழ் எழுத்துக்களைச் சரியாகப் புரிந்துகொண்டு கற்பித்தல் - கற்றலை முன்கொண்டு செல்லாததனால் மாணவர்கள் இன்று கற்பித்தல் - கற்றலில் சிக்கல்களையும் முரண்பாடுகளையும் சந்தித்த வண்ணமே உள்ளனர். எழுத்துக்களைக் கற்பித்தல் என்பது மரபுதழுவிய முறையிலே இன்னும் பாடசா லைகளில் நடைமுறையில் இருந்து வருகின்றது. இந்த கற்பித்தல் முறை சரியான புரிதல்களுடனும் எழுத்துக்களின் வடிவ அடிப்படையிலும் முன்வைக்கப்படுவதாகத் தெரியவில்லை. அதனால் மாணவர்கள் தமிழ் எழுத்துக்களையும் தமிழையும் கற்பதில் அக்கறை செலுத்துவதாகவும் தெரியவில்லை. இதன் பின்னணியில் தமிழ்ப் பாடம் கடினமானது என்ற உணர்வினை அவர்களாகவே உருவாக்கிக் கொள்கின்றனர். இதனால் அப்பாடத்தில் குறிப்பிட்ட புள்ளியினைப் பெறுவதற்கு முடியாத வர்களாகவும் தொடர்பாடலை முன்கொண்டுசெல்ல சிரமப்படுபவர்களா கவும் இருந்துவருகின்றனர். இந்த நிலையினை இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் கண்டு கொள்ளலாம். குறிப்பாக கஸ்ட, அதிகஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் இந்த நிலை இன்னும் தொடர்கின்றது. இதற்கான காரணங்கள் பல்வேறு வழிகளில் கண்டு முன்வைக்கப்பட்டபோதும், இவை ஆராய்ச்சிக் குரியவையாக இல்லாததால் குறைகளைக் கண்டறிவதில் காலமே நீண்டுகொண்டு செல்கின்றது. இந்த வகையிலே இந்த எழுத்துக்களைக் கற்பது சம்பந்தமாகப் 250

மேற்பட்டவர் களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டடன. அவர்களில் இரண்டாம் மொழி கற்பிக்கின்ற ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் இதில் அடங்குகின்றனர். இவர்களிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல் என்ற அடிப்படையில் கருத்துக்கள் பெறப்பட்டன. தமிழ் எழுத்துக் களைக் கற்ப தற்கான சிக்கல்களும் தீர்வுகளும் எனும் தலைப்பில் இதுவரை எந்த ஆய்வும் தமிழில் வெளிவர வில்லை. இந்நிலையில் இந்த ஆய்வுக் கட்டுரையினைச் சமூகத்திற்கு வழங்குவதனையே இந்த ஆய்வு பிரதான நோக்க மாகக் கொண் டுள்ளது. இந்த நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையில் இந்த ஆய்வுக் கட்டுரை வடிவமைக்கப்படுகின்றது.

### மரபு தழுவிய முறை

இன்றைய கற்பித்தல் முறையில் எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கின்ற முறை மரபு தழுவிதாகவே உள்ளமை யினை பாடசா லைகளில் மட்டுமன்றி, இரண்டாம் மொழி - தமிழினைக் கற்பித்துக்கொடுக்கின்ற அனைத்து துறைகளினூடாகவும் அவதானிக்க முடிகின்றது. அங்கெல்லாம் அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஆகிய 12 உயிர் எழுத்துக்களைக் கற்பித்துக்ககொடுத்ததன் பின்னர், க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் ஆகிய 18 மெய்யெழுத் துக்களையும், ஜ ஸ ஷ க்ஷ ஹ ஸ்ரீ ஆகிய கிரந்த எழுத்துக்களையும் கற்பித்துக் கொடுக்கின்றனர். இந்த எழுத்துக்களை அவதானித்தால் வடிவ அமைப்பில் ஒத்த தன்மை உடையதாக இல்லா மையினைக் காணமுடிகின்றது. இதனால் மாண வர்கள் ஒரே சிந்தனையில் செல்வதற்கு முடியாமல் தவறுவதற்கு அதிக வாய்ப்பினை உண்டுபண்ணுகின்றது. மாணவர்கள் சிந்தனையினை மாற்றுவதனால் அவர்க ளுடைய நோக்கு திசைமாறுகின்றது. அதனால் எழுத்துக்களைக் கற்பதில் அவர் களுக்கு விருப்பக்குறைவு ஏற்பட வாய்ப்பேற்படுகின்றது. அப்போது தமிழ் கஸ்டம் என்ற உணர்வினைத் அவர்களின் மனதில் எழுகின்றது. இந்த மரபு தழுவிய முறையில் இருந்து நாம் விலகி எழுத்துக்களின் வடிவ அமைப்புக்குள் செல்ல வேண்டும். அதனால் மாணவர்களுக்கு விருப்பு ஏற்படுகின்றமையினை நாம் கள அவதானிப்பு மூலம் அவதானித்துள்ளோம். கற்பித்துக் கொடுக்கின்ற ஆசிரியர்களும், பாடத்துடன் தொடர்புடைய அதிகாரிகளும், பிறரும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, எழுத்துக்களைக் கற்பித்துக் கொடுக்கின்ற

முறை என்பது அதன் வடிவ அமைப்பினைச் சார்ந்து இருப்பது பொருத்தமானதாகும். இந்த வழிமுறையில் ஆசிரியர் தமிழ் எழுத்துக்களைத் திட்டமிட்டுக் கற்பித்து மாணவர்களுடைய வழுக்களை நிவர்த்தி செய்யமுடியும்.

## தமிழ் எழுத்துக்களை திட்டமிட்டுக் கற்பித்தல்

கல்வித்துறையில் பல கற்பித்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு கற்பித்தல் - கற்றல் செயற்பாடு முன்கொண்டு செல்லப்பட்டு வருகின்றன. அண்மைக்காலமாக கல்வித்துறையில் அதிகம் பேசப்படுகின்ற விடயம் திட்டமிட்டுக் கற்பித்தல் என்பது. 1920ஆம் ஆண்டில் அமெரிக்க ஓவியோ பல்கலைக்கழகத்தின் உளவியலறி ஞர்களே இந்த கற்பித்தல் முறையினைத் தொடங்கினர். சிட்னி எல்பிரேசி எனும் அமெரிக்க ஓவியோ பல்கலைக்கழகத்தின் உளவியலறிஞர் கற்பித்தல், மதிப்பிடல் எனும் இரண்டையும் செய்யும் கருவி களைக் கண்டறிந்தார். மாணவர்களை வினவி விடைகளை உடனுக்குடன் மதிப்பிடல். இதனால் மாணவர்களுடைய திறன் அதிகரிக்கும் என்பதனை பல அறிஞர்கள் தங்களுடைய கருத்துக்களின்வழி மெய்ப்பித்துள்ளனர். ஒரு எழுத்தினையோ அல்லது ஒத்த வடிவ அமைப்பு எழுத்தி னையோ கற்பித்துக் கொடுத்ததன் பின்னர் மதிப்பிடலை உடன் மேற் கொண்டு பின்னூட்டல் வழங்குதல் வேண்டும். அதனால் மாணவன் விடுகின்ற தவறுகளில் இருந்து விடுபட அதிக வாய்ப்பு ஏற்படுகின்றமையினை ஸ்கிண்ணர் போன்ற உளவியல் அறிஞர்களும் தங்கள் ஆய்வின்மூலம் மெய்ப்பித்துள்ளனர்.

## திட்டமிட்டுக் கற்பித்தல் என்றால் என்ன?

முன்பே உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தினைக்கொண்டு, கற்பிக்க வேண்டிய பாடத்தினைச் சிறுசிறு பகுதியாகப் பகுத்து அதனை மாணவர்களுக்கு முன்வைத்த லாகும். ஸ்கின்னர், தூண்டி - துலங்கல் இணைப்புக்கு முக்கியத்துவம் வழங்காது, உயிர் செய்யும் செயற்பாட்டைக்கொண்டு நடத்தையினை விளக்குகின்றார். ஒரு பெரிய விடயத்தினை மாணவர்களுக்குக் கற்பிப்பது கடினமான செயலாகும். இத்தகைய பாடப்பொருளை சிறுசிறு பகுதிகளாகப் வகுத்துக் கற்பிப்பது சிறந்ததாகும். அச்செயற்பாட்டுக்கு மாணவர்கள் துலங்கும் போது வெகுமதிய ளித்து மீளவலியுறுத்த வேண்டும் என்றார். இன்றைய கற்பித்தல் - கற்றலில் இந்த முறையில் விடயம் முன்கொண்டு செல்லப் படுவது மிகக்குறைவாகும். ஆசிரியர்கள் பாடப்பொருளின் மொத்தப் பகுதியினையே கற்பித்துக்கொடுக்க முற்படுகின்றனர். அதனால் மாண

வர்கள் பல்வேறு முரண்பாடுகளைச் சந்தித்தவண்ணமே உள்ளனர். இதனை விடுத்து சிறுசிறு பகுதியாகக் கற்பித்தால் மாணவர்கள் அந்தப் பாடத்தினை விரும்பிக் கற்கவாய்ப்பு ஏற்படுகின்றது. அதனால் அவர்களுடைய திறன் அதிகரிப்பதோடு, பாடப்பொருளினையும் ஆக்கபூர்வமாக விளங்கிக்கொள்கின்றனர். பாடப்பொருள் சிறுசிறு பகுதியாகப் பிரித்தல் என்பது இன்று கற்றற் பேறாக அமையப்பெறுகின்றது. எழுத்துக்களை இங்கு பன்னிரெண்டு தொகுதிகளாகப் பிரிக்கின்றோம். இந்தத் தொகுதிகளில் உள்ள எழுத்துக்களைக் கற்பித்து விளங்கச் செய்வதற்காக திட்டமிட்ட முறையில், எழுத்துக்களின் வடிவ அமைப்பு கருத்தில் கொள்ளப்பட்டு, முன்கொண்டு செல்லப்படகின்றது. எழுத்துக்களின் வடிவ அமைப்பினை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் அதன் அமைப்பு முன்வைக்கப்படுகின்றது.

## திட்டமிட்டுக் கற்பித்தலின் நோக்கம்

திட்டமிட்டுக் கற்பித்தல் முறையில், எழுத்துக்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் திறமையானவராக இருப்பது அவசியமாகின்றது. அவர் கற்பித்தல் கருவிகளை தயார்படுத்தி வைத்திருக்க வேண்டும். கருவிகள் மிகவும் அவசியமானதாகும். அப்போதுதான் ஒரு விடயம் பற்றிச் சிந்தித்து அதனை மாணவர்களுக்குத் தெளிவு படுத்தமுடியும். எழுத்துக்களைக் கற்பிக்கும்போது கீழ்வரும் விடயங்களின் அடிப்ப டையில் அனுகுதல் வேண்டும்.

1. எளிமையில் இருந்து அருமைக்குச் செல்லல் வேண்டும்.
2. புரிந்ததிலிருந்து புரியாததற்குச் செல்லல் வேண்டும்.
3. தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லல் வேண்டும்.
4. இவற்றின் வழி மாணவர்களுக்கு எழுத்துக்களை கற்பித்துக்கொடுக்க வேண் டும். இந்த அமைப்பு முறையில் கற்பித்தல் - கற்றல் செயற்பாடு இருக்குமாக இருந்தால் மாணவர்கள் ஒரு விடயத்தினை ஐயமின்றி உணர்ந்து கொள் வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.
5. எளிய படிநிலைகள்.
6. மாணவர்கள் உடனுக்குடன் விடையளித்தல்.
7. உடன் சரிபார்த்து உறுதி செய்தல்.

8. மாணவர்களுடைய திறமைக்கேற்ப முன்னேறுதல்.

9. மாணவர்கள் தேர்வு எளிமை.

என்ற நிலையில் திட்டமிட்டுக் கற்பித்தலின் அடிப்படைக் கோட்பாடுகள் முன்கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் மாணவனுக்கும் ஆசிரியருக்கும் இடையேயான இடைத் தொடர்பு விருத்தியடைகின்றது. இந்த முறையில் எந்த நேரமும் மாண வர்கள் கண்காணிக்கப்படுபவர்களாக இருப்பார்கள்.

## தமிழ் எழுத்துக்கள் உருவாகும் வடிவங்கள்

தமிழ் எழுத்துக்களின் உருவாக்கம் இரண்டு வடிவங்களில்தான் அமைகின்றன. அவை ஐ, ெ எனும் வடிவங்களாகும். அந்த இரண்டு வடிவங்களுக்கும் சிறப்பான பயிற்சி கொடுப்பதன் ஊடாக மாணவர்கள் எழுத்துக்களை இலகுவாக கிரகித்து எழுத முடிகின்ற நிலையினை அடைகின்றனர். நிலைக்குத்துக் கோட்டில்தான் முதலில் எழுத்து ஆரம்பமாகின்றது. அந்தக் கோட்டினை மேலிருந்து கீழாக கீறுவது இலகுவானதாகும். அதற்காக மாணவனுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டியது அவசியமாகின்றது. மாணவன் நிலைக் குத்தாகக் கீறுகின்ற கோடு எளிமையான நிலையில் இருக்கின்றது. ஆகவே, அதனோடு தொடர்புடைய எழுத்தக்களை முதலில் எழுதிப் பழக்குதல் வேண்டும். அதன் பின்னர் கீழிருந்து மேலாகக் கோட்டினைக் கீறிப் பழக்கி, அதனோடு தொடர்புடைய எழுத்துக்களை எழுதிப் பழக்குதல் வேண்டும். பின்னர் வளை கோட்டினாலான எழுத்துக்களை எழுதிப் பழக்குதல் வேண்டும். இந்த எழுத்துக்கள் யாவும் எளிமையில் இருந்து அருமைக்கும், புரிந்ததில் இருந்து புரியாததற்கும், தெரிந்ததில் இருந்து தெரியாத தற்கும் செல்லும் வகையில் தொகுதி தொகுதியாக ஆக்கப்படுதல் சிறப்பானதாகும். இந்த முயற்சி மாணவனை கற்றலின்பால் ஈர்த்து அவனை கற்றல் ரசனை உடையவனாக மாற்றுகின்றது.

ஒவ்வொரு தொகுதி எழுத்துக்களையும் கற்பித்துக்கொடுத்ததன் பின்னர், மாணவர்களைக் கொண்டு காட்சிப்படுத்திய எழுத்துக்களில் இருந்து சொற்ளை ஆக்குதல் வேண்டும். ஒவ்வொரு தொகுதியின் எழுத்துக்களும் அதனைத் தொடர்ந்து வரும் தொகுதிகளுடன் இணைக்கப்பட்டு, பெரும்பாலும் சூழலுடன் தொடர்புடையதும் மாணவர்கள் அறிந்த சொற்களை ஆக்குவதும் அவர்களுடைய ஆக்கநிலையினை மேலும் விரிவுபடுத்துகின்றது.

**முதலாவது தொகுதி**

நேர்கோடு மற்றும் வளைகோட்டின் வழியில் தமிழ் எழுத்துக்கள் ஆரம்பமாகின்றன. நேர்கோடானது முதலில் மேலிருந்து கீழாக எழுதப்பட வேண்டும். அவ்வாறான முறை எளிமையானதாகும். கோட்டின் வழியில்தான் எழுத்துக்கள் ஆரம்பமா கின்றன. இந்தக் கோட்டினை மேலிருந்து கீழாகக் கீறிப் பழக்குதல் வேண்டும். அவ்வாறு எழுதிப் பழக்கும்போது, எழுத்துக்களைச் சரியாக இனங்கண்டு எழுது வதற்கு காலம் குறைவாகவே தேவைப்படு கின்றது. தொகுதி ஒன்றில் ட, ப, ய, ம, ழ ஆகிய எழுத்துக்களும் அதன் புள்ளி எழுத்துக் களாகிய ட், ப், ய், ம், ழ் என்பனவும் அமைகின்றன.

எளிமை ட

**எளிமையில் இருந்து எளிமைக்குச் செல்லல்**

மாணவன் முதலாவது தடவையாக முயற்சிக்கின்றான் ட

மாணவன் இரண்டாவது தடவையாக முயற்சிக்கின்றான் ப

மாணவன் மூன்றாவது தடவையாக முயற்சிக்கின்றான் ய

இந்த எழுத்துக்கள் ஒரு வடிவமானவை மட்டுமல்ல ஒரே கோட்டில் பயணிக்கக் கூடியவைகளுமாகும். எழுத்துக்களின் வடிவமும் திறந்த நிலையிலேயே உள்ளன. மாணவன் எழுதுகின்ற நிலையிலும் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. ஒரே நேரத்தில் மூன்று எழுத்துக்களைப் பற்றிச் சிந்திக்கின்றான். அதன்பின்னர் அந்த எழுத்துக் களுக்கு புள்ளியினை வைத்துக் காட்டுகின்றான். அப்போது அவன் இன்னொரு நிலையினை அடைகின்றான்.

எழுத்துக்களுக்குப் புள்ளி வைத்துக் காட்டுதலும் உச்சரித்தலும்.

ட் ப் ய்

**எளிமையில் இருந்து அருமைக்குச் செல்லல்.**

ஒரே கோட்டில் பயனித்த நாம் சற்று வித்தியாசமாக மாணவனை சிந்திக்கச் செய்கின்றோம். அதாவது, திறந்த நிலையிலிருந்து மூடிய நிலைக்குச் செல்கின் றோம். இது மாணவன் அடைகின்ற நுண்ணறிவு நிலையாகும். அதாவது, ஸ்கின்னர் கூறுவதுமாதிரி கால அளவினை மாற்றி பயனிக்கச் செய்கின்றோம். இது

சற்று அருமையான நிலையாகும். அதாவது, மாணவனுடைய மனோநிலையில் சிறிய மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற நிலை.

மாணவன் நான்காவது தடவையாக முயற்சிக்கின்றான் ம

மாணவன் ஐந்தாவது தடவையாக முயற்சிக்கின்றான் ழ

ம, ழ ஆகிய எழுத்துக்கள் சற்று வித்தியாசமானதாகும். அவற்றுள்ளும் ம அருமையிலும் எளிமையாக இருக்க, ழ அருமையில் அருமையாக இருக்கின்றது.

அதன் பின்னர் அந்த எழுத்துக்களுக்கு புள்ளியினை வைத்து உச்சரித்துக் காட்டுகின்றோம். அப்போது மாணவன் இன்னொரு நிலையினை அடைகின்றான். ம், ழ்

## எல்லா எழுத்துக்களையும் எழுதுதல்

ட ப ய ம ழ

ட் ப் ய் ம் ழ்

## சொற்களை அமைத்தல்

சொற்களை அமைக்கும்போது அந்தச் சொற்கள் சூழலோடு தொடர்புடைய சொல் லாகவும், மாணவர்கள் அறிந்த, இலகுவாக அறிகின்ற சொல்லாகவும் இருப்பது சிறப்பு.

| | | |
|---|---|---|
| படம் | படம் | படம் |
| பப்படம் | பப்படம் | பப்படம் |
| பட்டம் | பட்டம் | பட்டம் |
| பழம் | பழம் | பழம் |

(இத்தகைய அமைப்புமுறையில் ஒவ்வொரு தொகுதி எழுத்துக்களும் மாணவர் களின் சிந்தனைக் கிளறலுக்காக முன்கொண்டு செல்லப்படவேண்டும்.

## இரண்டாவது தொகுதி

இரண்டாவது தொகுதியில் ா, ர, ஈ, ச, க, த, ற, ந, ங ஆகிய எழுத்துக்களும், அதன் குத்தெ முத்துக்களாகிய ர், ச், க், த், ற், ந், ங் ஆகிய எழுத்துக்களும் அமையப் பெறுகின்றன. இந்த எழுத்துக்களின் கோடு கீழிருந்து மேலாகச் சென்று எழுத்துக் களை உருவாக்குகின்றன.

| | | | |
|---|---|---|---|
| எளிமை | ா | ஈ | ர |
| எளிமை, அருமை | ச | க | த |
| அருமை | ற | ந | ங |

எழுத்துக்களுக்குக் குத்துவைத்து உச்சரித்தல்.

| | | |
|---|---|---|
| ர் | | |
| ச் | க் | த் |
| ற் | ந் | ங் |

இரண்டாம் தொகுதியில் உள்ள எல்லா எழுத்துக்களையும் எழுதிக் காட்சிப்படுத்தல்

| | | | |
|---|---|---|---|
| ா | ர | ஈ | ஷ |
| ச | க | த | வு |
| ற | ந | ங | |
| ர் | - | - | |
| ச் | க் | த் | வு |
| ற் | ந் | ங் | |

## எல்லா எழுத்துக்களையும் எழுதுதல்

சொற்களை அமைக்கும்போது தொகுதி இரண்டில் உள்ள எழுத்துக்களையும் இரண்டாம் தொகுதியில் உள்ள எழுத்துக்களுடன் காட்சிப்படுத்தல் வேண்டும். அதனால் மாணவரிடையே எழுத்துக்கள் பற்றிய தொடர்தன்மை காணப்படுவதோடு சொற்களை இலகுவாகவும் அமைத்துக்கொள்ள வழி ஏற்படுகின்றது.

ட ட் ப ப் ய ய் ம ம் ழ ழ் ா ர ர் ஈ

ச ச் க க் த த் ற ற் ந ந் ங ங்

## மூன்றாம் தொகுதி

வளை கோட்டினால் ஆரம்பிக்கும் எழுத்துக்கள் பின்வரும் தொகுதிகளில் வருகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் தடைவை முயற்சித்தல் | - | ெ | ல | வ | |
| இரண்டாம் தடைவை முயற்சித்தல் | - | ள | ஸ | | |
| மூன்றாம் தடைவை முயற்சித்தல் | - | ே | ை | ன | ண |

எல்லா எழுத்துக்களையும் எழுதுதல்

ெ லே ல் வ வ் ஷ ஷ ளள் ஸஸ் னன் ணண்

**நான்காம் தொகுதி**

எ ஏ ஞ குத்துவைத்தல் ஞ்

**ஐந்தாம் தொகுதி**

உ ஷ ஊ குத்துவைத்தல் ஷ்

**ஆறாம் தொகுதி**

அ ஆ இ

**ஏழாம் தொகுதி**

ஒ ஓ ஔ

**எட்டாம் தொகுதி**

ஜ ஜ குத்துவைத்தல் ஜ்

**ஒன்பதாம் தொகுதி**

இந்தத் தொகுதியில் எல்லா எழுத்துக்களையும் காட்சிப்படுத்த வேண்டும். மாண வர்கள் இந்த எழுத்துக்கள் யாவற்றையும் அவதானித்து கிரகித்துக் கொள்வதற்கு இந்த வழிமுறை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கின்றது.

ட ப ய ம ழ ா ர ஈ ற ஸ்ரீ ந ங ச க த ட ப ய ம் ழ் ர் ற் ந் ங் ச் க் த ெ ல வ ள ஸ உ ஊ ஷ எ ஏ ஞ அ ஆ இ ஒ ஓ ஔ ஜ ஜ் ே ன ண ெ ல வ ள ஸ உ ஊ ஷ எ ஏ ஞ அ ஆ இ ஒ ஓ ஔ ஜ ஜ் ே ன் ண் ெ ல் வ் ள் ஸ் உ ஊ ஷ் எ ஏ ஞ் அ ஆ இ ஒ ஓ ஔ ஜ ஜ்

**பத்தாம் தொகுதி**

இத் தொகுதியில் ஒன்பதாம் தொகுதியில் உள்ள எழுத்துக்கள் ஒழுங்குபடுத்தப் படுகின்றன.

| | |
|---|---|
| அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ | - உயிர் எழுத்துக்கள் |
| க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் | - மெய்யெழுத்துக்கள் |
| க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன | - உயிர் மெய் எழுத்துக்கள் |
| ஜ ஸ ஷ க்ஷ ஹ ஸ்ரீ | - பிறமொழி எழுத்துக்கள் |

ஒழுங்குபடுத்தியதன் பின்னர் உயிர் எழுத்துக்கள் என்றும், மெய்யெழுத்துக்கள் என்றும், உயிர் மெய்யெழுத்துக்கள் என்றும், பிறமொழி எழுத்துக்கள் என்றும் பெயர் சுட்டிக் காட்டப்படுகின்றது.

**பதினோராம் தொகுதி**

இந்தத் தொகுதியில் உயிர்மெய்யெழுத்துக்கள் உருவாகின்ற விதம் பற்றி அறிமுகப்ப டுத்தப்படுகின்றது.

க + அ = க (க்+அ என்ற இரண்டு எழுத்துக்களையும் ஒரே ஒலியில் சேர்த்து உச்சரிக்கச் செய்தல் வேண்டும். இங்கு உச்சரிப்புமுறை முக்கியமானதாகும். அதற்கு மாணவர்களைப் பழக்குதல் வேண்டும். இந்த அமைப்பில் ஏனைய உயிர் மெய்யெழுத்துக்களையும் உருவாக்குதல் வேண்டும். இந்த கற்பித்தல் உத்திகளை மாணவர்களுக்கு விளையாட்டு முறையிலே கொண்டுசெல்லலாம். உதாரணத் துக்காக 'க்' எனும் மெய்யெழுத்துடன் உயிர் எழுத்துக்கள் சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்துக்களை தருகின்றேன். ஏனைய மெய்யெழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்கள் சேரும்போது உருவாகும் உயிர்மெய் எழுத்துக்களை மாண வர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| க் + அ = க | க் + ஆ = கா | க் + இ = கி | க் + ஈ = கீ |
| க் + உ = கு | க் + ஊ = கூ | க் + எ = கெ | க் + ஏ = கே |
| க் + ஐ = கை | க் + ஒ = கொ | க் + ஓ = கோ | க் + ஔ = கௌ |

க் க கா கி கீ கு கூ கெ கே
கை கொ கோ கௌ

**பனிரெண்டாம் தொகுதி**

**தமிழ் அரிச்சுவடியினை அறிமுகப்படுத்தல்**

எழுத்துக்களின் வடிவ அமைப்பினைக் கற்றதன் பின்னர் தமிழ் அரிச்சுவடியினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். அப்போது எழுத்துக்கள் பற்றி விளங்கிக்

கொள்வதற்கு மேலும் முயற்சிப்பார்கள். இந்த நிலையில் உயிர்மெய்யெழுத்துக்கள் உருவாகின்ற முறையினைத் தெளிவாகக் காட்டமுடியும். அரிச்சுவடியினை மாண வன் முழுமையாக அவதானிப்பதால் எழுத்துக்களை அறியும் நிலைக்கு உட்படு கின்றனர். மாணவன் ஏற்கனவே கற்ற எழுத்துக்களை இங்கு அவதானிப்பதனால் எழுத்துப்பற்றிய ஐயப்பாடு நீங்கப்பெறுகின்றது. காரணம் அவன் எழுத்துக்களின் முழு வடிவம் பற்றிச் சிந்திப்பதாலாகும். இந்த நிலையில் மாணவனுக்கு உயிர்க் குறிகள் பற்றி கற்பித்துக் கொடுக்கலாம். அதனை அவன் இலகுவாக விளங்கிக் கொள்வான். உயிர்க்குறிகளைத் தனியாகக் கற்பிப்பதனைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. இரண்டாம் மொழி - தமிழ் கற்கின்ற மாணவனாலோ, தமிழ் மொழி யினைத் தாய்மொழி யாகக்கொண்டு கற்கின்ற மாணவனாலோ அதனை விளங்கிக் கொள்வது சிரமமாக இருப்பதனை கள ஆய்வின்மூலம் கண்டுகொள்ளப்பட்டது. எனவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முழுமையில் இருந்து பகுதியினை விளங்கச் செய்வதற்கான செயற்பாட்டினை அமைத்துக்கொள்ள வேண்டும். இது முழுமையில் இருந்து பகுதிக்குச் செல்கின்ற உளவியல் முறையாகும்.

எழுத்துக்களைக் கற்பது என்பது இலகுவான செயல் முறையாகும். இதற்காக ஆசிரியர் அவ்வப்போது மாணவர்களின் நிலையினை உணர்ந்து செயற்படுவது அவசியமானதாகும். கற்பித்தல் - கற்றலை இலகுவாக விளங்கிக்கொண்டு செயற் படுவதற்கு எழுத்துக்களின் வடிவ அமைப்பினை விளங்கிக் கொள்வது அவசியமா கின்றது. வடிவ அமைப்பில் எழுத்துக்களை முன்கொண்டு செல்லும்போது அதில் பொதிந்துள்ள சிக்கல்நிலை களையப்படுகின்றது. இவ்வாறான முறையில் எழுத்துக் களைக் கற்பிக்கின்ற முறை முன்கொண்டு செல்லப்படுமாக இருந்தால் மாணவர்க ளிடையே மறைந்துள்ள கற்றல் இரசனையை வெளிக் கொணரமுடியும். இதற்காக ஆசிரியரின் திட்டமிட்டுக் கற்பித்தல் என்ற எண்ணக்கருவை வகுப்பறைச் சூழலுக்கு ஏற்ப முன்கொண்டுசெல்வது சிறப்பைத்தரும்.

*Note:*

*Note:*

*Note:*

*Note:*

*Note:*

# பழந்தமிழில் கல்விச் சிந்தனை

கலாநிதி முருகு தயாநிதி

பழந்தமிழில் உள்ள கல்விச் சிந்தனைக்கும் நவீன கல்விக்குமான இடை வெளியினைக் காட்டி, பண்டைய தமிழ்க் கல்வியில் இருந்தே நவீன கல்வி மூழ்கின்ற மையினை எடுத்துக் காட்டுக்களுடன் முன்வைக்கின்றார். இது ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். நவீன கல்விதான் எல்லாமே என்ற நிலையில் இருக்கின்ற கல்வி உலகுக்கு இவருடைய பண்டைக்கல்வி பற்றிய எண்ணக்கரு வியத்தகு செய்திகளை வழங்கி நிற்கின்றது. இவ்வாறான தேடலுக்கு இவர் தமிழ் பாடத்திலும் கல்விப் புலத்திலும் கொண்ட அதிக ஈடுபாடே காரணமாக அமைகின்றது என எண்ணுகின்றேன்.



முருகுதயாநிதி : இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை மாணி, முதுகலைமாணி, முதுதத்துவமாணிக் கற்கைகளை நிறைவு செய்து, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணி யினையும், திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாவை யும், தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியர் பயிற்சினையும் பெற்று, மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டத் தினையும் நிறைவு செய்துள்ளார். இவர் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்து பணியாற்றி தேசிய கல்வி நிறுவகத்தில் முதுநிலை விரிவுரை யாளராகப் பணிபுரிகின்றார். அந்நிறுவனத்தில் தமிழ்மொழி மற்றும் இரண்டாம் மொழி-தமிழ் பாடத்துக்கான செயற்றிட்டத் தலைவராகச் செயற்படுகின்றார். அம்பிலாந்துறை, படிப்பதற்கு, படுவான்கரைக்கு வந்துபார் தம்பி, கிராமியக் கலைகள் ஆகிய புத்தகங்களை வெளியிட்டதோடு பாடலாசிரியராக இருந்து சில பாடல்களையும் எழுதியுள்ளார். மேலும் கல்வி, நாட்டாரியல், பண்பாடு, வரலாறு முதலிய துறைகளில் ஈடுபாடுடைய இவர் சர்வதேச மாநாடுகளில் பல ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித் துள்ளதோடு, உள்ளூர் மலருக்குப் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சமூகத்தின்பால் சிறந்த ஈடுபாடுடைய இவர் பல அமைப்புக்களின் தலைவராகவும் முன்னோடியாகவும் செயற்படுகின்றார்.

விடயம்: கல்வியியல்

ISBN 978-955-35603-1-5

9 789553 560315

விலை ரூபா 400.00